Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 13/50
දිනමුරසු වාරමලර් செப்.16-22, 2001

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 425

## பாராளுமன்றப் போராட்டம் பந்து யார் கையில்?



# ஆன்மீகம்

## அர்த்தமற்ற ஆசைகள்



மனிதனை மூன்று ஆசைகள் ஆட்டிப் படைக்கின்றன. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை. இம் மூன்றும் உலகம் தொடங்கிய காலந் தொட்டு மனித வாழ்வைச் சஞ்சலப்படுத்துகின்றன. அளவற்ற ஆசை பேராசை எனப்படுகிறது.

மனித ஆசையே அவனது பிறப்புக்குக் காரணமாகின்றது. அவித்தை (அஞ்ஞானம்) காரணமாக அகந்தையும் அகந்தை காரணமாக அவாவும் ஏற்படுகிறது. அவாவினால் காண்கின்ற பொருட்களையெல்லாம் தனதாக்கிக் கொள்ளும் ஆசை வருகிறது. அந்த ஆசை நிறைவேறாவிடில் சினம் ஏற்படும். ஆசைகளையும் சினத்தையும் அடக்கியவனே பூரண சுகத்தை அனுபவிக்கிறான். அவித்தை அவா, அகந்தை, பேராசை சினம் இந்த ஐந்தும் குற்றங்கள்.

ஆசையை அடக்காவிடில் நாம் பெற்ற அறிவினால் என்ன பயன்? அதனை அடக்கமுடியாத நிலையில் அதுவே பேராசையாகின்றது. உடம்புக்கும் மனதிற்கும் ஊறு செய்வதைப் பிணி என்கிறோம். பேராசையும் ஒரு பிணிதான். மன அடக்கமும் இறைவணக்கமும் ஒருவனை பேராசை என்கின்ற பேராபத்திலிருந்து பாதுகாக்கிறது.

'ஆசைகளை அடக்கியவன் ஞானி ஆகின்றான்'

த. தவராசா-கோளாவில்-01.

## நிழலே இல்லாத அந்நாளில் நிழல் பெறுவோர்

நிழலே இல்லாத மறுமை நாளில் மஹ்ஸர் வழியில் மனிதர்கள் திண்டாடிக் கொண்டிருப்பார்கள். அந்நாளில் வானம் பழுக்கக் காய்ந்த செம்பைப் போல் ஆகிவிடும். மலைகள் பஞ்சைப் போல பறந்து விடும். அந்நாளில் சூரியன் படைப்பினங்களுக்கு மிக அருகில் கொண்டு வரப்படும்-அப்போது ஏழு வட்டத்தாருக்கு தனது பிரத்தியேகமான நிழலை அல்லாஹ் வழங்குகிறான்.

1. நீதி தவறாத தலைவர்
2. இறைவனை இபாதத் செய்வதில், வளர்ந்த வாலிபன்.
3. இறையில்லத்துடன் தொடர்புபட்ட மனிதன்
4. இறைவனுக்காக நேசம் கொண்டு அவனுக்காகவே பிரிந்த இரு மனிதர்கள்.
5. அழகும் அந்தஸ்தும் உள்ள ஒரு பெண் (துர் நடத்தைக்காக) அழைத்த போது, 'நான் இறைவனை அஞ்சுகிறேன்'. என்று கூறிய மனிதன்.
6. தனது வலக்கரம் கொடுப்பதை இடக்கரம் அறியாத வகையில் தர்மம் புரிந்த மனிதன்.
7. தனிமையில் அல்லாஹ்வை நினைத்து கண்ணீர் விடும் ஒரு மனிதன்.

(ஆதாரம்: புகாரி முஸ்லிம்)

பாத்திமா மஹ்திய்யா-ஏறாவூர்.

## அவரில் விசுவாசமுள்ளவர்களாவோம்

இயேசு செய்த முதல் புதுமை கானான் ஊரில் உள்ள ஒரு திருமண வீட்டில் நடந்ததை நாம் அறிவோம். இயேசு தன் தாயார் மரியாளுடன் அத்திருமண வீட்டிற்குச் சென்றிருந்தார். திருமண வீட்டில் விருந்தினர்களுக்கு கொடுப்பதற்கு திராட்சை ரசம் குறைந்து போகவே, வீட்டினர் தேவதாயாரிடம் இதைப்பற்றி கூறினர். தேவதாயார் அதை இயேசுவிடம் கூறவே இயேசு "இன்னும் என் நேரம் வரவில்லையே அவரிடம் விசுவாசமுள்ளவர்களாவோம்! என்றார்.

ஆனாலும் அவரால் புதுமை செய்ய முடியும் என்பதையறிந்திருந்த தேவதாயார் ஊழியர்களிடம் "அவர் சொல்லுகிற படி செய்யுங்கள் என்றார். இயேசு ஊழியர்களிடம் வெறுமனே இருந்த ஜாடிகளை தண்ணீரால் நிரப்புமாறு கூறவே, அவர்களும் அப்படியே செய்தனர். பின்னர் அவற்றை விருந்தினர்களுக்கு வழங்குமாறு கூறவே, அவர்களும் அப்படியே செய்தனர்.

முன்னர் பரிமாறிய திராட்சரசத்தைவிட இது மிகவும் சுவையாக இருப்பதையறிந்து இந்த திராட்சரசம் எப்படி வந்ததென்பதையும் அறிந்து ஆச்சரியப்பட்டனர் விருந்தினர். தன் தாயின் வேண்டுகோளுக்கிணங்கவே பிதாவின் வல்லமையோடு இயேசு இம்முதல் புதுமையைச் செய்தாரென்பது அனைவரும் அறிந்த விடயம்.

அன்பு உள்ளங்களே தேவதாயாரிடம் நாம் கேட்கும் உதவிகள் அனைத்தையும் நிச்சயம் இயேசு நமக்கு நிறைவாக அருள்வார். மரியாள் இயேசுவின் தாயார் மட்டுமல்ல? அனைத்து மக்களின் தாயாருமாவார்.

ஜோசப் அருள்சாமி-திகனை.

## கவிதைப் போட்டி இல.425



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 22.09.2001

கவிதைப் போட்டி இல.425
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.422

### பரிசுக்குரிய கவிதை

**ப(சி)லர்!**

தரையில் தள்ளி விட பலர்
உண்டு!
விழுந்தவுடன் தன் கரம்
கொடுத்து
தூக்கிவிட சிலரே உளர்

தெல்தெனிய-(இளந்தென்றல்)

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



**வாழ்த்துவேன்!**

உனக்கு உரிய வண்டியதனை
ஊனமுற்றோருக்கு கொடுத்தாயா!
உன் செயலை மெச்சுகின்றேன்!
உன்னை போலவே எல்லோரும்
இந்த உலகம் பூராவும் இருந்திட்டால்
உள்ளம் குளிர வாழ்த்துவேன்!

என். எம். மூர்த்தி, மாபேரியதென்ன

**வேகம்**

குழந்தாய்! நீ..
ஊர் சுற்றும் வண்டியிலே,
உன் அம்மா
உனக்கோ! நடைபயில
வேண்டும் என்று, துரித..
வேகம். இந்த வேகத்தில்..
செல்வாயானால்,
உலகம் உன் கையில்

கந்தசாமி ரவீந்திரன்-கரடியனாறு.

**விடவே மாட்டேன்**

அம்மா! நான் பிள்ளை
காலம் பூரா உன்னைத்தாங்குவேன்
உன் பணி செய்வதே என் கடமை
என் பணியினை இப்போதே
தொடங்கி விட்டேன்
உன்னை விழவே விடமாட்டேன்
கவலையை நீ விட்டு விடம்மா!

பி. மாணிக்கராசா-திருக்கோணமலை.

**சொல்லித்தராத செயல்**

மகனே தவள வைத்தேன்
மழலை பேச வைத்தேன்
நடையும் நான்தானடா
பயிற்று வித்தேன்
ஆனால் இப்படி
என்னையே கவிழ்க்க
சொல்லித்தரவில்லையடா!

க. சங்கீதா-தம்பிலுவில்-01

**தந்துவிட்டாளோ?**

சின்ன ஏஞ்ஜலே!
தந்துவிட்டாளோ உன்தாய் எயிட்சை?
அதுதான்
தள்ளிவிடப் போகிறாயோ-அவளை
எமனின் வாயிலில்?

ம. கிறிஷாந்தி-பாலையூற்று.

**சுமையாகும் வாழ்க்கை**

வாழ்க்கை வண்டி தள்ள
வழியற்ற வறிய தாய்க்கு
தோள் கொடுக்கத் தான் இந்த
நடை பயிலும் பருவத்தில்
சுமை தள்ளப் பயிற்சியோ?

எம். எச். யுனைதீன்-ஏறாவூர்-06.

**எடுப்பார் கைப்பிள்ளை**

எடுப்பர் கைப்பிள்ளையாக
கற்பனையிலுமே வேண்டாம்
சந்தேகமும்பயமும்
திசையுமறியாமல் செல்லலாமோ?
எனவே எவரேனும்
உடனெடுப்பாரோ கைப்பிள்ளையை?

ச. ஜெகதீஸ்வரன்-நாவலப்பிட்டி.

**உயர்ந்திடுவாய்**

பிஞ்சினிலே நீ மிஞ்சிவிட்டாய்
அஞ்சிடத் தேவையில்லை நீ
உயர்ந்திடுவாய்!

ரத்னா-கண்டி.

**சப்ரைஸ்**

சின்னவன் தான் என்று-என்னை
சிம்பிளா நினைத்திடாதீங்க!
சிங்கிளா நின்று உங்களை;
சப்ரைஸ்(ல்) ஆழ்த்திவிடுவேன்.
சங்கடத்திலும், மாட்டிவிடுவேன்.

திருமதி. தேவா மாதவன்-பண்டாரவளை.

**பார்த்திடுவேன்**

தத்தித் தத்தி நடைபயில
கட்டி முத்தம் தந்தவளின்
காலில் ஒரு காயம் வந்தால்
இப்படித்தான் பார்த்திடுவேன்.

எஸ். வசந்தன்-ஏறாவூர்-04.

## திரை உலகத் தொடர்புகள்?

எஸ்.டி.எஸ். தொடர் எழுதும் திரு. பத்மநாதன் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் காலமானபோது, அவருடன் இவர் கொண்டிருந்த நெருக்கமான உறவு பற்றி 418வது முரசில் அருமையான விவரம் எழுதியிருந்தார். சில வருடங்களுக்கு முன்னர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய அணைப்பில் சிக்கியிருந்த திரு. பத்மநாதன் அவர்களின் படத்தையும் முரசில் பார்த்தோம்.

தமிழகத் திரை உலகுடன் மிக நெருங்கிய தொடர்பினை திரு. பத்மநாதன் கொண்டிருந்தார் என்பது எம்போன்றோருக்குத் தெரியும். ஆகவே தனது கட்டுரைத் தொடரில் திரை உலகத் தாரகைகளுடன் திரு. பத்மநாதன் கொண்டிருந்த தொடர்புகளைப் பற்றியெல்லாம் எழுதினால் என் போன்ற வாசகர்களுக்கு நல்ல விருந்தாக இருக்கும் என்பதனால் திரை உலகத் தொடர்புகளையும் எஸ்.டி.எஸ். தொடரிலோ அல்லது வேறு ஒரு சந்தர்ப்பத்திலோ வாசகர்களுக்கு விரிகாகத் தரும் வண்ணம் கோரிக்கை விடுக்கிறோம். எதிர்பார்க்கிறோம்.

எம். கிருபைநாயகம், ரி. ஜெரோம், ரி. இராஜம், கிரான்.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

## வாசக[ர்] சாலை





என் ப்ரியமான முரசே!

நீ வாரந் தோறும் சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சிறந்தவை. உன் பரபரப்பான செயல்கள் எல்லாம் எம்மை வியக்க வைக்கின்றன. அந்த வகையில் சினிமா, சிறுகதை என்பவற்றோடு தேன்கிண்ணப் பகுதியும் நன்கமைந்து விளங்குகின்றது.

வாழ்க முரசே வளர்க வளர்கவே:

இ. ஜெசிமளா, கோணாவளை.

நீ.. சுமந்து வந்த முரசு இதழ் 419 சுவைபட இருந்தது. அதில்... எக்ஸ்ரே ரிப்போர்ட், அண்டை மண்டலத்தில்... அதிரடி அய்யாத்துரை அலசுவது இராஜதந்திரி, போன்றவைகள் சிறப்பாக இருந்தன.

நாம் அறிந்திராத பல தகவல்களை தகவல் பெட்டியில் பார்த்து ஆச்சரியப்பட வைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். 'தேன்கிண்ணம்' கொண்டு வந்த கவிதைகளில் 'மாப்பிள்ளைக் கேட்டுப்பார்' கவிதை சுவைபட இருந்தது. அதுபோல் சிறுகதைகளும் பிரமாதமாக இருந்தது.

முரசு இதழ் 420 சுமந்து வந்த அம்சங்களில் அடுத்தது என்ன? தலைப்பிலான எக்ஸ்ரே ரிப்போர்ட், 'தடுமாறும் தமிழ்க் கட்சிகள்' தலைப்பிலான-மதியின்-கட்டுரை, 'சிறுகதைகளான நினைப்பதொன்று, தப்பு-இதுவும் பெண்ணா? போன்றவைகள் பிரமாதமாக இருந்தன பாராட்டுக்கள். அதுபோல்... 'உங்கள் பக்கம்' என்ற அம்சம் முரசில் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது.. பாராட்டுக்கள்...

புதியகாத்தான்குடி-முஸம்மில்-குவைத்.

என் இனிய முரசே....! முரசு 422ல் வெளியான அனைத்து அம்சங்களும் சூப்பரோ சூப்பர். அதிலும் 'முஸ்லிம்கள் அணியும் தொப்பியுடன் தமிழ் இளைஞர்கள் கைது', 'எலும்புக்கூட்டின் கையில் துப்பாக்கி', 'சென்றல் கேம்ப் முகாம் மீது புலிகளின் அதிரடித்தாக்குதல்,' 'ஆழம் பார்க்கும் முயற்சிக்கு புலிகள் வைத்த ஆப்பு', 'அச்சுறுத்தலை அதிகரிக்கும் ஆயுதங்கள்', 'உறுப்பினர் இல்லாத அரசியல் கட்சி', 'டயானா தன் மகனுக்கு எழுதிய கடைசிக்கடிதம்' போன்ற செய்திகள் அசத்துகின்றன. முரசே...! சினிச் செய்திகள்கூட சிலிர்க்கவைக்கின்றன. கண்கவரும் முன் அட்டைப்படம் அருமையாக அமைகின்றன. கடுகு சிறிதானாலும் காரம் பெரிதென்பதை வித்தாரமாக முரசு வந்துணர்த்துகிறது... நவரசத் தகவல்களைத் திரட்டுவதில் உனக்கு நிகர் நீயே!

கே. அக்கீத்-செட்டிக்குளம்.

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

சென்ற வாரம் முரசில் இடம்பெற்ற அம்சங்கள் யாவும் அருமையிலும் அருமை. குறிப்பாக; 'நில்-கவனி-முன்னேறு' பகுதி மிக மிக அருமை. மேலும் கவிக்கோ அப்துல் ரகுமான் எழுதிய 'பாடும் முட்கள்' வித்தியாச விருந்தாக அமைந்திருந்தது. மற்றும், வாக்குறுதி, அன்புக்கு அளவுண்டு. பொருத்தம் ஆகிய சிறுகதைகள் அன்றாட குடும்ப வாழ்க்கையில் நடக்கும் யதார்த்தமான சம்பவங்களை சித்தரித்து காட்டியது.

நன்றி

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன்-மட்டக்களப்பு.

# உங்கள் பக்கம்

## அழித்திடுவோம்... அளித்திடுவோம்!

"தனியொருவனுக்குணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்!" என்று மகாகவி பாரதியார் பாடியதுதான் சரியானது. உணவு இல்லாமையால் துயருறும் மக்களுக்கு உணவை அளித்திடுவோம் என்று அவர் கூறியிருக்கமாட்டார்.

பாரதியாரின் கவிதைகள் பல தீச்சுவாலை வீதம் சொற்களைக் கொண்டவை. அவருடைய பாப்பாப்பாடல்களிலேயே தீமைகளைக் கண்டால், தயக்கம் காட்டாமல் தீமையை எதிர்த்து ஒழித்துவிடும்படி கூறுகிறார்.

நல்லனவற்றையெல்லாம் நல்லபடி வரவேற்கும் பாரதியார், கெட்டவை அனைத்தையும் நிர்மூலமாக்கும்படிதான் கூறுகிறார். எனவே கோப்பாயைச் சேர்ந்த அ. சுப்பிரமணியம் அவர்கள் முரசு 421ல் உங்கள் பக்கத்தில் தெரிவித்திருப்பது போல் இல்லாதோருக்கு உணவினை அளித்துவிடுவோம் என்று கூறவில்லை.

வள்ளுவப் பெருந்தகையே 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்' என்று பிச்சை எடுத்துத்தான் உயிர்வாழ வேண்டிய நிலை ஒருவனுக்கு ஏற்படுமானால், உலகினை உருவாக்கிய இறைவனே அழிந்தொழிந்து போகட்டும் என்று கடவுளையே சாடியிருக்கிறாரே! கொல்லாமையை வலியுறுத்திய வள்ளுவரே உலகைப்படைத்த கடவுளுக்கே சவால் விடும்போது-சுப்பிரமணிய பாரதியார் ஏன் ஜகத்தினை அழிக்க கங்கணம் கட்ட முடியாது?

எத்தனையோ பழம் இலக்கியங்கள். இதிகாசங்கள், புராணங்கள், திருப்பதிகங்களியெல்லாம், இடைக்கிடையே பலர் புகுந்து கருத்து மாற்றங்களை, தங்கள் புத்திக்கு ஏற்ற மாதிரி மாற்றியிருக்கிறார்கள். ஆனால் பாரதியாரைப் பொறுத்த மட்டில், அவர் மிக அண்மித்த காலம் வரை வாழ்ந்தவர். அவருடைய காலத்தவர் பலர் சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை வாழ்ந்திருக்கிறார்கள். எனவே பாரதியாருடைய ஆக்கங்களில் இடைச்செருகல்களைப் புகுத்தவோ திருத்தவோ எவரும் துணிய மாட்டார்கள்.

'தனி ஒருவனுக்குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்!' என்பதே சரியானதாகும்!

பா. பீதாம்பரம்-கொழும்பு-15.

## எதிர்த்து நின்று என்ன பயன்?

இலங்கை தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எப்போதும் பஸ்ஸைத் தவற விட்டவர்களாகவே பரிதாபத்துக்குரிய நிலையில் இருந்து வருகின்றனர். இதே நிலை நீடித்துக் கொண்டு வருமானால் இறுதியில் தமிழினம் முற்று முழுதாக அழிந்து போகவேண்டிய நிலையேற்படும்.

ஆட்சிக்கு வருபவர்கள் எப்போதும் தங்களைச் சார்ந்து நிற்பவர்களையே முதலில் கவனிப்பார்கள். எதிரணியில் இருப்பவர்களுக்கு இரண்டாந்தர கவனிப்பே கிடைத்துவரும். "எங்களுக்குரிய உரிமைகளைத் தந்தாக வேண்டும்" என்று கோஷமிட்டால் ஆளும் வர்க்கத்தின் வெறுப்புணர்ச்சியையே பெற வேண்டியிருக்கும்.

சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே ஆட்சியிலிருக்கும் அதிகார வர்க்கத்துடன் போரிட்ட வண்ணமே தமிழ்த் தலைவர்கள் இருந்து வந்துள்ளனர். அப்பேர்ப்பட்டவர்களால் எதையாவது சாதிக்க முடிந்ததா? இல்லவே இல்லை. அதேவேளை அரசாங்கத்துடன் சார்ந்து நின்ற தமிழ்த் தலைவர்களும் முஸ்லிம் தலைவர்களும் பல சாதகமான நிலைப்பாடுகளை ஏற்படுத்தி இருக்கின்றனர்.

முதலாவது பாராளுமன்றத்தில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு. சி. சிற்றம்பலம், திரு. சி. சுந்தரலிங்கம் போன்ற தலைவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டனர். இதனால் தமிழ் மக்கள் போதுமானளவு பலனடைந்தார்கள் என்பதை மறுக்க முடியுமா?

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலை, பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலை மற்றும் மட்டக்களப்பில் வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை ஆகியவற்றை அமரர் பொன்னம்பலம் உருவாக்கினார்.

பிற்பட்ட காலங்களில் ஆட்சிபீடம் ஏறுவோருடன் போர் தொடுத்த வண்ணமே தமிழர்கள் இருந்தார்கள். இதன் பயனாக தமிழர் வாழும் பிரதேசங்கள் இன்று சுடுகாடாகக் காட்சியளிக்கின்றன.

உரிமைகளைப் பெற்றெடுக்க போராடத்தான் வேண்டும். ஆனால் ஏனையோருடைய வெறுப்பையும் அதிருப்தியையும் சம்பாதித்துக் கொண்டு நாட்டு மக்கள் அனைவரினதும் வாழ்வையும் நிலைகுலைய வைத்து விடுவதனால் தமிழர்களுடைய வாழ்வு அஸ்தமித்துப் போவதைத் தவிர, வேறு எந்த வழியும் கிட்டப் போவதில்லை.

தி. ஞானசூரியம்-தம்பிலுவில்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

# நன்னடத்தை அரசாங்க நிபந்தனைகளை அமுல் செய்வது குறித்து

## அரசு–ஜே.வி.பி. பேச்சு வார்த்தை: கண்காணிப்புக் குழு நியமிக்கவும் யோசனை!

**பொ**துஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதற்காக ஜே.வி.பி. முன்வைத்திருக்கும் நிபந்தனைகளை அமுல்படுத்துவது தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடைபெறவிருக்கின்றன. கடந்த திங்கட்கிழமை நடைபெற ஏற்பாடாகியிருந்த இந்த பேச்சுவார்த்தை அமைச்சரவை நியமனத்தின் பின்னர் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது நன்னடத்தை அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அவதானிக்கும் குழு ஒன்றும் நியமிக்கப்படவுள்ளது. அத்துடன் அமைச்சுக்களினதும் அரசாங்க திணைக்களங்களினதும் செயற்பாடுகள் குறித்தும் கண்காணிக்கும் விசேட குழுவொன்றை அமைப்பது தொடர்பாகவும் ஆராயப்படவிருக்கிறது.

இதேவேளை புதன்கிழமை புதிய அமைச்சரவை குறித்த இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவிருப்பதாக தெரியவருகிறது. மாவட்ட ரீதியிலும், கட்சிகளின் முழுமையான பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலும் புதிய அமைச்சரவை நியமனம் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை இழந்திருந்த அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை 10 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் மக்கள் விடுதலை முன்னணி கடந்த வாரம் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் செய்து கொண்டது.

இந்த ஒப்பந்தத்தில் உள்ள பிரதான நிபந்தனைகளில் ஒன்றான 43 பேர் கொண்ட அமைச்சரவை 20 ஆக குறைப்பதற்கு விதிக்கப்பட்ட காலக்கெடு 12 திகதியாகும்.

இதற்கிடையில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள அதிருப்தியாளர்களாக கருதப்படும் அமைச்சர்களான எஸ்.பி. திசாநாயக்கா, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே ஆகியோரும் புதிய அமைச்சரவையில் இடம் பெறலாம் என அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவரகிறது. இந்த அமைச்சர்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் கருத்தொருமிப்பை ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## போர் நிறுத்தம் குறித்து அரசாங்கத்தின் சமிக்ஞை!

**ஒ**ரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை பிரகடனப்படுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அறிவித்திருக்கிறார்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பரஸ்பரம் இனங்கிக் கொண்ட யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்துவதற்கே அரசாங்கம் முன்னுரிமை கொடுப்பதாகவும் ஆயினும் கூட ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து தாங்கள் ஆலோசிப்பதாகவும் அரச தொலைக்காட்சிக்கு கடந்த சனிக்கிழமை இரவு அளித்த பேட்டியில் அமைச்சர் கதிர்காமர் கூறியுள்ளார்.

சமாதான நடவடிக்கைகளில் தற்போது ஏற்பட்டிருக்கும் மந்தநிலையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வழிவகை குறித்து அரசு ஆராய்ந்து வருவதாக அமைச்சர் கதிர்காமர் பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

சமாதான நடவடிக்கையை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லலாம். அதற்குரிய பயனுள்ள வழிவகை என்ன? என்பன தொடர்பாக நோர்வே அரசாங்கத்துடன் கிரமமாக கலந்தாலோசனைகளை மேற்கொண்டிருப்பதாகவும் கதிர்காமர் கூறியுள்ளார்.

கட்டுநாயக்கா விமான நிலையம், விமானப்படைத்தளம் ஆகியவற்றின் மீதான தாக்குதலின்பின்னர் நோர்வே அனுசரணையுடனான சமாதான நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன.

பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னர் தமது அமைப்பின் மீதான தடையை நீக்க வேண்டுமென கடந்த மே மாதம் புலிகள் அறிவித்திருந்தனர். ஆயினும் பரஸ்பர இணக்கப்பாட்டுடன் கூடிய யுத்த நிறுத்தம் உள்ளடங்கலாகப் பேச்சு வார்த்தைக்கு முன்னர் இணக்கப்பாடொன்றை எட்டுவதற்கான நிலைக்கு இரு தரப்பினரும் இறங்கி வந்திருந்ததாக கதிர்காமர் கூறியுள்ளார். ஆனால் அரசு புலிகள் மீதான தடை தொடர்பாக சாதகமான நிலைப்பாட்டை எடுக்குமா? என்பது குறித்து அவர் எதனையும் குறிப்பிட்டிருக்கவில்லை.

## அகதிக்குடியிருப்புகள் தீவைக்கப்பட்ட செய்தி இருட்டடிப்பு செய்யப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலை!

**ம**ட்டக்களப்பு-கருவேப்பங்கேணியில் அகதி மக்கள் தங்கியிருந்த 38 குடியிருப்புக்கள் ஆயுதக் கும்பலொன்றினால் தீக்கிரையாக்கப்பட்டன.

ஓட்டோவண்டி, மோட்டார் சைக்கிள்கள், உழவு இயந்திரங்கள் என்பனவற்றில் ஆயுதங்களுடன் பட்டப்பகலில் வந்திறங்கிய கோஷ்டியொன்று சினிமா பாணியில் அடாவடித்தனம் புரிந்து விட்டு மாயமாய் மறைந்து விட்டது.

அகதிக் குடும்பங்களின் குடிசைகளிலிருந்த மூட்டை முடிச்சுகள், சமைத்து வைத்திருந்த உணவுகள் என்பனவற்றையும் தூக்கி வீசிவிட்டு குடிசைகளுக்கும் தீவைத்துள்ளனர்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களின் போது இடம் பெயர்ந்து வந்த அகதிக் குடும்பங்களே கருவேப்பங்கேணியிலுள்ள காணியொன்றில் குடியமர்ந்துள்ளார்கள்.

ஆனால் இந்தக் குடும்பங்கள் தனக்குரிமையான காணியில் அத்துமீறிக் குடியேறியிருப்பதாக தனியார் ஒருவர் குற்றஞ்சாட்டி வந்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, கடந்த வாரம் இடம்பெற்ற இந்த சம்பவம் வெளியில் வராமல் தடுக்க பிரதேச செய்தியாளர்கள் சிலர் திட்டமிட்டு செயல்பட்டிருப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பில் சில காலமாக இவ்வாறான பல சம்பவங்கள் வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்யப்படுவதாகவும் தனிப்பட்ட இலாபங்களுக்காக பொறுப்பு வாய்ந்த செய்தியாளர்கள் இவ்வாறு நடந்து கொள்வது வேதனை தரும் செயல் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

## வாரத்தில் 6 நாட்கள் பார்வையிடலாம்

**ப**யங்கரவாதத் தடைச்சட்டம், அவசர காலச் சட்டம் என்பவற்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை இனிமேல் உறவினர்கள் ஞாயிறு தவிர்ந்த நாட்களில் (போயாதினம் உட்பட) பொலிஸாரின் அனுமதிக்கடிதம் இன்றிப் பார்வையிடலாம் என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் உபாலி சமரவீர அறிவித்துள்ளார்.

இது தொடர்பான கடிதங்களை அவர் சகல சிறைச்சாலைப் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ளார்.

இதுவரை காலமும் இக்கைதிகளை உறவினர்கள் வாரத்தில் ஒரு நாள் மட்டுமே அதுவும் பொலிஸ் அனுமதிக் கடிதத்துடன் சென்று பார்வையிட்டு வந்தனர்.

சிறைச்சாலை சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமையவே இந்தப் புதிய நடைமுறை அமுல் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். ●

## கஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதியில் விமானப்படை தாக்குதல்

**அ**ம்பாறை கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்திய காரைதீவு விசேட அதிரடிப்படையினர், அங்கிருந்து பெருமளவிலான பொருட்களை மீட்டெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பகுதியில் அமைந்திருந்த 'ராதன்' முகாமையே தாம் தாக்கியழித்ததாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். இம்முகாமிலிருந்த விடுதலைப் புலிகள், தங்களின் தாக்குதலையடுத்துத் தப்பிச் சென்றுள்ளதாகவும், இங்கிருந்து ரி.56 துப்பாக்கிகள் இரண்டுஇதற்கான ரவைகள் மற்றும் பஜிரோ வாகனம் ஒன்று, 3 கண்ணாடி இழைப்படகுகள், 3 மோட்டார் சைக்கிள்கள், 6 சைக்கிள்கள் ஆகியவற்றைத் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த முகாம் இப்பகுதியில் மிக நீண்ட நாட்களாக இயங்கிவந்ததாகவும் படையினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை வவுனியா மருதமடுப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் வீதிக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் மற்றம் சிறியரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலின்போது ஒரு படைவீரர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், மற்றையவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு மணிநேரம் இரு சாராருக்கும் இடையே துப்பாக்கிச் சமர் இடம்பெற்றதாக படையினர் தெரிவிக்கின்றனர். ●

## மேலதிக சேவை

**ல**ங்க முதித்த கப்பல் செப்டம்பர் 13 ஆம் திகதி முதல் விசேட சேவைகளை மேற்கொள்ளுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் காத்திருக்கும் பயணிகள் நலன் கருதியே இந்த கப்பல் சேவைக்கு ஏற்பாட்டை அமைச்சர் செய்துள்ளார்.

இச்சேவை நடத்தப்படுவதன் மூலம் யாழ்.குடாநாட்டுக்கான போக்குவரத்தில் நிலவும் தாமத நிலை நீக்கப்படும் எனவும் பயணிகள் காத்து நிற்கும் நிலை தவிர்க்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## மூதூர் முஸ்லிம்கள் ஹர்த்தால்

**தி**ருக்கோணமலை மூதூர் பிரதேசத்தில் கடந்த வாரம் பூரண ஹர்த்தால் கடையடைப்பு சுவரொட்டிப் போராட்டம் என்பன இடம் பெற்றன.

மூதூர் முஸ்லிம்கள்மீது புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்டுவரும் கெடுபிடிகள், நெருக்கடிகள் என்பனவற்றைக் கண்டித்தும் இந்த செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனக் கோரியுமே இந்த ஹர்த்தால் இடம் பெற்றது.

மூதூர்ப் பகுதி முஸ்லிம்களைக் கடத்திச் சென்று நீண்ட நாட்கள் தடுத்து வைத்திருந்து கப்பம் பெறுதல், கால்நடைகள், வாகனங்கள், மீன்பிடிப்படகுகள் என்பனவற்றைக் கடத்துதல், மின்சார விநியோகத்தைச் சீர்குலைத்தல், பாதுகாப்புப் படையினருக்கெதிரான நடவடிக்கைகளுக்கு உதவுமாறு முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தல் போன்ற நடவடிக்கைகள் அண்மைக் காலமாக அதிகரித்திருப்பதாலேயே பொது மக்கள் புலிகளுக்கெதிரான இந்த ஹர்த்தாலை ஏற்பாடு செய்திருந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டு நகரில் கடும் பாதுகாப்பு வாவியில் மீன்பிடிக்கத் தடை

**ம**ட்டக்களப்பு நகரைக் கைப்பற்றப் போவதாகவும் அதனால் எச்சரிக்கையாய் இருக்குமாறும் புலிகளால் பொதுமக்களுக்கு விடுக்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து பாதுகாப்புத் தரப்பினர் உஷாரடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு நகருக்குள் பிரவேசிப்போர் நகரிலிருந்து வெளிச் செல்வோர் மிகவும் தீவிரமாகச் சோதிக்கப்படுகிறார்கள்.

பொலிஸ் மற்றும் இராணுவ நிலைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு-புளியந்தீவு நகர்ப் பாதுகாப்பு 24 மணி நேர கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இராணுவத் தலைமையகம், விமான நிலையம், சிறைச்சாலை, பொலிஸ் தலைமையகம் என்பனவற்றைக் கொண்டுள்ள மட்டக்களப்பு-புளியந்தீவைச் சூழவுள்ள வாவியிலும் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாவியில் இரவு நேர மீன்பிடிக்கு தடை கொண்டுவரப்பட்டிருக்கிறது. பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை மீறி மட்டக்களப்பு வாவியில் நடமாடுவோர் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கள் முதல் வாவி மீன்பிடியில் ஈடுபடுவதில் கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. ●

## 'யாழ். குடாநாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் போக்குவரத்துப் பிரச்சனை சீராக வேண்டும்' ~ உலக வங்கி

**யா**ழ்.குடாநாட்டுக்கான போக்குவரத்து பிரச்சனையை தீர்க்க வேண்டிய தன் அவசியத்தை அங்கு சென்று திரும்பிய உலக வங்கி அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயத்தினால் முன்னர் முன்னெடுக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் உலக வங்கியின் உதவியுடன் குடாநாட்டின் மீண்டும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள உலக வங்கியின் தலைமையலுவலகத்தில் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உலக வங்கியின் இலங்கைக்கான இயக்குநர் மரியானா டொடொரோவா இதனைத் தெரிவித்தார்.

குடாநாட்டிற்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக இலங்கை உலக நாடுகளிடம் கோரியுள்ள நிதியுதவி கிடைக்க வேண்டுமெனில் குடாநாட்டிற்கான போக்கு வரத்து நெருக்கடிகளுக்குத் தீர்வு காணப்படுவது அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

குடாநாட்டில் சிறிய நீர்ப்பாசன திட்டமொன்றை உலக வங்கி முன்னெடுக்கவுள்ளது. குடாநாட்டின் கல்வித்துறையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளையும், சுகாதாரத்துறையின் முன்னேற்றத்திற்காக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கு அலுவலகங்களை அமைக்கவுள்ளோம். இதற்காகக் கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு வருவதற்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டியுள்ளது. இராணுவத்திடம் இது குறித்து பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளோம்.

குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் நடவடிக்கைகளை தவிர்க்க வேண்டும் என்ற உணர்வு பாதுகாப்புப் படையினர் மத்தியில் அதிகரித்து வருகின்றது.

குடாநாட்டின் அபிவிருத்திக்கு உலக நாடுகள் உதவ வேண்டும் என்ற அரசாங்கத்தின் கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்க வேண்டுமெனில், குடாநாட்டிற்கான போக்குவரத்தில் காணப்படும் முட்டுக்கட்டைகள் நீக்கப்பட வேண்டும்.

தற்போது திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் கடல் மூலம் போக்குவரத்து மேற்கொள்வதற்கு 18 மணித்தியாலங்களும், கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு ஆறு மணித்தியாலங்களும் பிடிக்கின்றது. இது தவிர வழிநெடுக பாதுகாப்புச் சோதனைகளையும் சந்திக்க வேண்டியுள்ளது.

இதற்கான தீர்வு காணப்படாவிடில் குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு தேவையான தொழில்நுட்ப திறனையும், பொருட்களையும் கொண்டு செல்வது கடினமாகிவிடும்.

குடாநாட்டின் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்துடனும், ஏனைய நிதியமைப்புகளுடனும் சேர்ந்து ஒத்தழைக்க உலக வங்கி தயாராகவுள்ளது. இது சமாதானத்தையும், கருத்தொருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கு மிக முக்கியமான நடவடிக்கை என அது கருதுகின்றது.

## எலும்புக்கூடு மீட்பு

**யா**ழ்ப்பாண போதனாவைத்திய சாலையில் நேற்று மண்டை ஓடுகளும் மனித எலும்புக் கூடுகளும் கண்டெடுக்கப்பட்டன. நவீன பிரேத அறையொன்றை போதனா வைத்தியசாலை வளவுக்குள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொண்ட போதே இந்த மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

போதனா வைத்தியசாலையின் தற்போதைய பிரேத அறைக்கு அருகாமையில், அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதே இந்த எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன.

இதனால் கட்டட நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டன.

## படையினருக்கெனக்கூறி போலி ஆசாமிகள் நிதி வசூல்

**ம**காவலி விளையாட்டுக் கழகம் என்ற பெயரில் 50 ரூபா பெறுமதியான டிக்கட்டுகளை அச்சடித்து போரில் ஊனமுற்ற படையினருக்கு நிதி சேகரித்த ஒரு குழுவினரை வாழைச்சேனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

5 பேர் கொண்ட இந்தக் குழுவினர் வாழைச்சேனை ஓட்டமாவடிப் பகுதிகளிலுள்ள வர்த்தகர்களிடம் தம்மை இராணுவ வீரர்கள் எனக் கூறிக் கொண்டே திருட்டுத்தனமாக நிதி வசூலிப்பில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 09ம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கைதாகியுள்ள 5 பேரும் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறியப்பட்டுள்ளது.

## பாடசாலைகளில் ஆட்சேர்ப்புப் பிரசாரம்

**ம**ட்டக்களப்பில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்து தலா ஒருவரேனும் போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்று புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஏற்கெனவே தமது கட்டுப்பாட்டிலுள்ள வாகரைப் பகுதியிலுள்ள பொது மக்கள் சகலருக்கும் போர்ப் பயிற்சி வழங்கி வருவதோடு, அப்பகுதியிலிருந்த பல இளைஞர் யுவதிகளும் புலிகளின் நிரந்தர போராட்ட அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இப்பொழுது மட்டக்களப்பு-பதுளை வீதிப் பகுதியிலும் கட்டாய ஆட் திரட்டலில் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என்று பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள். பாடசாலைகளிலும் புலிகளின் பிரசார ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்திருப்பதாகவும் அதனால் பல குடும்பங்கள் மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பாடசாலை செல்லும் பல சிறுவர்கள் காணாமல் போயிருப்பதாகவும் பெற்றோர்கள் அவர்களைச் சென்று பார்வையிடவோ சிறுவர்கள் பெற்றோருடன் தொடர்பு கொள்ளவோ அனுமதியளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு வரட்சி நிவாரணம் மறுப்பு!

**மொ**னறாகலை மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு மொனறாகலை அரசாங்க அதிபர் மறுப்பு தெரிவித்துள்ளார். இதனையடுத்து மேலதிக நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்குமாறு பல தொழிலாளர் அமைப்புக்கள் சமூக சேவைகள் அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவைக் கேட்டுக்கொண்டுள்ளது.

மொனறாகலை மாவட்டத்திலுள்ள வைகும்புற, பிபில, குமாரவத்தை ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வரட்சியால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

“தோட்டத் தொழிலாளர்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்குமாறு தான் பணிக்கப்படவில்லை என பிரதேச செயலாளர் தெரிவித்திருக்கிறார். ●

# முரசம்

## தவறவிடப்பட்ட மற்றொரு சந்தர்ப்பம்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து அதன்மீது அழுத்தத்தை பிரயோகிக்கக் கிடைத்த மற்றொரு சந்தர்ப்பத்தையும் தமிழ்க்கட்சிகள் தவறவிட்டுள்ளன.

அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை இழந்து ஆட்சி கவிழ்ப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கிய சமயத்தில் தமது பேரம் பேசும் பலத்தை பிரயோகிக்க தமிழ்க்கட்சிகள் தவறிவிட்டன.

ஜே.வி.பி. தனது பத்து பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு ஜனநாயக சீர்த்திருத்தங்கள் அடங்கிய கடுமையான நிபந்தனைகளை அரசாங்கத்துக்கு முன்வைத்திருக்கிறது.

இப்போது பொதுஜன ஐக்கிய முன்னனிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான கூட்டமைப்பை விமர்சிக்கும் தமிழ்கட்சிகள், தமது ஒன்றுகுவிந்த பலத்தின் மூலமாக மேலும் சாதகமான பல விடயங்களை வென்றிருக்க முடியும்!

ஆனால் அந்தளவு அரசியல் தூரநோக்கு இந்தத் தமிழ்க்கட்சிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

பாராளுமன்றத்தில் 20க்கும் மேற்பட்ட தமிழ் உறுப்பினர்கள் இருக்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் நு ஆ என்பவற்றையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை முப்பதை எட்டிப்பிடிக்கும்.

இவர்கள் அனைவரும் ஒருமித்த கருத்துடன் அரசாங்கத்தின் மீது அழுத்தத்தை பிரயோகித்து அதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தால் இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் பல சாதகமான படிகளை கடக்க வழியேற்படுத்தியிருக்கலாம்.

இதை விடுத்து 'எதற்கெடுத்தாலும் எதிர்ப்பு' என்ற முட்டாள்தனமான அரசியலில் ஈடுபட்டதால் ஏற்பட்ட இடைவெளியை ஜே.வி.பி. மிகவும் சாதுர்யமாக பயன்படுத்திக் கொண்டது.

முப்பது தமிழ் பேசும் உறுப்பினர்களால் சாதிக்க முடியாத அரசியல் பேரத்தில் ஜே.வி.பி. இறங்கியிருக்கிறது. இப்போது இந்த தமிழ்க்கட்சிகள் ஜே.வி.பி.யை திட்டத் திரிகின்றன.

ஆனால் இதே தமிழ்க் கட்சித் தலைவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஐ.தே.க. நடத்திய மக்கள் போராட்டங்களில் ஜே.வி.பி.யுடன் மாத்திரமன்றி சிஹல உறுமயவுடன் கூட ஒரே மேடையில் இருந்து வீர வசனம் பேசினார்கள். அப்போது இவர்களுக்கு இனிப்பாக இருந்த ஜே.வி.பி.யின் செயற்பாடுகள் இப்போது கசக்க ஆரம்பித்துள்ளன.

இது பத்தாம் பசளித்தனமான சந்தர்ப்ப வாதம் மட்டுமல்ல தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் தூரநோக்கின்மைக்கான மற்றொரு உதாரணமும்தான்!

கிடைக்கும் சந்தர்ப்பங்களை தவற விடுதலென்பது தமிழ்க்கட்சிகளை பொறுத்தவரையில் புதிய விடயமல்ல. ஆனால் எதிர்ப்பதைத்தவிர வேறெதனையும் செய்யாத இவர்களின் அரசியலை தொடர்ந்தும் சகிக்கும் நிலையில் தமிழ் மக்கள் இல்லை!

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பாராளுமன்றப் போராட்டம் பந்து யார் கையில்?

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி.யும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாள் தொடக்கம் பாராளுமன்ற ஆசனங்களில் தலை கணக்கெடுக்கும் வேலையை ஐக்கிய தேசியக்கட்சி மீண்டும் ஆரம்பித்துள்ளது.

பாராளுமன்றத்தில் தமக்கு சாதகமான சூழ்நிலை தோன்றும் வரை நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிப்பதில்லை என்ற முடிவோடு காத்திருக்கும் ஐ.தே.க. இப்போது வெறுமனே பார்வையாளனாக மட்டும்தான் அமர்ந்துள்ளது. ஜே.வி.பி.யின் முடிவினால் எதிர்க்கட்சிகளின் ஆட்சிக்கவிழ்ப்புத்திட்டம் கடைசி நேரத்தில் குழம்பிப்போனது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் நிலவும் உட்கட்சிப்பூசல்களை ஐ.தே.க. பெருமளவு நம்பியிருந்தது எந்தளவுக்கெனில் நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது ஜே.வி.பி. வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் விட்டால் கூட தம்மால் அரசாங்கத்தை கவிழ்க்க முடியும் என்று ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை கொண்டிருந்தார். இப்போது ஜே.வி.பி.யை சேர்த்து ஆளுந்தரப்பில் 119 பேர் இருக்கிறார்கள். சிஹல உறுமய கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவுக் கட்சி என்பதால் அரச தரப்பில் 120 பேர் இருப்பதாக கருத முடியும்.

225 பேர் கொண்ட பாராளுமன்றத்தில் 113 பேரை திரட்டும் முயற்சியின் இரண்டாம் கட்டத்தை ஐ.தே.க. ஆரம்பித்துள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் உள்ள சில அதிருப்தியாளர்களை தம்பக்கம் இழுக்கலாம் என்று எதிர்க்கட்சி கணக்குப் போட்டிருக்கிறது. குறிப்பாக ஜே.வி.பி.யின் பிரதான நிபந்தனைகளில் ஒன்றான அமைச்சரவையை 20 ஆகக் குறைக்கும் அறிவிப்பு வெளியானதும் தமக்கு சாதகமான நிலை தோன்றலாம் என்று ரணில் எதிர்ப்பார்ப்பதாகத் தெரிகிறது. ஆனால் 'அமைச்சரவையில் இருந்து நீக்கப்படும் எவரும் அரசாங்கத்தை விட்டு விலகப்போவதில்லை' என்று பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் உறுதியாகத் தெரிவிக்கின்றன.



எவ்வாறெனினும் உடனடியாக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வந்து அரசாங்கத்தை வீழ்த்தும் முயற்சியை எதிர்க்கட்சிகள் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக தெரிகிறது. ரவூப் ஹகீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அரசாங்கத்தை விட்டு விலகியதும் ஆரம்பமான அரசியல் ஸ்திரமின்மையை மையமாக வைத்து, நடத்தப்பட்ட அதிகாரப் போராட்டம் இடைவெளி ஒன்றை சந்தித்துள்ளது என்றுதான் கூற வேண்டும். ஏனெனில் பொ.ஐ.மு., ஜே.வி.பி. கூட்டு உடைந்து எந்த நேரத்திலும் தேர்தல் ஒன்று நடைபெறலாம் என்பதை சகல அரசியல் கட்சிகளுமே எதிர்பார்க்கின்றன. தங்கள் மூலமாக கால அவகாசத்தைப் பெற்று பாராளுமன்றம் கலைக்கப்படக்கூடும் என்று ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ச பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார். அப்படியிருந்தும் ஜே.வி.பி. பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிக்க ஏன் முன் வந்தது என்ற கேள்விக்கான பதில் வெளிப்படையானது.

1990ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் ஜே.வி.பி.யின் இரண்டாவது ஆயுதக்கிளர்ச்சியின்போது, அந்தக்கட்சியை பூண்டோடு அழிக்கும் நோக்குடன் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களை ஐ.தே.க. அரசாங்கம் கொன்று குவித்தது. இவ்வாறு கொல்லப்பட்ட இளைஞர்களின் குடும்பத்தினரது வாக்குகளிலேயே ஜே.வி.பி.யின் பலம் பெருமளவு தங்கியுள்ளது. கடந்த பொதுத் தேர்தலின் போது, இந்தக் கட்சிக்கு கிடைத்த 5 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளில் இவ்வாறானவர்களின் வாக்குகள்தான் அதிகம். எனவே ஆயிரக்கணக்கான உறுப்பினர்களின் சாவுக்குக் காரணமாகவிருந்த ஐ.தே.க.வை ஒரு நாளேனும் ஆட்சி பீடத்துக்கு ஏற்றி வைக்க ஜே.வி.பி துணை நிற்காது என்பதை எதிர்பார்த்தே ஆகவேண்டும். இத்தகையதொரு பின்னணியில் ஜே.வி.பி.யின் உதவியை பெற்று ஆட்சிக்கு வர ஐ.தே.க. போடும் கணக்குகள் முட்டாள்தனமானவை.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கி விட்டு தேர்தலுக்கு முகம் கொடுப்பதிலும் பார்க்க பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் தேர்தலை சந்திப்பது ஜே.வி.பி.யை பொறுத்தவரையில் சாதகமானது. இதனை உணர்ந்த மக்கள் விடுதலை முன்னணி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கான தனது ஆதரவை வெறுமனேயன்றி பலம்வாய்ந்த நிபந்தனைகளுடனேயே வழங்க முன்வந்திருக்கிறது.

ஜே.வி.பி. தமது மாக்சிச சித்தாந்தங்களை அடையாளப்படுத்தும் கவர்ச்சிகரமான நிபந்தனைகள் விவசாயக் கடன்களை இரத்துச் செய்தல், தனிமயமாக்களை குறிப்பிட்ட காலத்துக்கு இடை நிறுத்தி வைத்தல் என்பவற்றோடு சேர்த்து தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சில ஜனநாயக சீர்திருத்த கோரிக்கைகள் சிலதையும் முன்வைத்துள்ளது.

ஐந்து ஆணைக்குழுக்களை நிறுவுவது இதிலுள்ள முக்கியமான விடயம். 2000 பொதுத் தேர்தலில் இருந்து ஐ.தே.க.வின் பிரதான வாக்குறுதியாக நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கும் விடயமே இருந்து வந்தது. பல சிவில் அமைப்புக்களும் இந்த ஆணைக்குழு விவகாரத்தை வலியுறுத்தின. அரசியலமைப்பின் 17 வது திருத்தச் சட்ட மூலம் ஊடாக சுயாதீன தேர்தல், பொலிஸ், பொதுச் சேவை, நீதிச்சேவை ஆணைக்குழுக்களை நிறுவ தாம் உத்தேசித்திருப்பதாக ஐ.தே.க. கூறிவந்தது. இதற்கு மேலதிகமாக சுயாதீன ஊடக ஆணைக்குழு என்ற ஒன்றை ஜே.வி.பி. சேர்த்துக்கொண்டது. இறுதியில் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பினது பொதுவான வேலைத்திட்டத்துக்குள் 17 வது திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது.

உண்மையில் ரவூப் ஹகீம் தலைமையிலான குழுவினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முறுகல் நிலை தோன்ற நீண்டகால அடிப்படையில் வழி வகுத்த ஒரு காரணியும் இந்த ஆணைக்குழு பிரச்சனைதான். இந்நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் உட்கட்சி பிரச்சனை வலுப்பெற ஆரம்பித்ததோடு ஆணைக் குழு விவகாரத்தை மறந்து விட்டு ஆட்சியை கைப்பற்றும் படிக்கு ஐ.தே.க. மாறியது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் பலவீனங்களை பயன்படுத்தி ஆட்சி கவிழ்ப்பு திட்டத்தில் தன்னை முழு அளவில் ஈடுபடுத்தியது. நாளுக்கு நாள் அதிகரித்து வந்த அரசியல் நெருக்கடியுடன் கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீதான புலிகளின் தாக்குதலோடு பொருளாதார நெருக்கடியும் சேர்ந்து ஸ்திரமின்மை அதன் உச்ச கட்டத்தை அடைந்தது.

நிலமையை தனியாக சமாளிக்க முடியாதெனத் தெரிந்து கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி தமது கொள்கைகளுடன் பெரும்பாலும் ஒருமித்துப் போகக்கூடிய ஐ.தே.க.வை கூட்டரசாங்கம் அமைக்க அழைப்பு விடுத்தது. இது தொடர்பான பேச்சுவார்த்தையின்போது சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்க இருதரப்பும் உட்பட்டன. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் உப ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதில் ஏற்பட்ட இழுபறியால் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

ஐ.தே.க. பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதன் நோக்கம் தமக்கு சாதகமாக காய் நகர்வொன்றை மேற்கொள்வதை விடவும், அரசாங்கத்தின் முயற்சியை தடுப்பதற்காகத்தான். பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒட்சிசன் வழங்கி மீண்டும் உயிர்ப்பிக்கும் தேவை தமக்குக் கிடையாதென ரணில் பகிரங்கமாகவே கூறியிருந்தார். இதன் காரணமாக பொதுஜன ஐக்கிய முன்னணியூடாக ஆணைக்குழுக்களை பெறும் திட்டத்தை ஐ.தே.க. கைவிட்டதுடன் அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு ரணிலை நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராக்கும் பணியினை தொடர்ந்தது. அதாவது அதிகாரத்தை தமது கைக்குப் பெறாமல் ஜனநாயக சீர்திருத்தங்களை செய்யும் முயற்சியில் இருந்து அது பின்வாங்கியது. உண்மையில் ஐ.தே.க.வுக்கு ஆரம்பம் முதலே இது விடயத்தில் உறுதியான செயற்திட்டம் எதுவும் இருக்கவில்லை. சூழ்நிலைக்கு ஏற்றவாறு காய் நகர்த்திக்கொண்டு போனது.

ஆனால் ஜே.வி.பி.யின் நிலவரம் தலைகீழானது. பிரான்ஸில் அஞ்ஞானவாசமிருக்கும் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் ஆலோசனைப்படி ஐ.தே.க.வை ஒரு நாள்கூட ஆட்சிக்கு வர விடக்கூடாது என்று உறுதியான நிலைப்பாடு அதற்கிருந்தது.

அத்துடன் ஜே.வி.பி. வெளிப்படைத்தன்மையை வெகுவாக கடைபிடித்தது. தமது நிபந்தனைகளை 'நன்னடத்தை அரசாங்கம்' என்ற பெயரில் பகிரங்கப்படுத்தியது. உண்மையில் இத்தகையதொரு நன்னடத்தை காலத்துக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி இணங்கும் என்று ஜே.வி.பி.கூட நம்பியிருக்கவில்லை. அதனாலேயே எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்போடு இணைந்து கொண்டு அரசாங்கம் மீதான அழுத்தத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. ஐ.தே.க.வுடன் சேர்ந்து விரிவான மக்கள் எதிர்ப்புச் சக்தியொன்றை கட்டியெழுப்பிய அதேவேளை, தேவையேற்படின் அரசாங்கத்துடன் கூட்டுச்சேருவதற்கான வாசலையும் திறந்து வைத்திருந்தது. ஆனால் இந்த நெருக்கடியை பயன்படுத்தி ஐ.தே.க. ஆட்சியை கைப்பற்றி விடக்கூடாது என்பதிலும் ஜே.வி.பி. கவனமாக செயல்பட்டது. அவசியமேற்பட்டால் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து பாராளுமன்றத்தை கலைப்பதற்கும் ஜே.வி.பி. தயாராகவே இருந்தது.

ஆனால் ஐ.தே.க. இத்தகைய தெளிவான திட்டங்கள் எதுவுமின்றி இருந்ததுடன் அடுத்த ஒருசில நாட்களில் தாம் ஆட்சிக்கு வரவிருப்பதால் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டியதில்லை என்ற சிந்தனையிலும் இருந்து வந்தது.

எவ்வாறெனினும் எந்தவிதமான பதவிகளையும் எதிர்பாராது அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க முன்வந்திருப்பதன் மூலம் இன்றைய சில்லரை அரசியலில் ஜே.வி.பி. ஒரு புதிய கலாசாரத்தை அறிமுகம் செய்துள்ளதெனக் கருதலாம். ஒருதரப்பின் நலன் சார்ந்த எவ்வித நிபந்தனையையும் முன்வைக்காமல் இரண்டு சாராருக்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்தான உலகின் முதல் நிகழ்வாக இது இருக்கலாம் என்று இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான போது ஜே.வி.பி. செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்திருந்தார். இது ஐ.தே.க.வின் நிலைப்பாட்டுடன் ஒப்பிடுமிடத்து மலைக்கும் மடுவுக்கும் இடையில் உள்ள வித்தியாசம். இவற்றைவிட இந்த நன்னடத்தைக்கு தெளிவான கால அளவு குறிப்பிடப்பட்டிருப்பதால் ஏதோ ஒன்று குறிப்பிட்ட காலத்துக்குள் நடந்துதான் ஆக வேண்டும்.

சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்து ஜே.வி.பி.யின் நிபந்தனைகளை நிறைவேற்றும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் தேர்தல் ஒன்றை சந்திக்கும் எண்ணம் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

உண்மையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலமாக அதிகாரத்தை கைப்பற்றியிருந்தால்கூட நம்மால் நீண்டகாலம் ஆட்சி நடத்த முடியாது என்பதை ஐ.தே.க. அறிந்திருந்தது. எனினும் அரசாங்கத்தை தோற்கடித்து விட்டு தேர்தலை சந்திக்கும் போது ஒரு புதிய தெம்பு கிடைக்கும். அத்தகையதொரு சாதகத்தன்மைக்கான பாராளுமன்றப் போராட்டத்தைத்தான் ஐ.தே.க இதுவரை காலமும் நடத்தியது. ஆனால் இனிமேல் தமது விருப்பப்படி பாராளுமன்றத்தை கலைக்கும் சந்தர்ப் பத்தை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஜே.வி.பி. பெற்றுக்கொடுத்திருக்கிறது. அக்டோபர் 10ம் திகதிக்கு இன்னும் 25 நாட்கள்தான் இருக்கின்றன. அதனால் அரசாங்கத்தின் பெரும் எதிர்பார்பொன்று நிறைவேற ஜே.வி.பி.கை கொடுத்துள்ளது.

**எம்.பீ.எம். பர்ஸான்**

எது எப்படியிருந்தாலும் ஆயுதக் கிளர்ச்சிகள் இரண்டில் பல்லாயிரக்கணக்கான தமது உறுப்பினர்களை பலிகொடுத்த ஜே.வி.பி. ஜனநாயக பாதைக்கு திரும்பி மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே அரசாங்கம் ஒன்றை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பது வியக்கத்தக்க வளர்ச்சி என்பதில் சந்தேகமில்லை. இந்த நிலையை அடைய அந்தக் கட்சி கையாண்ட அரசியல் நடைமுறையின் குறை நிறைகளுக்கு அப்பால் இது அவர்களது வெற்றி என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

சுதந்திர ஆணைக்குழுக்கள், விவசாயக்கடன் இரத்து உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த கோரிக்கைகளை ஜே.வி.பி. பெற்றுக் கொள்ளும் நாளில் இந்த நாட்டின் ஜனநாயகத்துக்காகவும், ஏழை மக்களுக்காகவும் பெரும் சேவையாற்றிய ஒரு கட்சி என அவர்கள் பெருமை பட்டுக்கொள்ள முடியும்.

இதை அவதானிக்க நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. அக்டோபர் மாதம் முதல் வாரத்தின் பின்னர் நடக்கப்போவதை தெரிந்து கொள்ள முடியும்.

இந்த நன்னடத்தை அரசாங்கத்தின் உண்மை நிலையையும் அதன் ஆயுள் குறித்தும் எதிர்வு கூற அது தோன்றிய ஒருவார காலம் போதுமானதல்ல.

எவ்வாறெனினும் ஜே.வி.பி.யின் நகர்வு ஐ.தே.க.வுக்கு ஒரு பெரும் சவாலை முன்வைத்துள்ளதையும், அது இலகுவானதல்ல என்பதை அந்தக் கட்சி உணர்ந்திருப்பதையும் தலைவர்களின் முகத்தில் காண முடிகிறது.

# அண்டை மண்டலத்தில்..

கானகன்

# ஜெயலலிதா பதவி இழக்கும் காலம் நெருங்குகிறது

**பு**ரட்சித் தலைவியின் கனவுகள் நொறுங்கிக் கொண்டிருக்கின்றன. நவம்பர் 14க்குப் பிறகு அவர் தமிழக முதல்வராகத் தொடரமுடியாது என்பது ஏறத்தாழ உறுதியாகிவிட்டது. அவர் வழிபடுகிற கடவுளர்கள், அடிக்கடி கலந்தாலோசிக்கும் சாமியார்கள், அயராமல் நடத்தும் யாகங்கள் இவையே அவரை இந்த நிலையில் காப்பாற்றமுடியும்.

டான்சி வழக்குகள் புதிய நீதிபதியொருவரால் விசாரிக்கப்படவேண்டும், அத்வும் அக்டோபர் முதல் தேதிக்குப் பிறகே என உச்சநீதிமன்றம் கூறிவிட்டது. அவை விசாரிக்கப்பட்டு, 15 நாட்களுக்குள் ஒரு நல்ல தீர்ப்பு கிடைத்து, உடனே தேர்தல் கமிஷனுக்குத் தெரிவித்து, நவம்பர் 13க்குள் இடை தேர்தல் நடத்தி முடிக்கப்படவேண்டும். அவ்வளவு விரைவாக அனைத்தும் நடந்து முடியும் என்பதற்கோ அல்லது அவர் குற்றவாளியல்ல என்று தீர்ப்பு கிடைக்கும் என்பதற்கோ தேவையான அறிகுறிகள் ஏதும் இதுவரை காணப்படவில்லை.

இந்தக்கட்டுரையைத் தாங்கிவரும் இதழ் வாசகர்கள் கரங்களில் தவழும் முன்னமேயேகூட ஜெயலலிதா ராஜினாமா செய்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நவம்பரில் பிரச்சனையென்றால் இப்போது ஏன் விலகவேண்டும்?

அது ஒரு தனிக் கிளைக்கதை. டான்சி வழக்குகளில் தண்டனை பெற்று தேர்தலில் போட்டியிடும் தகுதியினை இழந்த ஒருவரை முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி முதல்வராக நியமித்ததே தவறு எனக் கூறி, எனவே ஜெயலலிதா முதல்வராக இருக்கக்கூடாது என வாதிட்டு உச்சநீதிமன்றத்தில் இரு வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வழக்குகளின் விசாரணை போகும் போக்கினைப் பார்க்கும் போது மாண்பமிகு நீதிபதிகள் ஜெயலலிதாவிடம் கருணை ஏதும் காண்பிப்பார்கள் என்று தோன்றவில்லை. "நீங்கள் பதவி இழக்கிறீர்கள்" என நீதிமன்றம் கூறும்வரை அவர் காத்திருப்பாரா, அல்லது கௌரவமாக அவரே பதவி விலக முன்வருவாரா என்பதுதான் கேள்வி.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், டான்சியின் சொத்துக்களை கடந்த ஜெயலலிதா ஆட்சியின்போது, ஜெயா பப்ளிகேஷன்ஸ், சசி என்டர்ப்ரைசஸ் மற்றும் ஆர்.ஆர்.இன்டஸ்ட்ரீஸ் ஆகிய மூன்று நிறுவனங்களுக்கு சந்தைவிலையை விட மிகக்குறைந்த தொகைக்கு விற்றதால், அரசுக்கு நஷ்டம் என்று மூன்று வெவ்வேறு வழக்குகள் சிறப்பு நீதி மன்றங்கள் முன் தொடுக்கப்பட்டன.

இவற்றில் ஆர்.ஆர்.இன்டஸ்ட்ரீஸ் வழக்கில் ஜெயலலிதாவோ, சசிகலாவோ சம்பந்தப்படுத்தப்படவில்லை. அந்த வழக்கு இன்னமும் பைசலாகவும் இல்லை. மற்ற இரண்டு வழக்குகளிலும் தீர்ப்புக் கூறப்பட்டுவிட்டன. ஜெயலலிதா முதல் வழக்கில் மூன்றாண்டு கடுங்காவல் தண்டனையினையும், இரண்டாவது வழக்கில் இரண்டாண்டு தண்டனையும் பெற்றார்.

இத் தீர்ப்புக்களின் விளைவாகத்தான் அவர் தேர்தலில் போட்டியிடும் தகுதியினை இழந்தார்.

எனவே ஆட்சிக்கு வந்தவுடன் அவரது முதல் குறி டான்சி வழக்குக்களில் தான் நிரபராதி என்று தீர்ப்பைப்பெற்று தேர்தலில் போட்டியிடுவதுதான். காய்கள் வேகமாக நகர்த்தப்பட்டன. ஆனால் தி.மு.க.வும் சும்மாவிருக்கவில்லையே.

ஜெயலலிதாவால் தலைகீழே நின்றும் பாரதீய ஜனதாவுடன் நல்லுறவை புதுப்பித்துக்கொள்ள முடியவில்லை. இரண்டு, மூன்றாண்டுகளுக்கு முன்பு தாங்கள் அவரிடம் பட்ட அவதியையும், அவமானங்களையும், அத்வானியும் சரி, வாஜ்பேயியும் சரி மறக்கத்தயாராக இல்லை.

இந்தச் சூழ்நிலையினை தி.மு.க நன்கு பயன்படுத்திக் கொண்டது. டான்சி மற்றும் ப்ளெசன்ட் ஸ்டே ஹோட்டல் வழக்குகளில் ஜெயலலிதா தாக்கல் செய்திருந்த மேல் முறையீட்டு மனுக்கள் முதலில் ஒரு நீதிபதியின் முன் வரவிருந்தது. அவர் கடந்த காலங்களில் ஜெயலலிதாவிற்கு ஆதரவாக தீர்ப்பளித்தவர். கடைசி நிமிடத்தில் அவரிடமிருந்து வாக்குகள் பறிக்கப்பட்டு வேறு ஒரு நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போதைய அரச வழக்கறிஞர், ஜெயலலிதா அரசுக்கு பயந்து சரியாக வாதாடமாட்டார் என்று வழக்கு தொடுக்கப்பட்டு, தி.மு.க ஆட்சி காலத்தில் டான்சி வழக்குகளில் ஆஜரான வேங்கடபதி என்பவரே மீண்டும் சிறப்பு பப்ளிக் ப்ராசிக்யூட்டராக உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டார்.

விசாரணையும் தொடங்கியது. புதிய நீதிபதி பாலசுப்பிரமணியமும் லேசுப்பட்ட ஆசாமியாகத் தெரியவில்லை. முதல் நாளே ஒரு பிரச்சனையைக் கிளப்பினார் வேங்கடபதி. டான்சி மற்றும் ஹோட்டல் வழக்குகளில் ஜெயலலிதாவைத் தவிர்த்து மொத்தம் 17 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களும் மேல் முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். அவற்றை விசாரிக்காமல் ஜெயலலிதாவிற்கு மட்டும் எப்படி முன்னுரிமை கொடுக்கலாம் என்று வாதிட்டார் அவர். "எனக்குத் தெரியாது தலைமை நீதிபதியைக் கேளுங்கள்" என்று கூறிவிட்டார் பாலசுப்பிரமணியம்.

ஆனால் பின்னொரு கட்டத்தில் மற்ற மனுக்களையும் விசாரிக்க ஒத்துக் கொண்டார் அவர். டான்சி வழகுக்களில் தான் ஜெயலலிதாவிற்கு மொத்தம் ஐந்தாண்டு கடுங்காவல். ப்ளெசன்ட் ஸ்டே வழக்கிற்கு என்ன அவசரம்? அதிலும் ஒரு சூட்சுமம் இருக்கிறது. டான்சியில் விடுதலைபெற்று தேர்தலில் நிற்கும் தகுதியினை அவர் பெற்றாலும்கூட, ஹோட்டல் வழக்கில் அவர் தண்டனை பெற்றவர் தானே. நாளை டான்சியில் வெற்றி பெற்று, தேர்தலில் நின்று மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகி முதல்வராக நீடிக்கும் நிலை வந்தால், எவராவது நீதிமன்றத்தினை அணுகி தண்டிக்கப்பட்ட ஒருவர் முதல்வராவது எங்கனம் என்று வழக்கு தொடுத்துவிட்டால்? எனவேயே அவ்வளவு முன்ஜாக்கிரதை.

இதெல்லாம் போக 1993ம் ஆண்டு முதல் தாக்கல் செய்யப்பட்டுள்ள பல்வேறு அப்பீல்கள் தேங்கியிருக்கும்போது, எதற்காக ஜெயலலிதாவின் மேல் விசேட அக்கறை என்ற கேள்வியும் எழுப்பப்பட்டு, அதற்கு விடை கிடைக்காமலேயே பிரச்சனை அடங்கிப்போனது.

இந்தப் பின்னணியில் சென்னை தலைமை நீதிபதி என்.கே.ஜெயினை அவசர அவசரமாக கர்நாடகத்திற்கு மாற்றியது மத்திய அரசு.



சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் 1200 பக்கங்களுக்கு மேல் இருக்கும். எனவே அதையெல்லாம் படித்து முடிக்க சற்று கால அவகாசம் வேண்டும் என்று கோரினார் வேங்கடபதி. "வாக்கு நடக்கும்போதே படித்துக்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டார் பாலசுப்பிரமணியம்.

பார்த்தார் வேங்கடபதி, உச்சநீதிமன்றத்திற்கே போய்விட்டார். "இந்த நீதிபதி முன் எனக்கு நியாயம் கிடைக்காது. பாரபட்சமாக நடந்து கொள்கிறார். எப்படியாவது விரைந்து முடிக்கவேண்டும் என்று அவர் காட்டும் அக்கறை அவர்மீது சந்தேகத்தைக் கிளப்புகிறது. எனவே வழக்கினை வேறு மாநில நீதிமன்றத்திற்கு மாற்றவேண்டும்" என்று கோர, உச்சநீதிமன்றம் உடனடியாக இடைக்காலத்தடை விதித்தது.

பின்னர் சென்னையிலேயே, ஆனால் வேறொரு நீதிபதிதான் விசாரிக்கவேண்டும் என்று உத்தரவிட்டது. வேங்கடபதிக்கு அனைத்து மனுக்களும் வழங்கப்படவேண்டும், அக்டோபர் 1க்கு மேல் புதிய விசாரணை தொடங்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் கூறியிருக்கிறது.

இடைத்தேர்தல் ஒன்றை அறிவிக்க குறைந்த பட்சம் தேர்தல் கமிஷனுக்கு 30 நாட்கள் தேவைப்படும். அதாவது ஒரு அ.தி.மு.க., எம்.எல்.ஏ.ராஜினாமா செய்து, அத்தகவல் கமிஷனுக்கு தெரிவிக்கப்பட்டு, அதன் பிறகு ஒரு மாதம் கழித்து புதிய தேர்தல் நடத்தப்படும் நடத்தியாகவேண்டும் என்று விதி ஏதும் கிடையாது. ஆனால் நடத்துவதற்கு ஒரு மாத அவகாசம் அவசியம் தேவை.

அக்டோபர் முதல்வாரத்தில் தொடங்கி, 18 மனுக்களும் விசாரிக்கப்பட்டு, 15 நாட்களில் எல்லாம் முடிந்துவிடுமா என்பது கேள்விக்குறி. தவிரவும் புதிய நீதிபதியொருவர் விசாரிக்கவிருக்கையில் ஜெயலலிதாவிற்கு சாதகமான தீர்ப்பு கிடைப்பதும் சந்தேகமே. இதிலே வேறொன்றையும் கவனிக்கவேண்டும். அவருடைய போதாத காலம் சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பு உறுதிசெய்யப்பட்டால், ஜெயலலிதா சிறைக்குச் செல்லவேண்டியதுதான். உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்து பயனேதும் உடனடியாக கிடைக்காது. இன்னொரு முன்னாள் அ.இ.அ.தி.மு.க அமைச்சர் பொன்னுசாமி ஐந்தாண்டுகள் கிறைத்தண்டனை பெற்றவர். மேல் முறையீடு செய்து, அவரது தண்டனை உறுதிப்படுத்தப்பட்டு, அவர் இப்போது சிறையில் இருக்கிறார். அந்த நிகழ்ச்சியே ஜெயலலிதாவை அல்லும் பகலும் உலுக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

இதுபோதாதென்று கோவாரண்டோ மனுக்கள். அதாவது அவர் பதவியில் இருக்க அருகதையற்றவர். தேர்தலில் நிற்கும் தகுதியினை இழந்தவரை நியமித்ததே தவறு என்று இரண்டு நபர்கள் செய்திருந்த மனுக்கள். அவற்றின் மீதான விசாரணை உச்சகட்டத்தை நெருங்கியிருக்கிறது.

மக்கள் தீர்ப்பு பெற்றுவிட்டால், யார் வேண்டுமானால் முதல்வராகிவிடலாமா? அப்படியென்றால் சட்டமும், நீதிமன்றமும் எதற்கு? ஜெயலலிதா பதவியிலிருந்து நீக்கப்பட்டால் என்னாகிவிடும்?

சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் ஆறு மாதம் வரை முதல்வராக இருக்கலாம் என்று மட்டும்தான் அரசியல் சட்டம் கூறுகிறது, தவிர நெறிமுறைகள் ஏதும் வகுக்கப்படவில்லையென்றால் என்ன, நாங்கள் புதிய வழிகாட்டு நெறிகளை வகுத்துத் தருகிறோம்... முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி எந்த விதிகளின் கீழ் தேர்தலில் போட்டியிடும் தகுதியினையே இழந்த ஒருவரை முதல்வராக்கினார் என்பதை நாம் ஆய்ந்தாக வேண்டும்... இவ்வாறெல்லாம் உச்சநீதிமன்ற நீதிபதிகள் கணைகள் தொடுக்க, திக்குமுக்காடிப் போனார் ஜெயலலிதாவின் வழக்கறிஞர் கே.கே.வேணுகோபால். பதவியில் நீங்கள் நீடிக்க முடியாது என்று அவர்கள் கூறும் வரை காத்திருக்காமல், ராஜினாமா செய்துவிடுங்கள் என்று அவரே ஜெயலலிதாவிற்கு ஆலோசனை கூறியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனால் யாரை நம்புவார் ஜெயலலிதா? சசிகலாவும் தண்டனை பெற்றவர். தினகரன் அல்லது அமைச்சர் பொன்னையன், அமைச்சர் தம்பித்துரையென்று யாரையாவது நியமித்தால் பின்னால் தனக்கெதிராக அவர்கள் திரும்பிவிட்டால்? ஜெயலலிதா பெரும் குழப்பத்தில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் இப்போது ராஜினாமா செய்துதான் நீதிமன்றங்களையும் சட்டத்தையும் மதிப்பவரென்று காட்டிக்கொண்டாலாவது, டான்சி வழக்குகளில் நீதிபதிகளின் கருணையினைப் பெறலாமே என்றும் ஜெயலலிதா கணக்குப் போடுவதாகக் கூறப்படுகிறது. அதேநேரம் யாரை நம்பியும் பதவியைத் துறக்க அவர் தயாராக இல்லை என்றும் கூறுகிறார்கள்.

மீண்டும் அ.இ.அ.தி.மு.க எம்.எல்.ஏ.க்கள் கூடி "ஜெயலலிதாவே எங்கள் தலைவர்" என்று முழக்கமிட்டால், "வேறு யாரையும் நாங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கமாட்டோம்" என்று முரண்டு பிடித்தால்?

தேர்தல் முடிவுகள் வந்திருந்த நேரத்திலும் அப்படித்தான் செய்ய முடிவெடுத்திருந்தனர். தீர்மானம் கூட இயற்றினர்.

அந்த நேரத்தில் சரி, எல்லோரும் திகைத்துப்போயிருந்த நேரம். ஆனால் இப்போது அப்படிச் செய்தால் வெகு எளிதில் மத்திய அரசு ஜெயலலிதா அரசைக் கலைத்து, சட்டமன்றத்தை இடைநிறுத்தம் செய்து, குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வந்துவிடும். சசிகலா இறுதி முயற்சியாக காஞ்சிசங்கராச்சாரியாரை சந்தித்து ஆலோசனை கேட்டு வந்திருக்கிறார். அவர் பேச்சுக்குக் கட்டுப்பட்டு வாஜ்பேயியோ , அத்வாஸியே அல்லது ஆண்டவனோ மசிந்தால்தான் தற்போதைய சிக்கல்களிலிருந்து ஜெயலலிதா தப்பலாம் என்று தோன்றுகின்றது. ▭

---

# வடபகுதி பயணத்துக்கான எம்.ஓ.டி. அனுமதியும் தமிழ்க்கட்சிகளின் 'எதிர்ப்பு அரசியலும்'

**தெ**ன்னிலங்கையில் இருந்து வடபகுதிக்கு பயணம் செய்ய இதுவரைகாலமும் நடைமுறையில் இருந்த பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறும் வழிமுறை வெகுவிரைவில் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஜனாதிபதி இதற்கான உறுதிமொழியை வழங்கியதுடன் இது தொடர்பான உத்தரவை உடனடியாகவே பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட பகுதி பயணத்துக்கான' பாதுகாப்பு அனுமதி என்பது நீண்ட நாட்களாகவே ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வருகின்றது.

இந்த எம்.ஓ.டி. அனுமதியை பெற பொது மக்கள் பலதரப்பட்ட துன்பங்களையும் அனுபவிக்க வேண்டியிருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் ஒரு புறமிருக்க, இதில் இடைத்தரகர்களின் கைவரிசை இன்னொருபுறம் நடைபெற்று வந்தது.

அவர் இப்படிச் செய்கிறார், இவர் அப்படிச் செய்கிறார் என்று ஆளாளுக்கு விரலை நீட்டி குற்றம் சுமத்திக் கொண்டிருந்ததைத்தவிர தமிழ்கட்சித் தலைவர்களோ உறுப்பினர்களோ இதுவிடயத்தில் உருப்படியான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கவில்லை.

அமைச்சர் டக்ளஸ் ஜனாதிபதியிடம் நிலைமையை விளக்கியபோது அவர் அதனை புரிந்துகொண்டிருக்கிறார். இதனையடுத்தே எம்.ஓ.டி. அனுமதி பெறும் நடைமுறை அகற்றப்படவிருக்கிறது.

உண்மையில் வடபகுதி பயணத்துக்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறும் செயல்முறையால் பலரும் பலவகையான பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். பலருக்கு உரிய நேரத்தில் அனுமதி கிடைக்காததால் மரணச்சடங்குகளில் கலந்து கொள்ள முடியாமல் போயிருக்கின்றது. முகூர்த்த நேரத்தில் யாழ்ப்பாணம் போகக்கிடைக்காததால் பின்போடப்பட்ட திருமணங்கள் ஏராளம் இந்தப் பிரச்சனைகளை தமிழ்க்கட்சிக்காரர்கள் அறிந்திருந்த போதும் இவ்வாறான இன்னல்கள் தமது 'எதிர்ப்பு அரசியலுக்கு' பயன்படும் என்பதால் இந்த பிரச்சனையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதை விடவும் இதை கண்டித்து பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதில்தான் கூடுதல் ஆர்வம் காட்டினர்.

இது ஒரு உதாரணம் மட்டும் தான். ஏனைய விடயங்களிலும் தமிழ்க் கட்சிகள் இதே கைங்கரியத்தைத்தான் செய்து வருகின்றன. எதுவொன்றையும் எதிர்த்துக் கொண்டிருப்பதால் மாத்திரம் எல்லா பிரச்சனைகளையும் தீர்த்து விடலாம் என்ற ஒரு கனவுலகத்தில் வாழ்கின்றன. உண்மையில் மக்களின் துன்பம் அதிகரித்தால்தான் இந்த தமிழ்க்கட்சிகளால் செழிப்பான அரசியல் நடத்த முடியும்.

சுதந்திரத்திற்குப் பின்னர் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியின் பிறகு தமிழ் மக்களின் அரசியல் பலம் கோரிக்கைகளை வென்றெடுப்பதை விடவும் எதிர்ப்பு அரசியலுக்கு மட்டுமே பயன்படுகின்றமையால் பெறப்பட வேண்டிய ஏராளமான விடயங்கள் கைநழுவிப் போயின. கடைசியில் இந்த பிரதிநிதிகளால் மக்களுக்கு இலாபமில்லை என்பதை விடவும் கிடைப்பதையும் தடுக்காவிட்டால்போதும் என்ற நிலைதோன்றியிருக்கிறது. வடபகுதி பயணத்துக்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி ரத்துச் செய்யப்படவிருப்பது ஒரு வரவேற்கத்தக்க விடயம் என்பதில் சந்தேகமில்லை 'தமிழர் தரப்பு ஒன்று குவிந்த அரசியல் சக்தியாக உரத்த குரலில் கோரியிருக்குமாயின் எத்தனை விஷயங்களை பெற்றிருக்கலாம்? இவ்வாறான எத்தனை தடைகளை நீக்கியிருக்கலாம்? எல்லாவற்றையும் எதிர்த்தோம் என்பதைத் தவிர மக்களுக்கு என்ன செய்தோம் என்பதை இவர்கள் ஒவ்வொருவரும் தமது மனசாட்சியிடம் கேட்கட்டும். ■

## குடியேற்றவாசிகளுக்கு சார்பாக

# பிரிட்டிஷ் நீதிமன்றத் தீர்ப்பு

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரிய நால்வர் தம்மை தடுப்புக் காவலில் வைத்திருந்தமை சட்ட விரோதமானது என லண்டன் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை நீதியரசர் ஏற்றுக் கொண்டு அவர்களை விடுதலை செய்ததை அடுத்து அந்நாட்டில் தடுப்புக் காவலில் உள்ள பல நூற்றுக் கணக்கான அகதிகள் விடுதலையாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

முன்னாள் விமானப்படை தளம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈராக்கிய குர்ட் இனத்தவர்களே தமது தடுப்புக் காவலுக்கெதிராக மனுத்தாக்கல் செய்த 4 அகதிகளாவர்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினால் சட்டவிரோத குடியேற்ற வாசிகளுக்கெதிரான பிரித்தானிய அரசின் நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்படுவதுடன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட அகதிகள் லட்சக் கணக்கான ஸ்ரேலிங் பணத்தை நட்ட ஈடாக கோரவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் பிரித்தானியாவுக்குள் வந்து சேர்ந்த நாலு அகதிகளும் அகதி அந்தஸ்துக்கு தகுதி உடையவர்களா என்பதை தீர்மானிக்கும் வரை அவர்களை தடுப்புக்காவலில் வைத்திருந்தது சட்ட விரோதமானது என்று மனுவை விசாரித்த நீதியரசர் கொலின்ஸ் தெரிவித்துள்ளார்.

நாலு அகதிகளில் மூவருக்கு தற்போது அகதி அந்தஸ்து கிடைத்து விட்டது. ஒருவரது விடயம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. இவர்கள் தலைமறைவாகி விடுவார்கள் என்று நம்புவதற்கு எத்தகைய காரணமும் இல்லை. எனவே இவர்களது சுதந்திரத்தை கட்டுப்படுத்த அரசுக்கு எந்த வித உரிமையும் இல்லை என்று நீதியரசர் தமது தீர்ப்பில் கூறியுள்ளார்.

## 'புலம்பெயர்ந்தவர்களின் சாட்சியங்கள் முக்கியமானவை'

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் வருடந்தோறும் 1983 ஜூலை கலவரத்தை நினைவுகூருவதன் மூலம் பெரும்பான்மையினத்தவர்களுக்கு எதிரான தமது உணர்வுகளைப் புதுப்பித்து வருவதாகச் சுட்டிக் காட்டியுள்ள மார்கா நிறுவனத் தலைவரும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவருமான கலாநிதி கொட்பிறி குணதிலக்க, ஜனாதிபதி நியமித்திருக்கும் மெய் அறியும் ஆணைக்குழு அவர்களைச் சென்றடைய வேண்டும் எனவும், இதுவே இனங்களுக்கிடையிலான கருத்தொருமைப் பாட்டிற்கான ஒரு வழியாக அமையலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இன வன்செயல்கள் பற்றிய மெய் அறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்வு கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றவேளை, அங்கு உரை நிகழ்த்திய குணதிலக்க, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் அனுபவங்கள் புறக்கணிக்கப் படுமிடத்து விசாரணைகள் முழுமை பெறாது எனவும் தெரிவித்தார்.

இன வன்செயல்கள் குறித்த மெய் அறியும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் சாதாரண நீதியாணைக்குழுவொன்றின் செயற்பாடுகளை விட மாறுபட்டதாக அமையப்போகின்றது. ஜனாதிபதி ஆணைக்குழு தன்னுடைய செயற்பாடுகள் மூலம் தேசிய ஐக்கியத்தையும், கருத்தொருமைப் பாட்டையும் ஏற்படுத்த வேண்டும். ஏனைய உலக நாடுகளில் இதுவே நடைபெற்றுள்ளது. இந்த வகையில், ஆணைக்குழு பொறுப்பேற்றுள்ள பணி மகத்தானது. 1983 இல் நிகழ்ந்த மிகக் கொடூரமான விடயங்கள் குறித்த உண்மைகளை நாட்டின் தலைவிதியை முற்றாக மாற்றிய சம்பவங்கள் குறித்த உண்மைகளை ஆணைக்குழு வெளிக்கொணரப் போகின்றது. உண்மையில் இதற்கு ஒரு ஆணைக்குழு போதாது என்றே சொல்ல வேண்டும் எனவும் அவர் கூறினார்.

## கட்டுப்பாடற்ற பகுதியில்

# கடும் தண்ணீர்த் தட்டுப்பாடு

பூநகரி முதல் மன்னார் வரையான கரையோரப் பகுதி கிராமங்களில் கொடிய வரட்சி நிலவுகிறது. இதனால் குடி நீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பூநகரி வலைப்பாடு கிராமத்தைச் சேர்ந்த 2 வயது குழந்தை ஒன்று வயிற்றோட்டத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் முழங்காவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காது அங்கு உயிரிழந்தது.

மல்லாவி மருத்துவமனையில் நாள்தோறும் வயிற்றோட்டப் பாதிப்புக்கு உள்ளாகி குழந்தைகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். தற்போதைய வரட்சி காரணமாக வன்னியின் மேற்குக் கரையோர கிராமங்களில் மக்கள் குடிநீருக்கு மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இக்கிராமங்களில் உள்ள ஆற்றுக் கழிமுக படுகைகளில் மக்கள் கூவல்களை தோண்டி நீரை எடுத்து தமது தேவைகளுக்குப் பயன்படுத்தும் நிலை காணப்படுகின்றது. சில கிராமங்களில் இந்த நிலையும் இல்லாதிருக்கின்றது. நீர் நெருக்கடி காரணமாக சுகாதார நடைமுறைகள் கைக்கொள்ளப்படாத நிலையில் வயிற்றோட்டம் உட்பட பல நோய்கள் பரவி வருகின்றன.

## 41ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்

02

03

1993



இறைவன் மடியில்

04

08

2001

### செல்வநாயகம் கவாஸ்கர்
### பலாலி கிழக்கு வசாவிளான்

04.08.2001 அன்று விஸ்வமடு குளத்தில் அகாலமரணம் அடைந்தார்.

மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும் நேரடியாகவும், தொலை பேசியாலும் ஆறுதல் மொழி சொன்னோருக்கும் நன்றிகளை பணிவுடன் தெரிவிக்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்- அப்பா செல்வநாயகம், அம்மா றஞ்சினிதேவி அக்காமார் தீபா, உஷா மற்றும் உற்றார் உறவினர்கள்.

| தற்காலிக முகவரி: | தகவல்:- |
|---|---|
| 129/1 விஸ்வமடு மேற்கு விஸ்வமடு | செல்வநாயகம் லண்டன். T.P:- 00442089042232 |


## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் வந்து திருமணப்பதிவு செய்து, திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியுடன் தங்குமிடவசதியும், திருமணம் இலங்கை முறைப்படியோ அல்லது வீடியோ போட்டோவைப் பார்த்து வசதிக்கேற்பவோ தீர்மானிக்கலாம்.

விபரத்திற்கு:- அப்புலிங்கம் சிங்கப்பூர் கைதொலை பேசி எண்:-

Tel:- 00 65 9 7514941. Tel. Fax:- 0065 2857494.

**LINGAM WEDDING SERVICE**

TELE: (65) 4533308

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் செப்டெம்பர் 22-27 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் செப்டெம்பர் 1, 2, 3 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் செப்டெம்பர் 08, 09 திகதிகள்**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் செப்டெம்பர் 15, 16 திகதிகள்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019

DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.

சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

Tel: 074-519754

## RECOVA*




நீண்ட நாட்களாக மூட்டு வலியால் அவஸ்த்தைப் படுபவர்களுக்கு மூட்டுக்களை புனரமைக்கும் "ரீகோவா" முற்றாக நிவாரணம் அளிக்கின்றது. தற்போது இலங்கையில் முன்னணி பார்மசிகளில் "ரீகோவா" கிடைக்கப் பெறுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு:

Tel : 01-470290, 077-805738

## சுவிஸ். பேர்ண் மாநகரில் புதிய உதயம்.

### விதுஜா ஏசியன் சொப் வாக் ஹவுஸ்
### காசே பசாஜ் .8-3011. பேர்ண். சுவிற்சர்லாந்து.

மைக் டொனால்ட். மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் அமைந்திருக்கும் கட்டிட 1ம் மாடியில்.

எம்மிடம் இந்தியா, சிங்கப்பூர் தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்த இறக்குமதி செய்யப்பட்ட குழந்தைகளுக்குரிய கோட், சூட், குருத்தா, ரீசேட், சோட்ஸ், கவுண், பஞ்சாபி, வெல்வெட் பஞ்சாபி, பெண்களுக்கான பஞ்சாபி, சுரிதார், சோலி, வெல்வெட் பஞ்சாபி, மற்றும் புடவைகள், பனாரஸ், கோலம், அபூர்வா, காஞ்சிபுரம், மைசூர்சில்க், ரூபிகுயின், சமர்குல்ட், ஆண்களுக்கான ஜீன்ஸ், சேட், பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி, என பல்வேறுபட்ட தெரிவுகளை பெற்றுக் கொள்ளவும் மற்றும் பழைய புதிய திரைப்பட பிரதிகளையும் நாடகப்பிரதிகளையும் 2 str வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும். மற்றும் அனைத்து மளிகைச் சாமான்களையும் அன்பளிப்பு பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் எம்மை நாடுங்கள். தொலைபேசி அட்டைகள் யாவும் 26 str மட்டுமே. மற்றும் சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அசல் 22 கரட். தங்கநகைகள் எங்கள் விற்பனையில்.

தொடர்புகளுக்கு ஆனந்தன் சுவிஸ் T.P 031 311 35 10 or 076 530 67 55 or 031 992 82 67.

## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன் - எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

**39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP**

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**

Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

**உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்**
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

"ஸ்ரீலெட்சுமி நாராயண சீரடிபாவா பாதசரணம்"

## இறையருள் தியானயோகமந்திரசக்தி

மட்டக்களப்பு-மலையாழ-அராபிய



மாந்திரீக வசிய வைத்தியம்

1945ம் ஆண்டு ஆரம்பித்த 56 வருடங்களுக்கு மேற்பட்ட புனித சேவை ஸ்தானம்,தர்ம சிந்தனையுள்ள புனிதசேவையினால் இன மதபேதமின்றி அனைத்து மக்களும் நன்மைபெறு வதினால் (அரசாங்க) சமய கலாச்சார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது. பதி.இல.HA14/BT/176 இந்தியாவிலும் இலங்கை சுகாதார அமைச்சினாலும் பதிவுசெய்யப்பட்ட பதிவு இல.061 ஹோமியோபதி (அக்குப்பங்சர்,சித்த ஆயுர்வேத மாந்திரீக,மனோவசிய,யோக சிகிச்சையாளர்)

மட்டக்களப்பு-கல்லடி(இராமகிருஷ்ணபுரம்)குருசக்தி நிலையத்தின்




பிரதமகுரு டாக்டர் - "மந்திரயோகி"

R.P.H.M. DAC (இலங்கை)P.I.S.M(இந்தியா)

(YOGA) MY GURU






சகலரோகநிவர்த்தி சகல துக்க நிவர்த்தி சகல காரியசித்தி தெய்வீகயந்திர மந்திர வசிய பூசை நடைபெறு கின்றன,தேவ வசியம் ராயவசியம் ஜன வசியம் ஸ்த்திரி வசியம் புருஷவசியம் தனவசியம் சத்துருவசியம

காதல் பிரச்சைனைகளைத்தீர்து விரும்பியவர்களை சம்பந்தப்பட்ட வர்களின் சம் மதத்துடன் திருமணம் செய்ய- கணவன்-மனைவி கருத்து வேறுபாடுகள் சந்தேகங்களைத்தீர்த்து பிரியாமல் இருக்க- பிரிந்தவர்கள் வெறுப்பவர்கள்,வேண்டியவர்கள் வந்து உறவாக,தகாத,விரும்பாத ஆண்-பெண் உறவைபோதைவஸ்த்தை மறப்பிக்க. தீயசக்திகளினால் ஏற்பட்ட திராதனோய் எதிரிதொல்லைகளிலிருந்து விடுபட,கண்ணூறு நாவூறு காலப்பகை கிரகதோஷங்களைத் தீர்த்து இவைகளி னாலும் அகாலமரணம் ஆபத்து வேறு எத்துன்பங் களும் அணுகாமல், உடல்,விடுவளவு வியாபரநிலையங்கள்,வாகனங்களை காவல் செய்யகாதல்,திருமணம், கல்வி, தொழில்.வியாபாரம் வெளிநாட்டுப் பிரயாயம்,வேறு சகல காரியங்ளிலும் வெற்றிபெற குழந்தைகள் இல்லா கெற்ப புத்திரதோஷம் ஆண்மை-பெண்மை(வீரிய)குறைபாடுகள், மனனோய் தீங்கான மாந்திரீக வசிய மருந்தீடுகள்,பயம்,பலவீனம் தாழ்வு மனப்பான்மை, கவலை ரென்சன் இவைகளுக்கு சிறப்புச்சி கிச்சை அளிக்கப்படுகின்றன. எவருக்கும் தீங்கில்லாத எல்லா இனமத குழந்தை கள் தொடக்கம் ஆண்-பெண் அனைத்து மக்களுக்கும் ஏற்ற தெயிவீக(ஆன்மீக) மாந்திரீக வைத்திய தர்மவி திகளுக்குட்பட்ட விடயங்கள் மாந்திரமே ஏற்றுக் கௌள்ளப்படுகின்றன குறிப்பாக வெளிநாட்டவர்கள் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு கட்டுப்பாடுகள்.பத்தியங்கள் இல்லாத ஆன்மீக வைத்திய அறிவுரை கள் அருள்வாக்கோடு இறைபரிகாரப்பொருட்களை, விஷேட தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறவேற்றிக்கொள்கிறார்கள்,முத்திரைகள்,குருதட்சனைகளோடு அனுப்பப்படும் கடிதங்கள்ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கடிதங்களைப்பார்க காலதாமதமாவதினால் கடி தங்களை அனுப்பிவிட்டு FAX(பாக்ஸ்)தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு அவசிய அவசரவிடயங்களைக் செய்து கொள்கிறார்கள் முக்கியகுறிப்பு - மற்றவர்களினால் கைவிடப்பட்ட, அல்லது பெரிய முக்கிய அவசர, அலசிய விடயங்களுக்கு மாத்திரம் தொடர்பு கொண்டால் நல்லது. இலங்கையர்கள் காலை 9மணியிலிருந்து இரவு 8மணிவரை தொலை பேசியில் தொடர்பு கொள்ளலாம்..வெளிநாட்டவர்கள் இலங்கை நேரப்படி இரவு 11மணி வரை தெடர்புகொள்ளலாம்.கடிதம் அனுப்பும் போது டாக்டர்-"மந்திரயோகி"என்றபெயரை எழுதாவிட்டாலும் ஆங்கிலத்தில் இருக்கும் விலாசத்தை எழுதவும்

| | |
|---|---|
| GURUSACKTHY CENTRE<br>RAMAKIRISHNA PURAM<br>KALLADY-BATTICALOA<br>(SRI LANKA) | தொலைபேசி – 065—24872<br>வெளிநாட்டவர்களுக்கு 009465 24872<br>FAX – ( பாக்ஸ் ) 065-24872 |

(சர்வதேச) கடல்கடந்து செல்லும் அற்புதஆகர்ஷ்ண வசிய ஆன்மீக தியானயோக மந்திரசக்தி. வெளிநாட்டவர்களுக்கு விஷேட செயல்முறைச் சேவைகள்.


## ஓராண்டு நினைவில்



### பி. அரியதாசன் J.P

அரசாங்க ஒப்பந்த காரர் ICTAD உரிமையாளர் றஞ்சனாஸ் மன்னார்

| | |
|---|---|
| கர்த்தர் கொடுத்தது | 13.03.1951 |
| அவரே எடுத்தது | 12.09.2000 |

*"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள்"*

என்றும் நினைவுடன்

மனைவி-மலர் பிள்ளைகள்-
விமால், றஞ்சனா
உறவினர்-நண்பர்கள்

பெற்றா மன்னார்
023-32434

# அலசுவது -இராஜதந்திரி

# இனித்தேவைப்படுவது வடக்கு-கிழக்கு விடயம் குறித்த ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம்!

ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.)க்குமிடையே ஏற்பட்டுள்ள உடன்பாடு, இலங்கையின் தற்போதைய பிரச்சனைகளை எவ்வாறு கையாளப் போகின்றதென்பதே பிரதான வினாவாக இருக்கிறது.

சந்திரிகா அரசு பாராளுமன்றில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும் விதத்தில் ஜே.வி.பி. கட்சியுடன் ஒன்றிணைந்துள்ளது. இந்த ஒற்றுமை ஆளுங்கட்சிக்கு பாராளுமன்றப் பலத்தைப் பேணுவது தொடர்பான தலையிடியைக் குறைத்துவிட்டுள்ளது.

மறுபுறத்தே ஜே.வி.பி.யைப் பொறுத்தவரை இப்புதிய உடன்பாடு ஆட்சியதிகாரங்களில் அதனை ஒரு பங்காளராக மாற்றி விட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கருத்தொருமிப்பு அரசாங்கமொன்றை அமைப்பதே ஆளுங்கட்சியின் விருப்பமாக இருந்தது. ஆனால் ஐ.தே.க., அரச தரப்புடனான பேச்சுக்களிலிருந்து விலகிக் கொண்டதையடுத்தே, ஜே.வி.பி. சுமார் இருபது நிபந்தனைகளை முன்வைத்த நிலையில் அரசுடன் பேச்சுக்களை நடத்தி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றையும் செய்து கொண்டுள்ளது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரச தரப்பும், ஜே.வி.பி.யும் சுதந்திர ஆணைக்குழுக்கள் பலவற்றை அமைப்பது உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக உடன்பாடுகளை எட்டியிருந்தன.

இந்த உடன்பாடுகள் பல வரவேற்கத் தக்கவையாகவும், ஒரு முற்றுமுழுதான சர்வாதிகாரப் போக்கிலிருந்து ஆளுந்தரப்பை விலக்கிச் செல்ல வைப்பதாகவும் இருக்கின்றது.

இருப்பினும் இலங்கையின் முக்கிய பிரச்சனையாக இருக்கின்ற இனப்பிரச்சனையைக் கையாளுவது பற்றி அழுத்தம் திருத்தமாக எதுவும் ஜே.வி.பி.க்கும் அரசுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாதிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.


பொதுஜன ஐக்கிய முன்னணி தற்போது ஒரு புதிய தெம்பைப் பெற்றதாகவே இருக்கின்றது. எதிர்வரும் அக்டோபர் மாதத்துடன் பொதுஜன ஐக்கிய முன்னணி இரண்டாவது தடவையாகவும் பாராளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றி ஒரு வருட காலத்தைப் பூர்த்திசெய்கிறது.

ஆயினும் ஜே.வி.பி. கொடுத்த உதவிக்கரமே ஆளுங்கட்சியை பாராளுமன்றில் தடம் புரளுவதிலிருந்தும் காப்பாற்றியிருக்கின்றது.

ஜே.வி.பி.யுடனான உடன்பாடு எட்டப்பட்டதையடுத்து ஜனாதிபதி சந்திரிகா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் ரூபவாஹினித் தொலைக்காட்சியில் தமது கருத்துக் கண்ணோட்டங்களை வெளிப்படுத்தியிருந்தனர்.

அச் சமயம் இந்த இரு அரசியல் முக்கியஸ்தர்களுமே இனப்பிரச்சனைத்தீர்வ, அது குறித்த தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் என்பவற்றுக்கே அதிக முக்கியத்துவமளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

ஐ.தே.க.வுடன் கருத்தொருமிப்பு அரசாங்கமொன்றை உருவாக்குவதில் ஆளுங்கட்சி தோல்வி கண்டதுமே வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரது கவனம் தமிழீழ விடுதலைப் புலிகள் பக்கம் திரும்பியிருந்தது.



அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேசுவதற்குத் தயாராக இருப்பதாக திரு. கதிர்காமர் அறிவித்திருந்தார். ஆனால் இலண்டனில் இருந்து வரும் புலிகளது அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் அரச தரப்பின் அழைப்பை ஏற்க மறுத்திருந்தார்.

பலவீனமான ஒரு நிலையில் இருக்கின்ற அரசுடன் பேசுவதற்குத் தமது தரப்பு தயாராக இல்லை என்று புலிகளது அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம், திரு. கதிர்காமரது அழைப்புக்குப் பதிலளித்திருந்தார்.

சந்திரிகா அரசு ஒரு பலவீனமான நிலையையே பாராளுமன்றில் எட்டியிருந்தது. ஆயினும் ஜே.வி.பி. வழங்கிய உதவிக்கரம் அரச தரப்பை சுதாகரித்துக்கொள்ளத் துணை புரிந்துள்ளது.

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடத்திலிருந்து மட்டுமல்ல. ஜனாதிபதி சந்திரிகா கூட ஜே.வி.பி.யுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை மற்றும் நோர்வேயுடனான மத்தியஸ்தம் என்பவை பற்றித் தாம் வழங்கிய தொலைக்காட்சிப் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

இப்பேட்டியின் மூலம் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள ஜே.வி.பி.யுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ள அதேசமயம், அடுத்த கட்ட நடவடிக்கையாக புலிகளோடு பேசி யுத்தத்துக்கு முடிவகாணும் விடயத்திற்கே அரசு முக்கியத்துவமளித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இதே வேளை அரசியல் விமர்சகர்கள் சிலர் தமிழ் அரசியல் கட்சிகள் நல்லதோர் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுள்ளன என்ற கருத்தை வெளிப்படுத்துவோராகவும் இருக்கின்றனர்.

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்துமே ஒன்று சேர்ந்திருக்கும் பட்சத்தில், அரசாங்கத்துக்கு இனப்பிரச்சனைத் தீர்வு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் தொடர்பாக கூடுதல் அழுத்தங்களை வழங்கியிருக்க முடியுமென்பதே சில அரசியல் அவதானிகளின் அபிப்பிராயமாகவுமுள்ளது.

ஜே.வி.பி. செய்து கொண்டது போல ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை பாராளுமன்றில் அங்கம் பெறும் தமிழ் அரசியல் கட்சிகள் ஆளுங்கட்சியுடன் செய்து கொண்டிருந்தால் வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாக ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் பலவற்றுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றில் அங்கம்பெறும் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கட்சிகளும், மலையகத்தைச் சேர்ந்த கட்சிகளும் ஒன்று சேரும் பட்சத்தில் இருபதுக்கும் மேற்பட்ட ஆசனங்கள் கிடைத்திருக்கும். மேலும் முஸ்லிம் கட்சிகளையும் சேர்ப்பின் அது மேலும் உயரும்.

எனவே இந்த சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் அரச தரப்போடு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றுக்குச் செல்லும் பட்சத்தில் வடக்கு-கிழக்கு விவகாரம் தொடர்பாக ஆக்கபூர்வமானவற்றை எட்டமுனைவதோடு, சிறுபான்மையின மக்கள் நாடளாவிய ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அரசுக்குக் கூடுதல் அழுத்தங்களைக் கொடுக்க முடியுமெனவும் அபிப்பிராயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

ஆளுங்கட்சியின் பலவீனமான நிலையைச் சாதமாகப் பயன்படுத்தி தமக்கிசைவான அரசியல் சூழ்நிலைகளை சிறுபான்மையினக் கட்சிகளினால் ஒன்று சேர்ந்து உருவாக்கியிருக்க முடியும்.

ஆயினும் தமிழ்க் கட்சிகள் மத்தியிலும், முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்குமிடையே நிலவும் குத்து வெட்டுக்கள், கருத்து முரண்பாடுகள் என்பவையே சிறுபான்மையின மக்களது அரசியல் நடவடிக்கைகளைப் பொறுத்தவரை துரதிர்ஷ்டமான சூழ்நிலைகளை ஏற்படுத்தி வருபவையாக இருக்கின்றன.

பழம்பெரும் தமிழ் அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்ற காலம் முதற் கொண்டு, ஐந்துக்குமதிகமான தமிழ் அரசியல் கட்சிகள் இருக்கின்ற இன்றைய காலம் வரை ஒற்றுமையீனமே ஒரு சாபக்கேடாக இருந்து வந்துள்ளது.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' எனப்படுவதுண்டு. ஆனால் தமிழ் அரசியல் கோதாவைப் பொறுத்தவரை ஜனநாயக அரசியலாக இருந்தாலென்ன, ஆயுதப்போராட்டமானாலென்ன ஒருவரையொருவர் முரண்பட்டு நிற்கும் போக்கே முனைப்படைந்து நிற்பதைக் காணமுடிகின்றது.

இந்நிலையில் தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து அழுத்தங்களைக் கொடுப்பது அல்லது அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பது போன்ற விடயங்களை எதிர்பார்ப்பது 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட' கதையாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

மறுபுறத்தே தமிழ் மற்றும் முஸ்லிம், மலையக அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஆளுந்தரப்புடன் துணை நின்றால்கூட, ஏனைய பிரதான சிங்களக்கட்சிகளது நிலைப்பாடு இது விடயத்தில் எப்படியிருக்குமென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் ஆளுந்தரப்பிலிருந்தவர்களோடு தமிழ் அரசியல் கட்சிகள் செய்து கொள்ள முன்வந்த அரசியல் ரீதியான ஒப்பந்தங்களுக்கு நேர்ந்த கதியையும் கவனத்தில் கொள்வது



அவசியமானதாகும்.

இதயசுத்தியோடு மூத்த தமிழ்த்தலைவர்கள் பல தடவைகள் கடந்த கால ஆட்சியாளர்களுடன் உடன்பாடுகளை எட்ட முன்வந்திருந்தனர். அப்போதெல்லாம் அந்த உடன்பாடுகளை எதிரணியிலிருந்த வெளிச்சக்திகளே முறியடிப்பதில் வெற்றிகண்டிருந்தன.

இன்றைய அரசியல் நிலவரத்தைப் பற்றி விமர்சிப்போர் கூட தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிறுபான்மையின கட்சிகள் அரச தரப்போடு ஒன்றிணைந்திருந்தால் சில சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தியிருக்கலாமெனக் கூறுகின்றனர்.

ஆனால் அப்படியொரு நிலை ஏற்பட்டிருந்திருக்குமேயானால் ஆளுந்தரப்புடன் ஓர் உடன்பாட்டை எட்டத்தவறிய எதிர்க்கட்சியான ஐ.தே.க. தனது கைவரிசையைக் காண்பிக்க முன்வந்திருக்கும்.

அத்துடன் மற்றுமொரு பிரதான அரசியல் கட்சியான ஜே.வி.பி. கூட ஐ.தே.க.வுடன் சேர்ந்தோ அல்லது தனித்து நின்றோ ஆளுந்தரப்புக்கும் சிறுபான்மையினக் கட்சிகளுக்குமிடையே ஏற்படக்கூடிய உறவை முறியடிக்க முனைந்திருக்குமென்றே கருதலாம்.

எது எப்படியிருப்பினும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வ காணப்படுவதற்கும் யுத்த நிறுத்தத்துக்குமாக தமிழீழ விடுதலைப் புலிகளையும் உள்ளடக்கிய போச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டியதே மிகவும் இன்றியமையாததாகின்றது.

இதனை உணர்ந்த நிலையிலேயே ஜனாதிபதி சந்திரிகா, வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் நோர்வேயுடனான அனுசரணையுடன் புலிகளுடனான பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதில் தமக்கிருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்துவதை அவதானிக்க முடிகிறது.

இது வரவேற்கத்தக்க ஓர் அணுகுமுறையாகவும், அரசாங்கத்தின் வளைந்து கொடுக்கும் போக்கையுமே வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

கொழும்பிலிருக்கும் சிரேஷ்ட நோர்வே இராஜதந்திரி ஒருவர்கூட தமது தரப்பில் பேச்சுவார்த்தைகளுக்கு உதவுவதில் எவ்வித பின்னடைவோ அல்லது சிக்கலோ காணப்படவில்லை என்பதைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சியை தமது தரப்பு உயிர்த்துடிப்புடையதாகவே நோக்குகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனும், இலங்கை அரசுடனும் நோர்வே தொடர்புகளை வைத்துக்கொண்டிருப்பதாகவும் அந்த நோர்வே இராஜதந்திரி அறிவித்துள்ளார்.

அரசதரப்பு பாராளுமன்றில் தன்னைப் பலப்படுத்திக் கொண்டுள்ள நிலையில் புலிகளுடனான பேச்சுக்கள் பற்றி பிரஸ்தாபித்துள்ளது.

நோர்வேயும் தனது ஆயத்த நிலையை புலிகளுடனான பேச்சுக்களில் மத்தியஸ்தம் வழங்குவது தொடர்பாக வெளிப்படுத்தியுள்ளது.

சர்வதேச சமூகமும் இலங்கையில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட அரசியல், பொருளாதாரப் பின்னடைவுகள் குறித்து கவலை கொண்டதாகவே இருக்கின்றது.

இந்நிலையில் ஆக்கபூர்வமான முயற்சிகள் இனப்பிரச்சனை தொடர்பாக துரிதப்படுத்த வேண்டியதே அவசியமானதாகின்றது.

அரசியல் கோதாவில் அடுத்த கட்ட நடவடிக்கையென்பது வடக்கு-கிழக்கு பிரச்சனைத் தீர்வ தொடர்பான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமாக வெளிவர வேண்டியதே காலத்தின் தேவையாகின்றது. ■

## அதிரடி அய்யாத்துரை



***மாமனிதரின்ர*** கட்சியில எம்.பி.யான விநாயகர், சனம் கஷ்டப்படுறதா கூவிக் கொண்டே தன்ர காரியத்தில கண்ணாக இருக்கிறார் பார்த்தியளே.. உந் தாளுக்கு ரொம்பவும் பிடித்த தொழில் சட்டம் பேசுவது, பிடித்த பொழுதுபோக்கு ஆரம்பத்தில யெண்டால் பாலியல் வல்லுறவைக் கண்டிச்சு அறிக்கை விடுறது. ஆனால் பாருங்கோ மனுஷன் மாறிப் போனார். இப்போ பத்தோடு பதினொன்றாக தமிழ்க்கட்சி தலைவருக்குரிய பண்பை வெளிக்காட்ட ஆரம்பிச்சிட்டார் அவர். அரசாங்கச் செலவுல புது பி.எம்.டபிள்யூ கார் வாங்க ஓடர் செய்திருக்கிறார். விநாயகர் பி.எம்.டபிள்யூ சேர்க்க ஆரம்பிச்சிருக்கார். உந்தாள் கார் வாங்கிறதில எனக்கு பொறாமையெண்டு நினைக்காதையுங்கோ. வயசான காலத்தில விநாயகர் நல்லா இருக்கட்டும். ரத்தம் சிந்தி வியர்வை சிந்தி சனத்துக்காக உழைக்கிறதா விடுகிற ரீல்தான் சகிக்குதில்ல.

***யாழ்ப்பாணத்தில பிஸினஸ்கார*** எம்.பி.யாரின்ர சண்டித்தனம் தலைக்கு மேல போகுதெண்டு சனம் கதைக்குது. 'வலம்புரி' காரரை மிரட்டி தன்ர வழமையான குணத்தை காண் பிக்கப்பார்த்தவர். குடாநாட்டில எந்தவொரு பத்திரிகையையும் தலையெடுக்க விடாம வித்தை காட்டுற 'ஷப்ரா'க்களுக்கு இப்போ மகேஸ்வரர் தான் செல்லப்பிள்ளை. உதில பாருங்கோ உந்தாள் வலம்புரி ஆசிரியருக்கு கொலை மிரட்டல் விட்டவர். அது பத்திரிகை யிலயும் வந்து புகார் கடிதமும் அனுப்பினவையள். ஆனால் ஊடக வியலாளரின்ர பாதுகாப்புக்கெண்டு இருக்கிற சங்கத்தார் எவரும் உந்த சண்டித்தனத்தை கண்டுகொள்ளவேயில்ல. தமிழருக் கென்றிருக்கிற ஒன்றியத்தார் உதை கண்டிக்க மாட்டினம் எண்டு நினைச்சனான். சரியாப்போச்சு. உந்த சங்கத்தின்ர பெரியவர்களுக்கு 'விடியல்' பத்திரிகையால இலாபமிருக்கு. அதனால மூச்சுகாட்டாம விட்டிட்டினம். சுதந்திர ஊடக இயக்கமும் உதே மாதிரித்தான். அரச தரப்பு. எம்.பி. ஒருவர் உந்த மாதிரி மிரட்டியிருந்தால், அறிக்கை விட்டு ஆரவாரப்படுத்தியிருப்பினம். உந்தாக்கள் ஆர்ப் பாட்டம் நடத்த கூப்பிடேக்க உச்சி வெயிலில ரயில் நிலையம் முன்னால போய் நின்று கூத்துப் போடுறவைக்கு உதெல்லாம் ஒரு பாடம்!

***கொட்டாஞ்சேனை முதல்*** தெஹிவளை வரை எல்லா டியூட்டரிகளிலயும் உருப்படியா படிப்பு நடக்குதோ இல்லையோ, ரோட்டு ரோமியோக்களின்ர ஜொள்ளு மட்டும் தாராளமா நடக்குது. தலைநகரில எங்கட தமிழ்ப் பொடியன்களின்ர 'சொல்லழகை' சகிக்க முடியாமல் பல பெண்குஞ்சுகள் அழுதுகொண்டு வீட்டுக்குப் போகுதுகள். இதே வேகத்துல உந்த ஜொள்ளு தொடருமெண்டால், இந்தியாவில மாதிரி 'ஈவ் டீசிங்' கொடுமையால் யுவதி தற்கொலை யெண்டு பேப்பரில நியூஸ் படிக்க அதிக நாளாகாது போல கிடக்கு.

***காலம் ரொம்பத்தான் மாறிப்போச்சு*** பார்த்தியளே.. முன்பென்றால் ஏடாகூடமான சமாசாரங்கள் ஆங்கிலப்படத்துலதான் வரும். இப்போ தலைநகரில மட்டும் மூன்று தமிழ்ப் படங்கள் திரை யரங்குகளை 'அலங்கரிக்குது'. மொத்தமும் கண்றாவிகள்! புரிஞ்ச விஷயத்த புரியாத மொழியில பார்த்த சனத்துக்கு தமிழ் நாட்டுக்கார ரின்ர புண்ணியத்துல கல்தோன்றி மண்தோன்றா காலத்துக்குமுன் தோன்றிய மூத்த தமிழில் செக்ஸ்...! ■

## உண்மைத் தொடர் 24

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

**கை**யில் இருந்த தேநீரையும் மறந்துவிட்டு ஹொலிவூட் திரைப்படம் ஒன்றில் மூழ்கிக்கிடந்தான் ஹிட்லர். அமெரிக்கர்களின் யுத்தத் திறனைப் போற்றி எடுக்கப்பட்ட படம் அது. விமானங்கள் குண்டு போடுவதும் எதிரிகளின் குடியிருப்புகளை தாங்கிகள் அழிப்பதுமான பெரும் புகைமண்டலத்தோடு படம் ஓடிக்கொண்டிருந்தது. கண்ணிமைக்காமல் அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு அருகில் ஈவா அமர்ந்திருப்பது கூட மறந்திருந்தது. திரைப்படத்தின் இடைநடுவே வந்த காதல் காட்சிதான் ஹிட்லரை இந்த உலகத்துக்கு மீண்டும் அழைத்து வந்தது.

அவற்றை மிகவும் ஆவலோடு பார்த்த ஈவா, ஹிட்லரின் கையை இறுக்கமாக பற்றியிருந்தாள். படத்தில் கதாநாயகியை கட்டிலில் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தான் ஹொலிவூட் கதாநாயகன். மெலிய இசையும் கலவி மயக்கத்தில் அந்தக் கதாநாயகியின் நடிப்புச் சிணுங்கலும் ஈவா பிரவனை வெகுவாக வெப்பமேற்றி விட்டிருந்தது. அந்தக் கதாநாயகியின் லீலைகள் தெளிவாக எல்லைமீறிக்கொண்டிருந்தன.

"அமெரிக்கர்களுக்கு செக்ஸைக் கூட முறையாகச் செய்யத்தெரியாது" என்று கூறி வாய்விட்டுச்சிரித்தான் ஹிட்லர். இப்பொழுது அவனது மடியில் பாதி மயக்கத்தோடு ஈவா சாய்ந்திருந்தாள். அவனால் அந்தத் திரைப்படத்தை ரசிக்க முடியவில்லை.

எப்பொழுது வேண்டுமானாலும் வசதியாகத் திறந்து கொள்வதற்கேற்றவாறே அமைந்திருந்த ஈவாவின் மேற்சட்டை இலகுவாக ஹிட்லரின் கைகளுக்கு மாறியது. தொலைக்காட்சியில் கறுப்பு வெள்ளையாகத் தெரிந்த கதாநாயகனும், கதாநாயகியும் சர்வ சுதந்திரமாக ஒருவரை ஒருவர் தின்ற வைத்துக் கொண்டிருந்தனர். அந்த கதநாயகிமேல் பொறாமைப் பட்டுக்கொள்வது போல உள்றிக் கொண்டே நீண்ட நாற்காலியில் சாய்ந்தாள் ஈவா. அவளது அடிவயிற்றை அழுத்திப் பிடித்தான் ஹிட்லர். அந்தக் கையை மேலும் அழுத்தினாள் அவள்.

★★★

**அ**ரசாங்கத்தின் எதிராளிகள் சித்திரவதை முகாம்களில் கொடுமை செய்யப்படுவதை வீடியோ கெமராக்கள் மூலம் ஒளிப்பதிவு செய்யுமாறு ஹிட்லர் உத்தரவிட்டான். அதன்படி பல முகாம்களில் சிறுவர்கள், பெண்கள் என்று பலரும் துடிக்கத் துடிக்க சாகடிக்கப்பட்டதை ஹிட்லர் வீடியோவில் பார்த்து மகிழ்ந்தான். ஆண்களை பாரிய மின்சாரக் கம்பிகளை பிடிக்கச் செய்து அதன்மூலம் அவர்களின் உடலில் உயர்வலு கொண்ட மின்சாரம் பாயும் போது ஏற்படும் துடிதுடிப்பை ஹிட்லர் வெகுவாக ரசித்துப் பார்த்தான். ஹிட்லரின் கொடூரம், அவனது தனிப்பட்ட பழக்க வழக்கங்கள் விசித்திரமானவை.

அவனது வாழ்வில் அதிகாரம்தான் உயிர். பொழுதுபோக்கு, செக்ஸ் என்று எதுவானாலும் இரண்டாம் பட்சம்தான். ஆனால் தனது அதிகார வெறிக்கு மத்தியில்கூட அவன் இவை எதனையும் விட்டு வைக்கவில்லை.

அவனது காரியாலய மேசை ஒரு போதும் அழகாக தாய்மையாக இருக்காது. பொருட்கள் அங்குமிங்குமாக சிதறுண்டு காணப்படும். செயலாளர்கள் அவற்றை எத்தனை தடவை அழகுபடுத்தி வைத்தாலும் அவனால் தனது மேசையை ஒழுங்காக வைத்திருக்க முடிவதில்லை.

ஹிட்லர் அலுவலக நேரங்களில் எப்பொழுதும் மூன்று நிறங்களில் பேனாக்களை பாவிப்பான். ஜனாதிபதி என்ற வகையில் எழுதும் குறிப்புகள், கையொப்பமிடும் ஆவணங்களுக்காக ஒரு நிறத்திலும், கட்சித் தலைவர் என்ற வகையான கடிதங்களுக்கு வேறொரு நிறபேனாவையும். ஆயுதப்படைகளின் தளபதி என்பதற்காக மற்றொரு நிறத்திலும் பேனாவை உபயோகிப்பான்.

கேக் மற்றும் சொக்லேட் வகைகளை விரும்பி சாப்பிட்டபோதும் மரக்கறி வகைகளே அவனது பிரதான உணவு என்று சொல்லும் அளவு அவன் மறக்கறிப் பிரியனாக இருந்தான். தேநீருக்கு அதிகளவு இனிப்பு ஹிட்லருக்குத் தேவை. மாலை நேரங்களில் கூடுமானவரையில் நண்பர்களுடன் கழிப்பான். திரைப்படங்கள் பார்ப்பான். தன்னை சந்திக்க வருபவர்களுடன் விருந்துபசாரங்களில் கலந்து கொள்வதை அவன் விரும்பினான்.

பல இலட்சம் பேரை ஈவிரக்கமின்றி கொன்று குவித்த ஹிட்லர் கலையம்சங்களில்கூட ஆர்வமானவன். தனது இருப்பிடங்களில் போடப்பட்டிருக்கும் மரத்தளபாடங்கள் சிறந்த சிற்பவேலைப்பாடுகளுடன் இருக்க வேண்டுமென கட்டளையிட்டிருந்தான்.

இவை எல்லாவற்றையும் விட கட்டடக் கலையில் ஹிட்லருக்கு அதிக ஆர்வமும் ரசனையும் இருந்தது. சிறுவயதில் அவன் கட்டடக்கலைக் கல்லூரி ஒன்றுக்கான போட்டிப்பரீட்சையில் இருமுறை ஃபெயிலானான். அந்தத் தாக்கத்தின் விளைவாகவோ என்னவோ ஜெர்மனியின் கட்டடக்கலை உலகம் போற்றும் வகையில் இருக்க வேண்டும் என்பது அவனுடைய அவா.

நாட்டின் அரசாங்கக் கட்டடங்களை மறுசீரமைக்கவும், புதிய கட்டடங்களை வடிவமைக்கவும் என இரண்டு ஆணைக் குழுக்களை ஹிட்லர் நியமித்தான். இரண்டரை இலட்சம் பேர் ஒன்றாக இருக்கக் கூடிய கேட்போர் கூடம் ஒன்றை கட்டுவித்தான். அத்தோடு மியூனிச்சில் உள்ள நாஸி கட்சிக்காரியாலயத்தையும் மீளமைப்புச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. சில கட்டடங்களுக்கான மூலப்பொருட்கள் பெருமளவு செலவில் இத்தாலி உட்பட பலநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்டன.

இதே காலப்பகுதியில் சகல அரசாங்கக் கட்டடங்களிலும் கழுகுச் சின்னத்திலான கொடியும் ஹிட்லரின் சட்டைக் கையில் பொறிக்கப்பட்டிருக்கும் சுவஸ்திகா சின்னமும் அடங்கிய கொடிகள் பறக்கவிடப்படவேண்டுமென உத்தரவிட்டான்.

எப்பொழுதுமே ஜெர்மனியர்களின் வாழ்வும், நாடும், சமூக கலாசார துறைகளும் உலகின் சகலரையும் விஞ்சியதாக இருக்க வேண்டும் என்ற வெறித்தனமான ஆசை ஹிட்லருக்குள் இருந்தது. இதுவே அவனை யுத்தத்தின் பால் இட்டுச் செல்லக் காரணமாக இருந்ததென வரலாற்றாசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



1939ம் ஆண்டின் பிற்பகுதியாகும் போது யூதர்கள் தொடர்பான பிரச்சனைகள் வேகமாக தலை தூக்க ஆரம்பித்தன. ஜெர்மனியின் சமூக அமைதிக்கு பங்கம் விளைவித்ததாகக் கூறி ஆரம்பத்தில் நூற்றுக்கணக்கான யூதர்கள் சிறைபிடிக்கப்பட்டார்கள். நிலமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு போனது.

இத்தகையதொரு பின்னணியில் ஜெர்மனி அதன் சில அண்டை நாடுகளுடனான கொள்கையால் இறுக்கமான நடைமுறைகளை பின்பற்ற ஆரம்பித்திருந்தது. குறிப்பாக பிரான்ஸ் முறுகிக் கொண்டிருந்தது.

மியுனிச்சின் தென்பகுதியில் உள்ள ஒரு யூத வழிபாட்டுத் தளத்துக்குள் புகுந்த எஸ்.எஸ். படையினர் ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அங்கிருந்த மத குருமார் இருவரை கடத்திச் சென்றனர். அவர்கள் இருவரும் அன்றைய தினம் இரவே கொன்று புதைக்கப்பட்டனர். இந்த சம்பவம் மியுனிச்சில் உள்ள யூத இனத்தவர்கள் மத்தியில் கடும் அச்சத்தை தோற்றுவித்தது. ஆனால் தட்டிக் கேட்கவோ ஆர்ப்பாட்டம் நடத்தவோ யாரும் தயாராக இல்லை. இது நடைபெற்று ஒரு வாரம் கழிவதற்குள் யூதச் சிறுவர்கள் பயிலும் பாடசாலை ஒன்றில் தீப் பிடித்ததாக அறிவிக்கப்பட்டது.

**வருவான்...**

**ஷானு**

---

## நேபாளத்தின் 'கடவுள் குமாரி'க்கு சிக்கல்



**நே**பாளத்தின் 'கடவுள் குமாரி'க்கு இப்போது சிக்கல் வந்திருக்கிறது.

கடந்த 300 வருடங்களாக எவ்வித தடங்கலும் இல்லாமல் மாறி மாறி வந்து கொண்டிருந்த 'வாழும் கடவுளுக்கு' இப்போது பெரும் நெருக்கடி.

நேபாள மக்களைத் தவிர நேபாளத்திற்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்தது. 'வாழும் கடவுள் குமாரி'தான்.

யார் இந்த 'வாழும் கடவுள் குமாரி'?

நேபாள மன்னரின் அரண்மனைப் பூசாரிகள் 'கடவுள் குமாரி'யைத் தேர்வு செய்வதற்கு சில பயங்கரமான விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள்.

பொருத்தமான 4வயது நிரம்பிய சிறுமியை குடும்பத்தில் இருந்து பிரித்து பூசாரிகள் தூக்கிக் கொண்டு போய் விடுவார்கள்.

தர்பார் சதுக்கத்திற்கு அருகில் இருக்கும் 'குமாரி சவுக்' என்கின்ற மூன்று மாடி பழங்கால வீட்டில் அந்தச் சிறுமியை வைத்து விடுவார்கள். பருவம் அடையும் வரை அந்தச் சிறுமி அங்குதான் இருக்க வேண்டும்.

இந்தச் சிறுமியைத்தான் 'வாழும் கடவுள் குமாரி' என்று நேபாளிகள் வணங்க வேண்டும்.

திருவிழாக் காலங்களில் மட்டும் இந்தச் சிறுமிவெளியே வந்து காட்சி அளிப்பாள். நிறைய நகைகளும் கிரீடமும் அணிவிக்கப்பட்டு நெற்றியில் மூன்றாவது கண்ணும் வரைந்திருப்பார்கள்.

இப்போதுள்ள 'குமாரி' வயதுக்கு வந்து விட்டதால் புதிய கடவுளைத் தேடுகின்றனர்.

ஆனால் மனித உரிமைக்குழுவினரின் கடுமையான எதிர்ப்புக் காரணமாக புதிய கடவுள் தேர்வு தள்ளிப் போய்க் கொண்டிருக்கிறது. அரசவைப் பூசாரிகள் எப்படியும் வருகின்ற மாதத்திற்குள் புதிய 'கடவுள் குமாரி'யைத் தேர்ந்தெடுத்து விடுவோம் என்று கூறியுள்ளனர். ■

---

## பழிவாங்கும் பெண்களும் கதிகலங்கும் காதலர்களும்

**ப**ழிவாங்குவதில் ஆண்களை விடப் பெண்கள் தான் முன்னணியில் இருக்கிறார்கள்.

அதுவும் காதல் விவகாரத்தில்தான் இந்தப் பழிக்குப் பழி அதிகளவில் அதிகரித்து வருகிறது. காதலன் தன்னை ஏமாற்றி விட்டால் தற்போதைய காதலிகள் தற்கொலைக்கு முயல்வதில்லை. மாறாகத் தன்னை ஏமாற்றியவனை எப்படியாவது பழிதீர்த்தே ஆகவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கிறார்கள்.

காதலன் வேறு ஒருத்தியை மணந்து வேறு ஒரு பெண்ணை மணம் முடித்துக் குடும்பம் நடத்துவதை அறிந்தால் பாதிக்கப்பட்ட பெண் காதலனைப் பழி வாங்க எதையும் செய்யத் துணிந்து விடுகிறார்.

எப்படியாவது பழைய காதலனைச் சந்தித்து புது உறவை ஏற்படுத்தி காதலனது குடும்பத்திற்குள் குழப்பத்தை உருவாக்கி விடுகிறார்கள். இது விவாகரத்து வரைச் சென்றும் விடுகிறது.

இன்னும் சில காதலிகள் தம்மை ஏமாற்றியவர்களை கொலை செய்யக்கூடத் தயங்குவதில்லை. பழைய காதலனுடன் பகையை மறந்து பழகுவது போல் நடித்து சாப்பாட்டில் விஷம் கலந்தோ அல்லது துப்பாக்கியால் சுட்டோ பழி வாங்கி விடுகிறார்கள்.

பெண்கள் இத்தகைய பழி தீர்க்கும் முயற்சியில் ஈடுபடக்காரணம் என்ன?

தனது சிறுவயதில் இருந்தே ஆண்களால் அடிமையாக நடத்தப்பட்ட வேதனையில் சிக்கித் தவித்த அவள், பருவ வயதிலும் ஏமாற்றப்படுவதால் அவளது பழிவாங்கும் எண்ணம் தலை தூக்குகிறது. இதற்காக அவள் எதையும் இழக்கத் தயாராகி விடுகிறாள்.

இப்படிக் காதலனால் வஞ்சிக்கப்பட்ட 63 சதவீத காதலிகள் பழிக்குப் பழியில் ஈடுபட்டிருப்பது சமீபத்திய ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. இந்தச் செயல்களில் அதிரடியாக இறங்கியிருப்பது 15 முதல் 24 வயது வரையான இளம் பெண்கள் தானாம்.

பெண்களிடையே அதிகரித்து வரும் இந்தப் பழிவாங்கும் போக்கு மேலை நாட்டு வாலிபர்களைக் கொஞ்சம் கதிகலங்க வைத்திருக்கிறது. ■

---

## வெள்ளை மாளிகையை நூலகமாக்கியவர்

**இ**துவரை அமெரிக்க அதிபர்களின் அலுவலகமாகவும் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாகவும் மட்டுமே இருந்துவந்த அமெரிக்க வெள்ளை மாளிகையை நூலகமாகவே மாற்றி விட்டார் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷின் மனைவியான லாரா புஷ்.

லாரா ஒரு புத்தகப் பிரியை எப்போதும் இவரது அருகில் ஒரு புத்தகம் இருந்து கொண்டேதான் இருக்கும். கையில் புத்தகம் இல்லாவிட்டால் அவ்வளவுதான் எதையோ இழந்தது போல் காணப்படுவார்.

தினமும் இவர் ஏராளமான புத்தகங்களை வாசித்ததாலோ என்னவோ வெள்ளை மாளிகையில் புத்தகங்கள் குவிந்து விட்டன.

உடனே அவ்வளவு புத்தகங்களைக் கொண்டு நூலகம் அமைக்க முடிவு செய்து, கணவரின் அனுமதியைக் கேட்டால் அவரும் இதற்குச் சம்மதம் தெரிவிக்க, பெரிய நூலகத்தை வெள்ளை மாளிகையில் உருவாக்கி விட்டார் லாரா.

தனது அத்தனை வெற்றிகளுக்கும் காரணம் லாராதான் எனக் கூறி வரும் புஷ்ஷிற்கு அவ்வப்போது ஆலோசனையும் கூறி வருகிறார் லாரா.

புதிய திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு முன்பும் நாட்டில் நிலவும் சில முக்கிய பிரச்சனைகளை எப்படித் தீர்ப்பது என்பது பற்றியும் தனது மனைவியிடம் ஆலோசனை கேட்பார் புஷ்.



"நான் ஆசிரியையாக இருந்தபோதும் சரி, இப்போதும் சரி நான் என் வழியில் தான் போய்க் கொண்டிருக்கிறேன். ஜனாதிபதியின் மனைவி என்பதை விட புஷ் என்ற சாதாரண மனிதனின் மனைவி என்று சொல்வதுதான் எனக்குப் பெருமையாக இருக்கிறது" என்று தெரிவித்துள்ளார் லாரா. ■

---

## ஏலம் போன மடோனாவின் மானம்

**உ**லகப்புகழ்பெற்ற பொப் பாடகி மடோனாவின் மானம் காத்த ஆடைகள் மற்றும் அவள் உபயோகித்த பொருட்களை ஓர் இணையத்தள நிறுவனம் அண்மையில் ஏலம் விட்டது.

உலகில் உள்ள ஆயிரக்கணக்கான மடோனாவின் தீவிர விசிறிகள் இந்த ஏலத்தில் கலந்து கொண்டனர். இந்த ஏலத்தில் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்ட பொருள் என்ன தெரியுமா?

மடோனாவின் பிரா.அதிக வேலைப்பாடுகளுடன் அமைந்த இந்த உள்ளாடை சுமார் 20 இலட்சம் ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்டதாம்.

இதைவிட மடோனாவின் பிரெஸ்லெட், அவர் கைப்பட எழுதப்பட்ட பாடல் ஆகியவை முறையே 18, 17 இலட்சத்துக்கு ஏலம் எடுக்கப்பட்டன. ■

# தகவல் பெட்டி





## சாகசச் சிறுமி

← ஒற்றைச் சக்கர சைக்கிளில் அமர்ந்து கொண்டு ஊர்வலத்தின் மத்தியில் அநாயாசமாக மிதந்து வரும் இந்தச் சாகசச் சிறுமியின் பெயர் மியாமி. ஹொங்கொங்கைச் சேர்ந்தவள் இவள்.

அண்மையில் ஹொங்கொங்கில் உள்ள 'செங்ஷா' தீவில் நடந்த ரொட்டித் திருவிழாவின்போதுதான், இந்தச் சாகசத்தை நிகழ்த்திக் காட்டினாள் மியாமி.

எவ்வித பயமோ பதற்றமோ இல்லாமல் ஒற்றைச் சக்கர வண்டியில் அமர்ந்து ஊர்வலத்தினரைப் பார்த்தபடி சைக்கிள் ஓட்டி அனைவரது மனங்களிலும் உற்சாகம் கொள்ள வைத்தாள்.


இந்தத் திருவிழாவின்போது பல்வேறு நிகழ்ச்சிகளும் சாகசங்களும் நடந்தன. இருந்தபோதிலும் பலரையும் கவர்ந்தது சிறுமி மியாமியின் சாகசம் தான்.

## ரிக்ஷா ஓட்டும் பெண்கள்

↑ பயணிகளை பின்னால் உட்கார வைத்து காலால் மிதித்துச் செல்லும் ரிக்ஷாவை இதுவரை காலமும் ஆண்கள்தான் ஓட்டி வந்தார்கள்.

கஷ்டமான இந்த ரிக்ஷா ஓட்டும் தொழிலில் இப்போது பெண்களும் இறங்கியுள்ளார்கள். வறுமைக் கோட்டுக்குக்கீழே வாழும் பெண்கள், தமது கணவன்மாரின் உழைப்பை மட்டும் நம்பியிருக்காமல் தாமும் கஷ்டப்பட்டு உழைத்துத் தமது குடும்பங்களை நல்ல நிலைக்குக் கொண்டு வர முயற்சித்து வருகிறார்கள்.

இந்த ரிக்ஷாக்கள் இந்தியாவிலும், பங்களா தேசிலும்தான் அதிகமாக உள்ளன. இப்போது இந்தியாவில் அதுவும் தமிழகத்தில் பெண் ரிக்ஷாக் காரர்கள் அதிகமாகி வருகிறார்கள்.



## தகர்க்கப்படும் கட்டடம்

↑ இலண்டன் மாநகரில் உள்ள 22 மாடிக் கட்டடம் கட்டப்பட்டு பல வருடங்களாகி விட்டன. இருந்தும் கட்டடம் உடைந்து விழாதபடி நின்றது. பார்த்தார்கள் இலண்டன் மாநகர சபையினர். கட்டடத்திற்கான காலம் முடிவடைந்து விட்டது.

எனவே அந்தக் கட்டடத்தைத் தகர்த்து விட முடிவு செய்தனர். உடனே சிறந்த பொறியியல் நிபுணர்கள் சிலரை வரவழைத்து அருகில் உள்ள கட்டடங்களுக்கோ, மனித உயிர்களுக்கோ எவ்வித ஆபத்தும் ஏற்படாதபடி சாமார்த்தியமாகத் தகர்த்து விட்டனர்.

பழைய கட்டடம் வெடித்துச் சிதறும் காட்சிதான் இது.

## ஆகாயச் சுழியோட்டம்

↓ ஆகாய வெளியில் பாய்ந்து சுழியோடுவதற்கான போட்டி ஒன்று மலேசியாவின் தலை நகரான கோலாலம்பூரில் வருடா வருடம் நடைபெற்று வருகிறது. உலகிலேயே அதி உயரமான; கோலாலம்பூரிலுள்ள பெட்ரோனாஸ் கோபுரங்களின் உச்சியிலிருந்து பரசூட்டின் உதவியுடன் கீழே தாவுவது தான் இப் போட்டியாகும்.

கடந்த மாதம் 28ம் திகதி அன்று இடம்பெற்ற பயிற்சியின்போது, அமெரிக்காவைச் சேர்ந்த மார்க் லிச்சில் என்பவர் 452 மீட்டர் (11,483 அடி) உயரமான கோபுரத்திலிருந்து குதித்துப் பயிற்சிபெறும்போது பிடிக்கப்பட்ட படம் இது.





## நடமாடும் வ(ண்டி)ங்கி

← மோட்டார் சைக்கிளும், ஆட்டோ ரிக்ஷாவும் சேர்ந்தது போன்ற ஒரு வாகனத்தின் பெயர் ஃபட் ஃபட். வட இந்தியாவில் அதிகம் ஒடும். இந்த வாகனத்தைப் போன்ற வாகனங்கள் தாய்லாந்திலும் உள்ளன.


தாய்லாந்து நாட்டில் இதன் பெயர் 'டக்டக்'.படத்தில் காணப்படுவது தான் 'டக்டக்'. இது சாதாரண 'டக்டக்' கிடையாது. நடமாடும் வங்கியாகச் செயல்படும் வண்டிதான் படத்தில் இருக்கிறது.

## பின்பக்கத் தாண்டல்

→ சீனப் பெருஞ்சுவர், பெர்லின் சுவர் என்று உலகப் புகழ்பெற்ற உயரமான சுவர்களை மோட்டார் சைக்கிள்கள் மூலம் பாய்ந்து, கடந்து சாதனை புரிந்திருப்பதை பார்த்தும் கேட்டும் படித்தும் இருப்பீர்கள்.

சீனாவைச் சேர்ந்த சாகசக்காரர் ஒருவர் மற்றெல்லாரையும் விடச் சற்று வித்தியாசமாக சாதனை செய்ய ஆசைப்பட்டுச் சாதித்தும் விட்டார்.

இவர் பின்பக்கமாக மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்து கொண்டு சீனப் பெருஞ்சுவரைத் தாண்டிச் சாதனை படைத்துள்ளார்.



# சினிவிசிட்

## காதோடு சொல்லுகிறோம்

'இளைய' இசையமைப்பாளரின் இளைய மகன் காதலில் விழுந்து விட்டாராம். இவரது செல்லிடப் பேசி சிணுங்கினால் போதும் இவரது முகம் பிரகாசமாகி விடுகிறதாம்.

எவ்வளவு பிஸியான வேலையில் இருந்தாலும் அதை அப்படியே போட்டு விட்டு மணிக்கணக்கில் காதலியுடன் அரட்டையடித்து வருகிறாராம். யாராவது சந்தேகமாகப் பார்த்தால், தனது நண்பர் என்று கூறி மழுப்பி விடுகிறாராம்.

முன்னொரு காலத்தில் வைகையில் இருந்து புயலாய் வந்த நடிகரின் வளர்ச்சியைக்கண்டு எரிச்சலடைந்த உதை மணி அவரை 'கருவாயன்' என்று கண்டபடி ஏசி வந்தார். இப்போது வைகைப் புயலுக்குப் படவாய்ப்புக்கள் ஏகத்திற்கும் குறைந்து விட்டனவாம். இதற்குக் காரணமான 'விவேக' நடிகர் மீது கடுப்பில் இருக்கும் அந்தப்புயல் 'அவன் என்ன நடிக்கிறான்?' என்று எரிச்சல்பட்டுப் பேசி வருகிறாராம்.

'அனு'வான முன்னாள் கவர்ச்சி நடிகை பார்ப்போரிடம் எல்லாம் சவால் விட்டுக் கொண்டிருக்கிறாராம். என்னவென்று தெரியுமா? 'நான் தான் வெற்றிகரமான கவர்ச்சி நடிகையாக வரமுடியலை. என் மகனை அப்படி ஆக்கியே தீருவேன்' என்றும் அந்த 'கும்' நடிகை என்ன ஆட்டம் ஆடிறா, என் மகனோட 'அபிநயத்துக்கு முன்னால வரமுடியுமா?' என்று தானாம்.

'ரயில்' நடிகையின் மனேஜர் தயாரிக்கும் பக்திப் படமொன்றில் இரண்டெழுத்து இளம் நடிகர் ஒருவரை நாயகனாக்கியிருந்தார்கள். அண்மையில் தயாரிப்பாளரான அந்த மனேஜரை அழைத்து விருந்து வைத்தது நட்சத்திரக்குடும்பம். விடிய விடிய நடந்த அந்த விருந்தில் சொக்கிப் போன அந்தத் தயாரிப்பாளர் முதலில் ஒப்பந்தமான தனது படக் கதாநாயகனை நீக்கி விட்டு, நட்சத்திரக் குடும்பத்தின் புதிய மாப்பிள்ளைக்கு அந்த வாய்ப்பை வழங்கிவிட்டாராம்.

## பலூன் பயங்கரம்

'இதயம்' படம் முதல் 'காதலர் தினம்' வரை ஒவ்வொரு படத்திலும் பிரமாண்டம் காட்டி அசத்தும் இயக்குநர் கதிர், தற்போது 'காதல் வைரஸ்' படத்தை இயக்கி வருகிறார்.

இப்படத்திற்காக அண்மையில் இராட்சத பலூனைப் பயன்படுத்தி சில காட்சிகளைப் படமாக்கவிருந்தார். இதற்காக பலூனில் ஏறி ஒத்திகையில் ஈடுபட்டபோது, பலூன், ட்ரான்ஸ்ஃபோமர் ஒன்றில் மோதி வெடித்தது!

தெய்வாதீனமாக இந்தச் சம்பவத்தில் யாருக்கும் பெரிதாக எதுவும் ஏற்பட வில்லை.

### முகப்பில்

மம்முட்டி

சொர்ணா




## தேவாவின் உதவி

தன்னிடம் வேலை பார்ப்பவர்களை வேலை முடிந்ததும் உதறி விடுவது தமிழ்த் திரையுலகில் சகஜமான ஒன்று. ஆனால் தேனிசைத் தென்றல் தேவா செய்திருப்பதைப் பாருங்கள்.

தனது குழுவில் பணியாற்றும் தம்பிகளுக்கு கார், வீடு என வாங்கிக் கொடுத்திருக்கும் தேவா, குழுவில் பணியாற்றும் ஏனையவர்களுக்கு, சென்னை புறநகர்ப்பகுதியில் ஏக்கர் கணக்கில் நிலம் வாங்கி, அதை ஒவ்வொருவருக்கும் பிரித்துக் கொடுத்துள்ளார். அது மட்டுமன்றி வீடு கட்டவும் கடனுக்கு ஒழுங்கு செய்து கொடுத்துள்ளார்.

## நிற்பதும் நடப்பதுவும்

மணிவண்ணன் இயக்கத்தில் சத்யராஜ் பல கெட்-அப்களில் நடிக்கும் 'ஆண்டான் அடிமை' படத்தின் படப்பிடிப்புக்கள் பரபரப்பாக நடக்கும். பின் சில மாதங்கள் நின்று விடும். எனினும் படப்பிடிப்புக்கள் முழுதாக முடிவடையவில்லை.

காரணம் பணத்தட்டுப்பாடு என்கிறார் படத்தின் இயக்குநரான மணிவண்ணன்.

## குறைத்தார் ரம்யா

தமிழ்த் திரையுலகில் ஒரு பாடலுக்கு கதாநாயகிகள் நடனமாடுவது தற்போது சாதாரணமாகி விட்டது. அதுவும் ஒரு நடிகையே பல படங்களில் ஒரு பாடல் காட்சிகளில் நடனமாடுவதும் உண்டு.

இந்த வகையில் அதிக படங்களில் ஒரு பாடல் காட்சியில் நடனமாடியவர் என்ற பெருமை ரம்யா கிருஷ்ணனையே சேரும். ஒரு பாடல் காட்சியில் நடனமாட 5 இலட்சம் சம்பளம் பெற்றுவந்த ரம்யா இப்போது ஒரு பாடல் காட்சியில் நடனமாட இப்போது வாங்குவது 2 இலட்சம்.


சாய்குமார்-மான்யா
படம்: சிங்கத்தமிழன்


முரளி-லைலா
படம்: காமராசு


பிரியா ரஞ்சித்

## மாயமான மலையாள மங்கை

'மிஸ் திருவனந்தபுரம்' அழகிப் பட்டம் வென்ற-மலையாள இறக்குமதி சொர்ணா அறிமுகமானது தமிழில். மனமனவென்று மூன்று நான்கு படங்களில் இவர் நடித்தாலும் அதன்பின் இவருக்குப்பட வாய்ப்புக்கள் வரவில்லை.

பெரிய திரை கைகொடுக்காவிட்டால் என்ன, சின்னத்திரை இருக்கிறதே என்று அங்கு சென்றார். ஓரிரு தொடர்களுடன் காணாமல் போனார்.

இப்போது சொர்ணா எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை.

## பாரதிராஜாவின் 'ஆத்தா'

'கடல்பூக்கள்' படத்தை அடுத்து கிராமத்துக்குத் திரும்பும் பாரதிராஜா தனது படத்திற்கு வைத்துள்ள பெயர் 'ஆத்தா'. அறுபது வயதுக் கிழவிதான் படத்தின் நாயகி.

இந்த வேடத்தில் முதலில் தனது முதல்பட நாயகியான ஸ்ரீதேவியை நடிக்க வைக்க விரும்பினார் பாரதிராஜா. அவர் மறுத்து விட்டதனே தனது இரண்டாவது பட நாயகியான ராதிகாவை வைத்து இயக்கவுள்ளார்.

## ரோஜாவின் 'இரண்டுபேர்'

திரைப்படக்கல்லூரி மாணவர்களுக்கு ஒரு மதிப்பை ஏற்படுத்தியவர் ஆபாவாணன். சிறிய இடைவெளிக்குப்பின் இவர் பிரமாண்டமாகத் தயாரிக்கும் படம் 'இரண்டு பேர்'.

லேடி ஜேம்ஸ்பொண்ட் பாணியிலான இந்தப் படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார் ரோஜா.



அர்ஜுன்-சாக்ஷி
படம்: வேதா

## மினி சினி

* உதயசங்கர் இயக்கத்தில் 'தவசி' படத்தில் நடிக்கும் விஜயகாந்த் அடுத்து 'தீனா' படத்தை இயக்கிய முருகதாஸ் இயக்கும் படத்தில் நடிக்கவுள்ளார்.

* செந்தில்நாதன் இயக்கும் 'ஆடி 18' என்ற பக்திப் படத்தில் அம்மனாக நடிக்க முதலில் ரம்யா கிருஷ்ணனை அணுகினார்கள். இப்போது அவருக்குப் பதில் பிரேமாவை அம்மனாக நடிக்க வைத்துள்ளனர்.

* மணிரத்னம் இயக்கும் 'மஞ்சள் குடை' படத்தில் தெலுங்கு நடிகர் சக்கரவர்த்தியை முக்கிய வேடமொன்றில் நடிக்க வைக்கப்போகிறார்.

* லிவிங்ஸ்டன் கதாநாயகனாக நடிக்கும் 'லேமன் அண்ட் ஜெண்டில்மேன்' படத்தில் லிவிக்கு ஜோடியாக புதுமுகம் விலாசினி நடிக்கிறார்.

* சமீபத்தில் வெளியாகி வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கும் 'தில்' படக்கூட்டணியான விக்ரம்-தரணி கூட்டணி மறுபடி ஒன்று சேர்ந்து புதிய படமொன்றைத் தரவுள்ளது.

* கே.ராஜன் தயாரிப்பில் மும்தாஜ் இரட்டை வேடங்களில் நடிக்கும் 'மும்தாஜ்' படம் பாதியில் நிறுத்தப்பட்டு விட்டது. இப்படம் மறுபடி தொடருமா என்பது சந்தேகமே.

* மீடியா டீரீம்ஸ் பட நிறுவனம், பிரசாந்தைக் கதாநாயகனாக வைத்துப் படமொன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தது. ஏனோ தெரியவில்லை, இப் படத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.

* ஜோதிகா கதாநாயகியாக நடிக்கும் புதிய படமொன்றில் பிரபுதேவா-ராஜுசுந்தரம்-நாகேந்திரபிரசாத் ஆகியோர் நடிக்கின்றனர். படத்திலும் இவர்கள் மூவரும் அண்ணன் தம்பிகளாகவே நடிக்கிறார்கள்.

## முட்டை கட்டிய ஜோஸ்த்

அக்கா நக்மாவை அசத்தலாக மறுபிரவேசம் செய்ய எண்ணிய ஜோதிகா, சொந்தப் படமுயற்சியில் இறங்கினார். இப்போது அந்தப் படத்திட்டத்தை முட்டை கட்டி வைத்து விட்டார்.

சொந்தப்படமெடுத்துக் கையைச் சுட்டுக்கொள்வதை விட பிறரது படங்களில் நடித்து காசு சேர்க்கலாம் என்று வரும் புதிய படவாய்ப்புகளில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளார் ஜோதிகா.



ஜெயராகினி

## குடும்பங்களுக்குள் குழப்பம் விளைவித்த நடிகை

திரையுலக மறுபக்கம் 212

தமிழ்நாட்டிலிருந்து மயன்

இரண்டு நாள் தாடி வைத்திருக்கும் வெற்றிப்பட இயக்குநர் இப்போது அடர்த்தியாகத் தாடி வளர்த்து வருகிறார். தமிழில் உள்ள இரண்டு உச்ச நடிகர்கள் நடித்த படங்களை இயக்கியவர் அவர்.

அடுத்து அந்த இரண்டு உச்ச நடிகர்கள் நடிக்கும் படங்களையும் இவர்தான் இயக்கவுள்ளார். இப்படியிருக்க, அந்த இயக்குநர் நீண்ட தாடி வளர்ப்பதற்கு என்ன காரணம்?

காரணம் ஒரு நடிகை. உச்ச நட்சத்திர நடிகரின் கடைசியாக வெளியான படத்தில் வில்லியாக நடித்தவர் தான் அந்த நடிகை.

அப்படத்தின் நாயகனுக்கு இணையாகப் பேசப்பட்ட அந்த வில்லி வேடம் சிறப்பாக அமையக் காரணமாக இருந்தவர் அந்த இயக்குநர்.

அப்போது ஆரம்பித்த 'நட்பு' நாளடைவில் நெருக்கமாகியது. இது இயக்குநரது மனைவிக்குத் தெரியவர இயக்குநரின் வீட்டில் பெரிய பிரச்சனையாக உருவெடுத்தது.

இருப்பினும் இயக்குநர் அதைப் பெரிதாக எடுக்காமல் இருந்து விட்டார்.

இயக்குநருக்கு வேண்டியவர்கள் இவர்களை எப்படியாவது பிரித்துவிட வேண்டும் எனக் கடும் முயற்சி எடுத்தார்கள். இறுதியில் வெற்றியும் பெற்று விட்டார்கள்.

நடிகைக்குப் பல இலகரங்கள் வரைக் கொடுத்துக் கத்தரித்து விட்டார்கள். இதனால்தான் இயக்குநர் நீண்ட தாடி வளர்த்துச் சோக கீதம் பாடி வருகிறார். இதேவேளை இந்த நடிகையால் இன்னொரு குடும்பத்திலும் பிரச்சனை. 'வெற்றி'காந்த நடிகருக்கும் அவரது மனைவிக்குமிடையில்தான் இந்தப் பிரச்சனை ஏற்பட்டது.

தொடர்ந்து தனது இரண்டு படங்களில் நடிகைக்கு வாய்ப்பளித்த 'காந்த' நடிகர், நடிகையுடன் ஒட்டிக்கொண்டார்.

இதனால் நடிகருக்கும் அவரது மனைவிக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டு, இனிமேல் தனது படங்களில் நடிகைக்கு இடமில்லை என்று மனைவிக்கு வாக்களித்தார். அதன் பின்னரே நடிகரின் மனைவி சமாதானமானார்.

இதன்பின் நடிகரும் அந்த நடிகை பக்கம் திரும்புவதே இல்லை.

## 'பலான' பாபி

சினிமாவில் வாய்ப்புக்கிடைக்காத நடிகைகள் 'பலான' படங்களில் நடித்து வருவது பழைய சங்கதி. பாபிலோனா விஷயத்தில் இது உல்டாவாகி இருக்கிறது.

ஆரம்பத்தில் 'பலான' படங்கள் பலவற்றில் நடித்துள்ள பாபிலோனா, அதன் மூலம் பிரபலமாகி இப்போது தமிழில் கவர்ச்சி வேடங்களில் தலை காட்டி வருகிறார். அது மட்டுமன்றி சில நகைச்சுவை நடிகர்களின் தயவால், அவர்களுடன் நகைச்சுவையுடன் கூடிய கவர்ச்சி வேடங்களிலும் நடித்து வருகிறார்.



பாபிலோனா

...ஷ்பு

...துவரை கதாநாயகியாக நடித்து வந்த குஷ்புவுக்கு அவரது திருமணத்திற்குப் பின் அம்மாவாகப் பதவியுயர்வு கிடைத்துள்ளது. ராஜ்மோகன் இயக்கும் புதிய படமொன்றில் குணால்-பிரதியுஷா ஜோடியாக நடிக்கின்றனர்.

...இல் பிரதியுஷாவின் அம்மாவாக நடிக்கிறார் குஷ்பு. குஷ்புவின் ஜோடியாக படத்தின் தயாரிப்பாளர் ஜி.ஆர். நடிக்...

## ...தியின் கலைச்சேவை

...யாக அறிமுகமாகி தற்போது படவாய்ப்புக... இருக்கும் சுவாதிக்கு வெளிநாட்டுக் கலை நிகழ்ச்சி... கொடுக்கின்றன.

...நிகழ்ச்சியில் பங்குபற்றி நடனமாட இரண்டு இலட்... கொடுக்கப்படுகிறது. சுவாதிக்கும் அவரது அம்மா... டிக்கெட், நட்சத்திர ஹோட்டலில் தங்க வசதி... படுகிறது.

...முடிந்ததும் பிரபலங்களின் சந்திப்பு நிகழ்ச்சிகள், ... ஏகப்பட்ட வெளிநாட்டுப் பொருட்களோடு ... சுவாதி.

## மறுபடி நடிப்பு

'ஆடின காலும் பாடின வாயும் சும்மா இருக்காது' என்று சொல்வார்கள். நடிகைகள் விஷயத்தில் இது நூற்றுக்கு நூறு உண்மை.

திருமணத்தின் பின் நடிப்பை உதறி விட்டுச் செல்வதாகக் கூறிய நடிகைகள் பலர் பின்னர் கணவர்மாரையே உதறி விட்டு நடிக்க வந்து விட்டார்கள்.

அந்த வரிசையில் ப்ரியாரஞ்சித்தும் இணைந்துள்ளார். 'நேசம் புதுசு' படத்தில் நடித்தபோது நடிகர் ரஞ்சித்தைக் காதலித்துத் திருமணம் செய்த பின் நடிப்பை உதறிய ப்ரியா மறுபடி நடிக்க வந்துள்ளார்.

இதற்காக தனது ஊதிப்போன உடம்பை உடற்பயிற்சிகள் மூலம் குறைத்து வனப்பாக்கி வருகிறார்.

## ...வுக்குப் ...சித்தாஞ

...ர் ஜெயகாந்தன் ...போன சித்தாஞ' ...இருக்கிறது. ...ஜோடியாக ...கௌதம ...லிரோஸ் நடித்த ...இயக்கியவர்.



## காத்திருந்த கார்த்திக்

சுந்தர் சி. இயக்கத்தில் கார்த்திக் கதாநாயகனாக நடித்த இரண்டு படங்கள் பாதியிலேயே நிற்கிறன. ஒன்று 'அத்தை மகன்', மற்றது 'காதல் சொல்ல வந்தேன்'.

அண்மையில் நடிகர் சங்கம் தலையிட்டு இப்படங்களை முடித்துக் கொடுக்கும்படி கார்த்திக்கிடம் கூற, அவரும் அதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

'காதல் சொல்ல வந்தேன்' படத்தில் கார்த்திக் ஜோடியாக நடிப்பவர் இஷா கோபிகர். ஊட்டியில் நடந்த படப்பிடிப்புக்கு இவர் ஆஜராகவில்லை. ஒரு வாரம் இஷாவுக்காகக் காத்திருந்த கார்த்திக் மறுபடி ஊட்டி சென்றார்.

## ஸ்நேகாவின் முன்னேற்றம்

ஸ்நேகா அறிமுகமான 'விரும்புகிறேன்' வராவிட்டால் என்ன? அதன் பின் ஸ்நேகா நடித்து வெளியான பட... அவரை முன்னணிக்குக் கொண்டு போய் விட்டன.

இப்போது தமிழில் முன்னணியில் இருக்கும் ... லைலா ஆகியோருக்கு அடுத்த இடத்தில் ... ஸ்நேகா. கமலின் 'பம்மல் கே.சம்பந்தம்', ... 'பார்த்தாலே பரவசம்', 'புன்னகை தேசம்' ... நடித்து வரும் ஸ்நேகா விரைவில் முதலி... ...தா லும் ஆச்சரியமில்லை.

## கைவிடாத ...ர்ச்சி


கேரள தொழிலதிபர் ஒ... கைபிடித்த விசித்ரா நடிப்பைக் கைவிட மாட்ட... தெரிகிறது. அதுவும் தனது பிராண்ட் கவர்ச்...

கல்யாணத்திற்குப் ... நடிக்க ஒப்பந்தமான படம் 'இரவுப் பாடகன்'. அ... ...யான இந்தப் படத்தில் நீச்சல் உடையில் கிளுகி... ...நடித்துவருகிறார் விசித்ரா.

இந்தக் கிளுகிளு... ...கள் படமாக்கப்பட்டபோது விசித்ராவின் கணவ... ...லே இருந்திருக்கிறார்.


# படம் ஒன்று காட்சி இரண்டு!

சில சினிமா இரசிகர்கள் ஒரு படத்தைப் பார்க்கும் போது தமக்குப் பிடித்தமான நடிகர் அந்தப் படத்தில் நடித்திருந்தால் எப்படியிருந்திருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்ப்பார்கள். வஸந்த் இயக்கத்தில்




சில காலத்திற்கு முன் விஜய்-சூர்யா நடித்த 'நேருக்கு நேர்' படத்தில் சூர்யா நடித்த வேடத்தில் நடிக்கவிருந்தவர் அஜித். அஜித்தை வைத்துச் சில காட்சிகள் படமாக்கப்பட்டபின், அவரை நீக்கி விட்டுச் சூர்யாவை அதில் நடிக்க வைத்திருந்தனர்.

சூர்யாவுக்குப்பதில் அதில் அஜித் நடித்திருந்தால் எப்படியிருந்திருக்கும் என கற்பனை பண்ணியவர்களுக்காக எம்மாலான உதவி இது.



## பேனா நண்பர்கள்



பெயர்: கே. கலைச் செல்வன்,
வயது: 19
முகவரி: 9, டாம் வீதி, கொழும்பு-12.
பொழுது போக்கு: ரீ.வி., பத்திரிகை.



பெயர்: எஸ். ஷோபா,
வயது: 19
முகவரி: அன்னாசிகம, மத்துகம.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ். சுஹிர்,
வயது: 19
முகவரி: 197, மகாரம்பைக்குளம், வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை.

## பதில் சொல்!

சீதனம் கேட்கின்றார் என்று
ஆண்கள் மீது சீறி விழும் பெண்ணே
பட்டப்படிப்பு படித்தவன்வேண்டும்
படிக்காதவன் வேண்டாம் என்று
பாவை நீயும் அடம் பிடித்தால்
படித்தவனின் பகட்டுக்கு
சீர் வருசைதனை
சீராகக் கொடுத்துத்தான்
ஆகவேண்டும், நான்
படிக்காதவன் ஆனாலும்
பண்புள்ளவன் தான்,
சீர்வரிசை ஏதுமின்றி
சீதனமாய் உன்னை ஏற்பேன்,
பாவை உனக்கு சம்மதமோ
பட்டெனப் பதில் சொல்!

எம்.எல். றிபாஸ்-தி/தோப்பூர்.

## இவ்வாறு பாடேன்...!

இவ்வாறு பாடேன்..!
'மாமரத்து மைக்குயிலே
மரத்துப் போய்
இருக்கிறாயோ...?'
இவ்வாறு பாடேன்!
இன்பந் தேடி வாழ்கின்றார்
இங்கே பலர்:
ஆனா இன்பந்தேட
வாழ்கின்றார் அங்கே பலர்.
எங்கே? எங்கே?
மேற்கே! மேற்கே!
மேன்மேற்கே-
இங்கிலாந்திலே,
ஐரோப்பாவிலே
அமெரிக்காவிலே!
மாமரத்து மைக்குயிலே
மரத்துப் போய்
இருக்கிறாயோ...?

எம்.எஸ். சிவம்-தெஹிவலை.

## தேன் கிண்ணம்

## இல்லை என்று சொல்லாதே

அன்பே!
என் மனதில்
நீ உள்ளாய்:
உன் மனதில்
நான் உள்ளேனா?
தயவு செய்து
நீ இல்லை
என்ற வார்த்தையை
மட்டும் கூறி விடாதே!
உன் வாயிலிருந்து
இல்லை என்ற
வார்த்தை வந்தால்,
என் உடம்பிலிருந்து
உயிர்சென்று விடும்!
***
பெண்ணே!
நீ இல்லை என்ற
வார்த்தையைக் கூறி
என்னை இல்லாமலாக்கி
விடாதே!

எம்.எச்.எம். ரிகாஸ்-அக்குறன.

## ஒழிந்தே போ...!

உணர்வுகளைக் குடித்து;
உண்மைகளை சிதைத்து;
ஒருமையை, பன்மையாக்கி...!
உயிருள்ள மெய்யை
பிணம் போலாக்கிவிடுகின்ற
மதுவே! உனக்கு
எத்தனை மகா வலிமை..!
***
விஷத்தால் வடிக்கப்பட்ட
உனக்கு மட்டும்
எத்தனை வடிவங்கள்!?
உன்-மயக்கவாசனையின்
ஸ்பரிசத்தால்...
மூச்சிறைத்து அணைந்துபோன
குலவிளக்குகளால்...
இருண்டு போன
இல்லங்கள் தான் எத்தனை!?,
***
பதிவிரதைகளுக்கே
சதிசெய்ய துணிந்துவிட்ட
மதுவடிமைகளால்..!
சுருக்குக்கயிறுக்குள்
தஞ்சம் புகுந்த
அரிவையர்கள்...
இன்னும்கூட
எண்ணப்படா வாக்குகள்!
***
விஷத்தை ஏந்தி;
விஸ்வரூபம் எடுத்து
சர்ப்பம் போல்
சவாரி செய்யும்
விஷ ஜந்தே...!
உன்னால்-துளிர்விடமுன்
விதையிலேயே கருகிப்போன
உயிர்களுக்காக...
வழக்காட நீதிமன்றங்களே
கிடையாது!- ஏனெனில்
உன்னால் ஊற்றப்பட்டு;
வளர்ந்த மன்றங்களின்
கிளைகளே மிக அதிகம்...!
***
ஆம்-! உன்னால்
உதிர்ந்து சமாதியான
உயிர்களின்....
எச்சங்களாவது
இத்தரணியில்
தலைநிமிர்ந்து வாழ!
தாங்கெட்ட
மதுவே-நீ
ஒழிந்து போ...!

செல்வி:-மும்தாஜ்ஏ. முத்தலிப்(F)
-அனுராதபுரம்.

## என்றென்றும் அழுகை ஒலி

அங்கே கேட்கும் ஒலி
ஆரம்ப அழுகை ஒலி
பாரிலே ஜனனித்த
பாவக் குழந்தையதன்
பரிதாப அழுகை ஒலி
***
வாழ்ந்த மறையும் வரை
வாழ்க்கையில் அழுவதற்கு
அந்தக் குழந்தை பார்க்கும்
ஒத்திகை அழுகை ஒலி.
***
மழலைப் பருவத்திலே
பசித்தாலும் அழுகை
வயிறு வலித்தாலும் அழுகை
உறக்கத்திலும் அழுகை
கண் விழித்தாலும் அழுகை
***
நடக்கும் பருவம் வந்து
ஆரபேக் கல்வி கற்க
பள்ளிக் கூடம் செல்கையிலே
பாதை ஓரம் விற்கும்
பண்டம் வேணுமென்றழுகை
கேட்டது கிடைக்கும்வரை
கீறு விழுந்த இசைத்தட்டாய்
மீண்டும் மீண்டும் அழுகை
***
உயர்தரம் படித்து விட்டு
பட்டப் படிப்பு வந்தால்
பணம் கேட்கும் அழுகை
பல்கலைக் கழகத்திலே
பார்வையின் காதவது
தோற்றுவிட்டவேதனையில்
தண்ணியடித்துவிட்டு
தாடியுடன் அழுகை
***
பட்டம் பெற்ற பின்னே
பட்டத்தைச் சுமந்து கொண்டு
வேலைதேடும் போது
வாழ்க்கையே வெறுத்து
வறண்டுவரும் அழுகை
***
இல்லறவாழ்க்கையிலே
தொணல்லைகள் கூடி
பிள்ளைகள் வளரும்போது
உளருக்கும் தெரியாமல்
யாருக்கும் தெரியாமல்
உள்ளுக்குள் அழும் உமையழுகை
***
பிள்ளைகளை வாழவைத்து
பேரன்பேத்தி கண்டு
அவர்தயவில் வாழும்போது
பிள்ளைகள் வாயாலே
கிழட்டுக்கட்டை என்று
திட்டு வேண்டையிலே
வாழவும் முடியாமல்
சாகவும் முடியாமல்
தவிக்கும் தயவற்ற அழுகை
***
ஏக்கத்திலே வாழ்ந்து
இறுதி மூச்சு நின்றது
வெற்றுடலாய்க் கிடக்கையிலே
சுற்றமும் சூழநின்று
அழுது வாழ்ந்தவர்க்காய்
அழுகின்ற அழுகை ஒலி.
அதுதான் இறுதி ஒலி.
***

மாணிக்கன் இளங்கோ-
திரு/முன்னம் போடி வெட்டை.

## காதலி சொன்ன உண்மை

மேற்கிலும் சூரியன் உதிக்குமாம்
என் காதலி சொல்ல
நானும் நம்பினேன்.
***
அமாவாசையிலும்
நிலவுதோன்றுமாம்
அவளே! சொன்னாள்
நானும் ஏற்றுக் கொண்டேன்.
***
கடலை விட்டு அலைகளை
பிரிக்கலாமாம்
என்று அவள் சொல்ல
நானும் மறுக்க வில்லை.
***
காலம் கடந்து சொன்னாள்
என்னை விட்டு பிரியும்படி
***
முடியாது என்று சொல்ல நினைத்த
வார்த்தை தொண்டைக்குள்ளே!
அடங்கிப் போனது.
அவள் கையில் இருந்த
திருமண அழைப்பிதழைப் பார்த்து.

இளம் புயல். மு. சு. அஸ்ரப்-
கிண்ணியா.02.

## நல்லவன் முன்னேறு

"மற்றவர்களை மகிழச் செய்வதே ஒருவர் பெற்றிருக்க வேண்டிய நற்பேறுகளில் எல்லாம் மிகவும் மேலான நற்பேறாகும்" என்று செஸ்டர் ஃபீல்ட் பிரபு கூறுகிறார். இதனுடைய அர்த்தம் என்னவென்றால் அடுத்தவர்களை இன்பமடையச் செய்யும்போது கோபம் தோன்றாது என்பது தான்.

சந்திரனை விண்மீன்கள் சூழ்ந்திருப்பது போலே நம்மை அளவற்ற நண்பர்களும் ஆதரவாளர்களும் சூழ்ந்திருக்க வேண்டும் என்று விரும்பும் போது எப்படி கோபப்பட முடியும்?

இருக்கிறது. அதன் அணுக்களை எல்லாம் ஒன்று சேர்த்து திரட்சியாக இருப்பதனாலேயே அது விலை மதிப்புள்ளதாகத் திகழ்கிறது. அதனை அம்மியில் வைத்து சுக்கு நூறாக அரைத்துவிட்டால் அதன் விலை என்னவாக இருக்கும்?

பணம் கொடுத்து வாங்க யாராவது முன்வருவார்களா என்ன? பொடிப் பொடியான வைரத்தை குப்பையில் தானே போட வேண்டியிருக்கும். இதே போல் அற்புதமான வைரம் என்ற வாழ்க்கை இருக்கிறது. அதை கோபம் என்ற அம்மியில் வைத்து அரைத்தால் ஒன்றுக்கும் பயன்படாமல்தானே போகும்?

மற்றவர்கள் மீது அன்பு செலுத்துவது நம்முடைய நல்ல பண்பை வளமடையச் செய்யும்.நம்மையும் முழு மனிதனாக வாழ வைக்கும்.நம்மிடமுள்ள கோபம், பொறாமை, அற்பத்தனம் ஆகியவற்றை அடியோடு விரட்டி அடிக்கும். அன்பு வாழ்வைப் பாலை வனமாக்காது. பூஞ்சோலை ஆக்கும். அப்பூஞ்சோலையில் மது உண்ண மனித வண்டுகள் வந்து கொண்டே இருக்கும். நாமும் அன்பு என்னும் தேனை அள்ளி வழங்கி விட முடியும்.

## அன்பின் பெருமை


மற்றவர்களுடைய விஷயத்தில் அக்கறை காட்டி அவர்களை மகிழச் செய்யும்போது அங்கு தானாகவே மனநிறைவு ஏற்படும். வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கான மூலதனங்களில் ஒன்று பிறரை மகிழச் செய்யும தன்மைதான்.

பணத்தால் ஆகாத செயல்கள் எல்லாம் இந்த சிறப்புத்தன்மையை பெற்றிருப்பதன் மூலம் எளிதாகப் பெற்று விட முடியும். நாம் மற்றவர் மீது அன்பு காட்டும் போது அங்கு கோபம் தோன்றாது. அன்பின் உறவு இதயத்தின் வரவு. கோபத்தின் உறவு, நாசத்தின் செலவு.

வெண்டல் விஸ்கி ஸ்டாலினைச் சந்திக்கச் சென்ற பொழுது ஸ்டாலின் எழுந்து நின்று அவரை வரவேற்றார். இந்தசெயலின் பயனாக இருவரிடமும் இருந்த பகைமை மறைந்தது. விஸ்கி ஸ்டாலினின் நண்பராக மாறினார்.

நேரில் காணாமல் ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருந்த கோபதாபங்கள் சிறிய அன்பின் செயல்பாட்டினால் அடியோடு மறைந்தது. அன்பு காட்டினால் அனைவருமே இனிமையானவர்கள்தான்.

விலை உயர்ந்த வைரம் நம்மிடம்



இதற்கு மாறாக கோபம் கொண்டிருப்பின் நம்மிடம் யாரும் வரமாட்டார்கள். நம்முடைய நல்ல செயல்பாடுகள் எல்லாம் யாருக்கும் பயன்படாமல் குடத்திலிருக்கும் விளக்கு போல இருப்போம்.

வாழ்வு குறுகியதாக இருப்பதனால் செல்லும் இடம் எல்லாம் கோபம் என்ற முட்களைத் தூவிச் செல்லாமல் இருக்க வேண்டும். இதற்குப் பதிலாக அன்பு என்னும் மலர்களைப் பரவச் செய்து விட்டால் அது நம்மை வெற்றியின் வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்லும். வெளிச்சம் வேண்டுமா இருட்டு வேண்டுமா? நாமே ஒரு முடிவு எடுத்துச் செயல்படுவோம்.

## இந்தவாரம் உங்கள் பலன்

16.09.2001 தொடங்கி 22.09.2001வரை

### கிரக நிலை

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், புதன் |
| தனு | - கேது |
| மகரம் | - செவ்வாய் |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வியாழன், இராகு |
| சிங்கம் | - வெள்ளி |

சந்திரன், சிங்கம், கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) எடுத்த கருமங்களில் வெற்றியும் பொருளாதார நன்மையும் ஏற்படும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் தீரும். வெளியிடப் பயணங்களால் நன்மைகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருந்த கஷ்டங்கள் மறையும். மாணவர்களுக்கு கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**இடபம்:**
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி மிருகசீரிடத்து முன்னரை) பொருள்வரவு, குடும்ப சுகம் என்பன சிறந்து விளங்கும். செலவினங்கள் கட்டுக்கடங்கி இருக்கும். உத்தியோகத்தில் உள்ளோர் எதிர்பார்த்த நற்பலன்களைப் பெறுவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 05.

**மிதுனம்:**
(மிருக சீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்,) மனக்குறை நீங்கும். பலவித பிரச்சனைகளும் தீரும். பொருளாதாரம் சிறந்து விளங்கும். உத்தியோகஸ்தர்கள் தமது மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேறம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் கூடிய முதலீடுகளில் அவதானத்துடன் செயறபடுவது நல்லது.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 03.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம் ஆயிலியம்) குடும்பத்தில் சில பிரச்சனைகள் தோன்றினாலும் வார இறுதியில் மறையும். பணவரவு சிறந்து விளங்கும். கருமங்கள் யாவும் இனிதே நிறைவுறும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் எதிலும் கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**சிங்கம்:**
(மகம்பூரம், உத்தரத்து முதற்கால், தொழிலிலும், குடும்பத்திலும் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். பணவரவு திருப்திதரும். வெளிநாட்டுப் பயணங்களால் சிலர் நன்மை பெறுவர். உத்தியோகத்தில் உள்ளோர் தமது பதவிகளில் கவனமுடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்விச்சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 01.

**கன்னி:**
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழிலில் உயர்ச்சியும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் உண்டாகும். பொருள் வரவு திருப்தி தருமம்.மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள் வியாபாரிகள் அற்ப இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

## சோதிட மாமணி தில்லை

**துலாம்;**
(சித்திரையின் பின்னரை சுவாதி, விசாகத்து முன்முக்கால்) மனதில் பலவித பிரச்சனைகள் தோன்றி கவலை தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவுவது கஷ்டம். எதிர்பார்த்த கருமங்களில் தடைகள் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் எதிலும், கவனமுடன் செயறபடுவது நல்லது. மாண வர்களுக்கு கல்வியில் உயர்வுண்டாகும். விவ சாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) மனதில் சில கஷ்டங்கள் தோன்றும், குடும்பத்தில் வார இறுதியில் நன்மையான சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோக ரீதியாக சிலர் வார முற்பகுதியில் எதிர் கொள்ள இடமேற்படும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 07.

**தனு:**
(மூலம்பூராடம், உத்தராடத்து முதற்கால்,) செய்தொழில் நன்மையும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலவும். வெளியிடப் பிரயாணங்களால் சிலருக்கு கஷ்டங்கள் தோன்றும். உத்தியோக ரீதியாக ஒரு சிலர் வெளிநாட்டுப் பிரயாணங்களைப் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

**மகரம்:**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை) புதிய முயறசிகளில் அவதானத்துடன் செயற்படவும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலவும். உத்தியோக ரீதியாக எதிர்பார்த்த முன்னேற்றங்கள் சிலருக்கு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்விச் சிறப் பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபத்தை பெறுவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 07.

**கும்பம்:**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி நாலாங்கால்,) தொழில் கஷ்டங்கள் தீர்ந்து நன்னிலை உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், சந்தோஷமும் நிலவும். உத்தியோக ரீதியாக எதிர்பார்த்த உயர்வுகள் சிலருக்கு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 06.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால் உத்திரட்டாதி தேவதி,) எதிர்பார்த்த கருமங்களிலும் தடைகளும், மனக்குறைகளும் ஏற்படும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவுவது கஷ்டம். உத்தியோக ரீதியாகவும் சிலருக்கு மனக் கசப்புக்கள் உண் டாகும். மாணவர்களுக்கு கல்வியில் சிறு தடைகள் ஏற்பட்டு மறையும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 05.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கைகள் மீது கண் வையுங்கள்



பெண்கள் முக அழகைப் பேணுவதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை ஏனைய உடலுறுப்புக்களுக்குக் கொடுப்பதில்லை.

பெண்கள் தமது அழகான கைகளைப் பேணிக் கவனிப்பதில் அதிக கவனம் எடுப்பதில்லை.

சிறு வெடிப்புகள், எண்ணெய் பிசுக்கு, சொரசொரப்பு, வறட்சி எனப்பல வடிவங்களில் பெண்களின் கைகள் காட்சியளிக்கின்றன.

இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. துணிமணிகளைச் சலவை செய்தல், பாத்திரங்கள் கழுவுதல், காய்கறிகள் நறுக்குதல் எனப் பல தரப்பட்ட வேலைகள் பெண்களின் கைகளுக்கு. இவற்றைத் தாண்டி பெண்களின் கைகளை எப்படிப் பளிச்சிட வைப்பது?

இதோ சில வழிமுறைகள்:

* இரவில் பாலாடையும் கோழி முட்டையின் வெள்ளைக்கருவையும் கலந்து கை, விரல்களில் தடவிக் கொள்ளுங்கள். காலையில் பயித்தம் மாவால் கைகளைக் கழுவுங்கள். கைகள் 'பளிச்' என்றாகிவிடும்.
* ஒலிவ் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெயால் கைகளை மசாஜ் செய்து, இளஞ்சூடான நீரால் கழுவுங்கள்.
* உள்ளங்கை சொரசொரப்பாக இருப்பவர்கள் உருளைக் கிழங்கை வேக வைத்து, மசித்து கைகளில் தேய்த்து வரலாம்.
* காய்கறிகளை நறுக்கும்போது சிறிதளவு தேங்காய் எண்ணெயைக் கைகளில் தடவிக்கொண்டு நறுக்கினால் கறை படியாது. கறை படிந்தால் எலுமிச்சம் பழச்சாறு கொண்டு அகற்றலாம்.
* வெண்டிக்காயை அதிக அளவில் பச்சையாகத் தின்று வந்தால் கைகள் மிருதுவாகும்.
* வெள்ளரிக்காய் சாறை உள்ளங்கையில் பூசினால் கைகள் மிதுதுவாகும்.
* கைகளுக்கு மருதோன்றி பூசுவதும் மென்மையை ஏற்படுத்தும்.

மேற்கண்ட இயற்கையான எளிய வழிகள் மூலம் பெண்கள் மிருதுவானதும் அழகானதுமான கைகளைப் பெறலாம்.

## சூப்பர் சமையல் குறிப்புக்கள்



வீட்டுக்குத் தேவையான சூப்பர் சமையல் குறிப்புக்கள் இதோ

* துவரம் பருப்பை விரைவாக வேக வைக்க ஒரு துண்டு தேங்காயை நறுக்கிப் போடுங்கள் விரைவில் வெந்து விடும்.
* ஒரு துண்டு இஞ்சியை நறுக்கிப் போட்டு முட்டைக் கோவாவை வேக வைத்தால் ஒருவித வாடை வராது.
* தோசை மற்றும் இட்லி மாவு அதிகம் புளித்துப் போனால் அதில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றிக் . கலக்கி, அரை மணி நேரம் தெளிய விடுங்கள். பின் தெளிந்த நீரை வெளியே ஊற்றி விடுங்கள். மாவு நன்றாக இருக்கும்
* புதினாவை எப்போதும் பச்சையாகவே பயன்படுத்துங்கள். சுவைக்காக என்று சொல்லி வதக்கினால், அதிலுள்ள சத்துக்கள் அவ்வளவும் அழிந்து விடும்.
* சமையலில் காரம் சற்றுத் தூக்கலாக இருந்தால் அதில் எலுமிச்சம் பழச் சாற்றை சிறிது பிழிந்து விடுங்கள். காரம் குறையும்.
* வாழை இலையைச் சுருட்டி, செங்குத்தாக நிமிர்த்தி வைத்தால் 4 நாட்களானாலும் இலை பழுக்காது.
* குழம்பில் உப்பு அதிகமாகி விட்டால், தக்காளிப் பழத்தை இரண்டாக நறுக்கிப் போடுங்கள். உப்புக் குறையும்.
* சப்பாத்தி செய்யும் போது மாவில் சிறிது இளநீர் பிசைந்தால், சப்பாத்தி மிகவும் சுவையாக இருக்கும்.
* கீரையைச் சமையல் செய்யும்போது ஒரு தேக்கரண்டி சீனி சேர்த்தால் அதன் மணம் மாறாமல் இருக்கும்.
* கொத்தமல்லித் தழை வாடி விட்டதா? வெதுவெதுப்பான வெந்நீரில் போட்டு எடுங்கள். புத்துயிர் பெற்றுவிடும்.


## பட்டுச் சேலை பரிசுப் போட்டி



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KB

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22-09-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**மஸ்கெலியா வாசகிக்கு அதிஷ்டம்!**

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

கே. மகாலெட்சுமி,
கெலனிய எஸ்டேட், மஸ்கெலியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம் அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.







# அனிதாவின் காதல்கள்

"இட்டாலி போயிட்டு அப்படியே ஸ்டேட்ஸ் போறார். வர பதினஞ்சு நாள் ஆகும்... ஏதாவது அர்ஜெண்டுன்னா ஃபேக்ஸ் அனுப்பறேன்..."

"இல்லை..." என்று வைத்துவிட்டாள்.

"பேசியாச்சா?" என்று ஜிம்பு அருகே வந்து, "யாரு வைரவன்? மோட்டார் சைக்கிள்ல விழுந்தானே, அவன்தானே?"

"ஆமாம்.. நான் அவனுக்கு ஃபோன் பண்ணதா அப்பா கிட்டே சொன்னே.. நீ சிகரெட் குடிக்கிறதைச் சொல்லிடுவேன்..."

"எனக்கு என்ன தலையெழுத்தா.. இங்கு உள்ளதையெல்லாம் அங்க சொல்ல?"

அனிதாவுக்கு இரண்டு சாத்தியங்கள் தான் தென்பட்டன. நிச்சயதார்த்தத்துக்குச் சம்மதிப்பது அல்லது மது சொல்வது போல ஓடிப் போய் விடுவது!

'அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அனிதா அநேக நமஸ்காரங்கள். கல்யாணத்துக்கு என் சரியான சம்மதமில்லாமலேயே நீங்கள் என்னை வற்புறுத்துவது எனக்குப் பிடிக்கவில்லை. அதற்கான நிச்சயதார்த்த ஏற்பாடுகள் முடிந்து போன இந்தச் சமயத்தில், இவ்வாறு நான் உங்களுக்குப் புதிய பிரச்சனையை உருவாக்குவதில் எனக்கு வருத்தமே... இருந்தும், என் வாழ்க்கையைப் பற்றிய பிரச்சனை இது என்பதால், எனக்கு யோசிக்க டைம் வேண்டும். அதனால் நான் எங்கிருக்கிறேன் என்று என்னைத் தேட வேண்டாம். ஒரு வாரத்தில் நானே திரும்ப வந்து...'

'சே! எதுக்குச் சுத்தி வளைச்சுக் கடுதாசி எழுதணும்... 'அப்பா அம்மா எல்லாத்துக்கும் நன்றி. என்னைத் தேடவேண்டாம்' என்று ஒரு வரி போதும். அது கூட வேண்டாம். கட்டின புடவையோடு புறப்பட்டுப் போக வேண்டியதுதானே!'

"என்ன யோசிக்கிறே? வா.. வா.. அவள்லாம் வந்தாச்சு. வாசல்ல டாக்ஸி நிக்கறது..."

கூடத்தில் கூட்டமாக இருந்தது. அவள் நுழைந்ததும் சலசலப்பு நின்றது.

அனிதா அவசரமாகத் தன் அறைக்குள் நுழைந்தாள்.

"எங்கடி பாதி அலங்காரத்துல போயிட்ட? அப்படி என்ன ஃபோன்கால் தட்டுக்கெட்டுப் போறது?" என்று அம்மா அதட்டினாள்.

"அம்மா... நான் உன்கிட்ட பேசணும்மா!"

"எல்லாம் அப்புறம் பேசலாம்... இப்ப எனக்குக் கையும் ஓடலை, காலும் ஓடலை! வந்தாச்சு.. வந்தாச்சு... வாத்தியாரானா அவசரப்படுத்தறார்...."

"அம்மா! அவசரம்மா.... எனக்கு... எனக்கு..."

அம்மா சட்டென்று நிறுத்தி, "உனக்கு?" என்றாள்.

அந்தச் சமயம் பார்த்து மகாதேவன் உள்ளே வந்து நின்று, அவளையே நெற்றி நரம்புகள் அசையப்பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஒண்ணுமில்லை..." என்றாள்.

"வாம்மா அனிதா..... அவள்லாம் காத்துண்டிருக்கால்லே?" என்றார் மகாதேவன், சாந்தமான அதட்டலுடன்.

"நீங்க போங்கோ, நாங்க வர்றோம்..." என்று அவரை அனுப்பி விட்டு, அம்மா அவளருகில் வந்து "பயப்படாதே... அப்படித்தான் இருக்கும்..." என்றவள், கண்களில் நீர்ததும்ப, "அனிதா! அவமானப்படும்படியா, உங்க அப்பா கூனிக் குறுகும்படியா ஏதாவது விபரீதமா செய்துடாதேம்மா. உன் நல்லதுக்குத்தானே சொல்றோம்? என் கண்ணில்லையா..." என்றாள்.

அனிதா, அம்மாவைக் கட்டிக் கொண்ட போது தோளில் கண்ணீர் சுட்டது.

ஹாலுக்கு அனிதா கொண்டு வரப்பட்டாள். ஜிம்பு டி-ஷர்ட்டைக் காட்டினான். அவனுக்கு ஸிடி ப்ளேயர் கிடைத்திருந்தது.

மாப்பிள்ளை சுரேஷின் அம்மாவோ, அக்காவோ தெரியவில்லை... நடுநாயகமாக வீற்றிருந்தது. "ஷுகர் இல்லாம காபி இருந்தா நல்லது... என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

"பொண்ணு ரொம்ப அழகா இருக்கா சுரேஷ்... கங்கிராஜுலேஷன்ஸ்..." என்று அவன் கையைக் குலுக்கினாள்.

"எங்காத்துப் பொண்ணுக்கு ஏகப்பட்ட வரன் வந்தது இந்த வருஷம்... வேண்டாம்னு ஒத்திப்போட்டு வெச்சிருந்தோம். ஏதோ மாமி ரொம்ப வற்புறுத்தினதால..." என்றதற்கு எதிராக,

"இவனுக்கும் தினம் பன்னெண்டு [illegible] ப்ரொபோஸல் வந்த்து..." என்றாள்.

"பாட்டெல்லாம் பாடுவா... அனி! ஒரு பாட்டுப் பாடு..."

"அதெல்லாம் வேண்டாம்... சம்பிரதாயமா எதுவும் வேண்டாம்..." என்றான் சுரேஷ்.

"அப்ப நீங்க பாடுங்கோ..."என்றதற்கு, அத்தனை பேரும் மிகையாகச் சிரித்தார்கள்.

"பாடத் தெரியாதுன்னு நினைச்சுண்டு இருக்கேளா? எட்டு ஊருக்குப் பாடுவான். ராகமெல்லாம் கண்டு பிடிப்பான்!"

"என்னை விட்ருங்களேன், ப்ளீஸ்..." என்றான் சுரேஷ்.

கருநீலத்தில் பெரிதாக பார்டர் போட்டிருந்த புடைவையைக் கொடுத்து, "இந்தப் புடைவையை மாத்திண்டு வந்துரும்மா... அப்படியே இந்த மோதிரத்தையும் செயினையும் வாங்கிக்கோ...." என்றனர்.

"என்னது.. லக்ன பத்திரிகை வாசிக்கலையா சாஸ்திரிகளே?"

"முகூர்த்தம் இந்த தை மாசமா.. அடுத்த தை மாசமான்னு நீங்க இன்னும் சொல்லலையே?"

"எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம்..." என்றான் சுரேஷ்.

"அப்ப... வர இருபத்தெட்டிலதான் கடைசி முகூர்த்தம்! பதினெட்டிலயும் இருக்கு..."

"அதிலயே வச்சுருங்களேன்... சீக்கிரமா வச்சுக்கறது நல்லதுதான்..."

மகாதேவன். "ஒரு நிமிஷம்... எங்களுக்கு ஏற்பாடு பண்ண ஒரு மாசமாவது வேணும் சார்..." என்றார்.

"எங்களுக்கு, உங்களுக்குனு சொல்லாதீங்க... இது நாம நடத்தற கல்யாணம் சார்! கல்யாணத்தை 'சிம்பிளா' வெச்சுக்கலாம் சார்.. நாங்க ஹெல்ப் பண்றோம்.." என்றார் சேஷாத்ரி.

மகாதேவன் மனைவியைப் பார்த்து "என்ன?" என்றார்.

"நீங்கதான் சொல்லணும்..."

"சீதா, மாப்பிள்ளை, ஜிம்ப நீங்கள்லாம் தான் முனையணும்!"

"பாத்துக்கறோம்பா..." என்றார்கள், உற்சாகத்துடன்! சீதா, அனிதாவையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்க... அனிதா படவையை ஏற்றுக் கொண்டு அறைக்குள் சென்றாள்.

ரசம் போன கண்ணாடியில்கூட அந்தப் படவை பளிச்சென்று இருந்தது. ஹாலிலிருந்து மத்தியதர குடும்பத்து அத்தனை வீடுகளிலும் கேட்கும் சம்பாஷணைகள் உதிர்ந்தன.

"நல்லிலதான் நாங்க எப்பவும் வாங்கறது... கொஞ்சம் வெலைன்னாலும்..."

"டி.வி.சீரியல் பார்க்க எங்களுக்கு எங்கே டயம் இருக்கு ராஜம்?"

"நஞ்சம்பாக்கத்துல [illegible] கொண்டு போய் வீட்டைக் கட்டியிருக்கார். [illegible] நடக்குதாம். ஊருக்குள்ளன்னா ரொம்ப [illegible] சொல்றா!"

அனிதா [illegible] உடுத்திக் கொள்ள, [illegible] உதவி செய்தபடி "என் கண்ணே [illegible] தேவதை மாதிரி இருக்கே! அதான் [illegible] போறான். அமெரிக்கா மாப்பிள்ளை ரொம்ப நல்ல மாதிரியா இருக்கான். அத்திம்பேரை வக்கணையா விசாரிச்சான். அத்திம்பேருக்கு இருக்கற தகுதிக்கு அமெரிக்கால வேலை சுலபமாக கெடைக்குமாம். இது தான் டிசம்பர் கச்சேரியையும் யேசுதாஸையும் விட்டுட்டு வரவே வராதே?" என்றாள்.

அனிதா கூடத்துக்கு வந்து நமஸ்காரம் பண்ணிய போது, சுரேஷ், கொஞ்சம் தர்மசங்கடமாக ஒதுங்கிக் கொண்டு, "பார்க்கப்போனா நான் இந்த ஃபங்ஷனுக்கு வரவே கூடாதுன்னுட்டா. நான்தான் பிடிவாதமா வந்திருக்கேன். இதெல்லாம் வேண்டாம் ப்ளீஸ்..." என்றான்.

"இதெல்லாம் ஒரு சம்பிரதாயத்துக்குத்தான்!" என்றார் மகாதேவன்.

"எல்லா செலவையும் நாம ஷேர் பண்ணிக்கறதா இருந்தா நாங்க வாட்ச், ஸூட்டெல்லாம் ஒப்புத்துக்கறோம்..." என்றார் சேஷாத்ரி.

"ஸூட்டெல்லாம் வேண்டாம்பா... அமெரிக்கால ஏகப்பட்ட ஸூட் இருக்கு எனக்கு!"

"அனிதா... உன்னோட கொஞ்சம் பேசலாமா?" என்றான் சுரேஷ். அனிதா பதில் சொல்லவில்லை.

அவன் கையை நீட்டச் சொல்லி மோதிரத்தை அவள் அணிவித்தபோது, அவன் கை ஒரு பெண்ணின் கையைப் போல மெத்து மெத்தென்று இருந்தது.

**நவீன எழுத்துலக வேந்தன்**
**சுஜாதா**

முதல் தடவையாக முழுசாக நிமிர்ந்து பார்த்தாள். அவன் மீசையும், கன்னங்கரேல் என்று கச்சிதமாக அதிகம் வாரலில்லாத அலட்சியத் தலைமுடியும், நல்ல சிவந்த மேனியும், 'ஆஃப்டர் ஷேவ் லோஷன்' வாசனையும், அவன் தமிழும் ஆங்கிலமும் 'அமெரிக்கா... அமெரிக்கா...' என்று அறிவித்தன.

'என்ன போயிற்று... காதல் பண்ணித்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமா? கல்யாணத்துக்குப் பிறகு கணவனை முழுவதும் அறிந்து கொண்டு காதல் பண்ணுகிறவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? நான் என்ன அப்படிப்பட்ட அதிருப சுந்தரி... எல்லாப் பெண்களையும் போல் நானும் ஒருத்தி! என்னை ஒருவன் கடல் கடந்து வந்து 'உன்னை மணக்கிறேன்' என்று சொல்லும்போது, எதற்கு 'இல்லை' என்கிறாய். மைக்ரோபயாலஜி படித்து என்ன சாதிக்கப் போகிறாய்? கான்சருக்கு மருந்தா? இல்லை டி. என் ஏ. ரகசியத்தைத் திறக்கப் போகிறாயா? என்ன ஒரு பைத்தியக்காரி நான்! எனக்கு எதிரே வந்து நின்று மணியடிக்கும் அதிர்ஷ்ட தேவதையை எப்படி நான் நிராகரிக்கிறேன்!'

[அனிதா வருவாள்...]

# குட்டி போட்ட பானை

## பாப்பா முரசு சிறுகதை

முன்னொரு காலத்தில் முன்னா என்பவர் வசித்து வந்தார். அவரது அறிவுத்திறனைக் கண்டு அரசரும் அவரை பெரிதும் மதித்து வந்தார். எந்த விஷயத்தையும் நகைச்சுவையாக பேசுவதில் முன்னாவுக்கு நிகர் முன்னாதான்.

ஒருமுறை முன்னாவை கிண்டல் செய்ய நினைத்தான் பக்கத்துவீட்டுக்காரன். "இவன் என்ன பெரிய அறிவாளின்னு நினைத்து எல்லாரும் இவனை புகழ்றாங்க. இவனை நான் கிண்டல் செய்கிறேன் பார்," என்று மனைவியிடம் சவால் விட்டான் பக்கத்து வீட்டுக்காரன்.

பிறகு முன்னாவிடம் வந்து, "முன்னா எனக்கு ஒரு பானை கொடுங்கள். பத்திரமாக திருப்பித்தந்துவிடுகிறேன்,"என்றான்.

முன்னாவும் கொடுத்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகு முன்னாவிடம் வந்த பக்கத்துவீட்டுக்காரன், அந்தப் பானையுடன் இன்னொரு குட்டிப் பானையையும் கொடுத்தான்.

"என்ன இது நான் ஒரு பானைதானே கொடுத்தேன். ரெண்டு பானை கொடுக்கிறீங்களே," என்றார் முன்னா.



அதற்கு பக்கத்துவீட்டுக்காரன் கிண்டலாக, "ஓ! அதுவா உங்க பானை எங்க வீட்டில் இருந்தப்ப குட்டி போட்டது. அது நியாயப்படி உங்களுக்குத்தானே சொந்தம் அதான் கொண்டுவந்தேன்," என்று சொன்னான் கிண்டலாக.

முன்னாவுக்கு ஒரே அவமானமாகப் போய்விட்டது. இருந்தும் ஒன்றும் கண்டு கொள்ளவில்லை.

பக்கத்து வீட்டுக்காரன் தன் மனைவியிடம் சொல்லி சிரி சிரி என்று சிரித்தான். நாட்கள் சென்றன.

ஒருநாள் முன்னா பக்கத்து வீட்டுக்காரனிடம் சென்று, "எங்க வீட்டுக்கு விருந்தினர் வந்திருக்கின்றனர். எனவே ஒரு பெரிய பானை கொடுங்கள்" என்றார். அவனும் கொடுத்தான்.

நாட்கள் சென்றன. முன்னா வாங்கிய பானையை திருப்பிக் கொடுக்கவே இல்லை. பொறுத்து பொறுத்துப் பார்த்த பக்கத்து வீட்டுக்காரன் முன்னாவைத் தேடி வந்தான்.


"என்ன முன்னா என்னிடம் வாங்கிய பானையைத் திருப்பித் தரவேயில்லையே." என்று கேட்டான்.

"அதான் உங்களிடம் எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. உங்கள் பானை என் வீட்டில் இருந்த போது அதுக்குப் பிரசவவலி வந்தது. பிரசவ நேரத்தில் செத்து போய்விட்டது." என்றார் முன்னா.

"என்ன பிரசவத்தில் செத்துப்போச்சா! கிண்டலா?" என்றான் பக்கத்து வீட்டுக்காரன்.

"உங்களுக்குத் தான் தெரியுமே. ஏற்கனவே பானைகளுக்கு பிரசவம் பார்த்த அனுபவம் உங்களுக்கு உண்டே. எனக்கு இல்லாததால் அதைக் காப்பாற்ற முடியவில்லை," என்றார்.

முன்னாவை கிண்டல் செய்ய நினைத்து தான் ஏமாந்து போனதை எண்ணி நொந்து போனான் பக்கத்துவீட்டுக்காரன்.





மறைந்திருப்பது என்ன? 1 முதல் 34 வரையான இலக்கங்களை கோடு இழுத்துப் பாருங்கள், என்னவென்று தெரிந்து விடும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **22.09.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **412**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 410

**பரிசுக்குரியவர்:**
எம். தாரணி,
சில்வெஸ்ரார் வீதி, கல்கிசை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். முகுந்தன், பம்பலப்பிட்டிய இந்துக் கல்லூரி, கொழு.06. | ஆர். செராமி, நல்லாயன் அரசினர் தமிழ் பாடசாலை, கொழும்பு-13. |
| ஏ.ஏ.அப்துல் றசாக், இ.சி.ஏ. கல்லூரி, அட்டாளைச்சேனை-04. | ப. ஷாலினி, பசறை த.ம.வி., பசறை. |
| ஆர். உதேந்திரன், பெல்வெயர் சர்வதேச கல்லூரி, கொழும்பு. | இமல்டா டேவிட், சென். தோமஸ் பெண்கள் பாடசாலை, மாத்தளை. |
| பாத்திமா ஹிஹானா, மாளிகாவத்தை தொடர்மாடி, கொழும்பு-10. | செல்வம் தெய்வீகன், செல்வநாயகபுரம் இந்து மகா வித்., திருகோணமலை. |
| சி. அருண்ராஜ், விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | இ.ராஜேஸ்வரி, சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மன்னார். |

## உயரமான கட்டடங்கள்

உலகில் உள்ள உயரமான கட்டடங்கள், அவை அமைந்திருக்கும் நகரங்கள், அவற்றின் உயரம், அவற்றைக் கட்டியவர்கள், கட்டி முடிக்கப்பட்ட வருடங்கள் போன்ற விவரங்கள் வருமாறு:

1. சியர்ஸ் டவர்
   உயரம்- 443 மீட்டர்
   நகரம்- சிக்காக்கோ
   கட்டியவர்- ஸ்கிட்மோர், ஓவிங்ஸ், மெர்ரில்
   வருடம்- 1974.
2. பிளாடிரோன் கட்டடம்
   உயரம்- 87 மீட்டர்
   நகரம்- நியூயோர்க்
   கட்டியவர்-டானியல் பேர்ன்ஹாம்
   வருடம்- 1902
3. காமர்ஸ் வங்கி கட்டடம்
   உயரம்- 259 மீட்டர்
   நகரம்- ஃபிராங்ஃபோர்ட்
   கட்டியவர்-நோர்மன் போஸ்டர்
   வருடம்- 1977
4. சென்ட்ரல் பிளாசா கட்டடம்
   உயரம்-374 மீட்டர்
   நகரம்-ஹொங்கொங்
   கட்டியவர்-நக் ஷின்மேன்
   வருடம்- 1992
5. கிறிஸ்லர் கட்டடம்
   உயரம்-319 மீட்டர்
   நகரம்- நியூயோர்க்
   கட்டியவர்-வில்லியம் வான் அலன்
6. வுல்வேர்த் கட்டடம்
   உயரம்- 241 மீட்டர்
   நகரம்-நியூயோர்க்
   கட்டியவர்-காஸ்கில்பேர்ட்
   வருடம்- 1913.
7. பெட்ரோனாஸ் இரட்டைக் கோபுரம்
   உயரம்- 452 மீட்டர்
   நகரம்-கோலாலம்பூர்
   கட்டியவர்-செசார் பெல்லி
   வருடம்-1996

தொகுப்பு: ஆர்.மலர்விழி.

## முதுமையில் இவர்கள்



← பிரபல நாவலாசிரியர் ஜோர்ஜ்பெர்னார் ஷோ 'பெர்டச்ட் பேவபிள்ஸ்' என்ற நாடகத்தை எழுதியபோது அவருக்கு வயது என்ன தெரியுமா? 93.



↑ இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் 'ஏ ஹிஸ்டரி ஒஃப் இங்கிலிஷ் ஸ்பீக்கிங் பீப்பிள்' என்ற புத்தகத்தை எழுதிய போது அவருக்கு வயது 82.



← பிரபல எழுத்தாளர் லியோ டோல்ஸ்டோய் 'ஐ கன் நொட் பி சைலண்ட்' என்ற நூலை எழுதியபோது அவருக்கு வயது 82.

## எஸ்கிமோக்களின் வீடு



பெரும்பாலான எஸ்கிமோக்கள் எளிதில் உருகாப் பனிக்கட்டிகளைக் கொண்டு உருவாக்கிய வீடுகளையே பெரிதும் விரும்புகிறார்கள். இந்த வீடுகளை அமைக்க 2 மணிநேரம் போதும்.

புதிதாகக் காற்றினால் குவிக்கப்பட்ட பனித்திரளில் 150 சென்டி மீட்டர் நீளமும் 60 சென்டிமீட்டர் ஆழமும் உள்ள குழியினைத் தோண்டி, ஓரங்களில் உள்ள பனிக்கட்டிகளைக் கத்தியினால் செதுக்குவார்கள்.

அடிப்பக்கம் அகன்றும் மேலே போகப் போக உள்பக்கம் குவிந்தும் இருக்குமாறும் அமைப்பார்கள். இவ்வாறு செதுக்கப்பட்ட பனிக்கட்டிகளை வட்டமாக அடுக்கி மேலே போகப் போக வாய் குறுகலாக இருக்கும்படி செய்து, உச்சியில் ஒரு பனிக்கட்டித் துண்டை வைத்து மூடி விடுவார்கள்.

அடுக்கப்பட்ட பனிக்கட்டித் துண்டுகளுக்கு இடையே இருக்கும் சிறிய இடைவெளிகளை மிருதுவான பனிக்கட்டித் துகள்களால் அடைப்பார்கள்.

பின் திமிங்கிலக் கொழுப்பில் எரியும் விளக்கினை நல்ல வெப்பம் உண்டாகும் படி திரியைத் தூண்டி விடுவார்கள். குடிசையின் வாயிலைப் பெரிய பனிக்கட்டித் துண்டினால் மூடிகாற்றுப்புகாதவாறு செய்வார்கள்.

குடிசையின் வெப்பம் அதிகரிக்க, பனி உருகத் தொடங்கி அந்த வீட்டை உறுதியாக்கி விடும். இந்த பனி வீட்டை எளிதில் உடைத்து விட முடியாது. துருவக்கரடிகள் தாக்கினாலும் உடையாது. அவ்வளவு உறுதியாக இருக்கும்.

எனினும் குளிர்ப்பருவம் முடிந்து வெப்பநிலை உயரும் போது இந்த வீடு உருகி உடைந்து போய் விடும்.

# காதலித்தால் மட்டும் போதுமா?

அவள் தலை குனிந்திருந்தாள். அவன் அனுதாபத்துடன் அவளைப் பார்த்தான். கீழே பள்ளத்தை நோக்கி 'ஹோ'வென தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது. அவன் மெதுவாக பேசினான். "உங்களை எனக்கு யார்ன்னு தெரியாது. ஆனா நான் மட்டும் தக்க சமயத்துல இந்தப் பக்கம் வந்திருக்காட்டி நீங்க விபரீதமான முடிவை எடுத்திருப்பீங்க. இந்த இடத்துக்கு 'காதலர் மலை' ன்னு பேரு... காதல் நிறைவேறாத யாரோ ரெண்டு பேரு ஒண்ணா குதிச்சி தற்கொலை செஞ்சிக்கிட்ட இடமாம். ஆனா இந்த நேரத்துல நீங்க மட்டும் தனியா வந்து உயிரை போக்கிக்கிற அளவுக்கு அப்படி என்ன நடந்துப் போச்சி... இளமைன்னுறது ரொம்ப இனிமையான காலம். ஆனா அது கசக்குமளவுக்கு உங்களோட மனசுல அப்படியென்ன விரக்தி... நான் அந்நியன்தான்... விரும்பினால் சொல்லலாம்...."

அவள் சற்று நேரம் பேசாமலிருந்தாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. உதடுகள் துடித்தன.

"நிம்மதியா யாருக்கும் தொல்லையில்லாம தொலைஞ்சி போக இருந்த என்னை எதுக்காக காப்பாத்தினீங்க..? என் வாழ்க்கையில நான் நினைச்சது எதுவுமே நடக்கலை. நான் சந்தோசமா இருந்த காலங்களை விட கண்ணீரோட இருந்த நாட்கள்தான் அதிகம். என்னோட பேரு மதளா. அம்மா இல்ல. அப்பா ஒரு தனியார் நிறுவனத்துல குமாஸ்தா. நாங்க ஐந்து பேரு. நான் மூத்தவ. ரெண்டு தங்கச்சிங்க ஒரு தம்பி. நான் வங்கியொன்னுல எழுதுவினைஞராக இருக்கேன். என்னோட தங்கைகள் இரண்டு பேருக்கும் ரொம்ப கஷ்டப்பட்டு நல்ல இடத்துல மணம் செஞ்சி வச்சேன். தம்பிக்கு ரொம்ப கஷ்டப்பட்டு நல்ல கம்பெனி ஒண்ணுல வேலை பார்த்து குடுத்தேன். இதுனால என் சேமிப்பு எல்லாம் முடிஞ்சிடுச்சி. ஆனா நான் கவலைப்படலை. நான் என்னோட வேலை செய்யிற பிரான்ஸிஸை விரும்பினேன். அவரும் என்னை உயிரா நினைச்சாரு. ஆனா அவரு வேற மதத்தைச் சேர்ந்தவரு. எங்களோட காதல்னால என்னோட உடன் பிறப்புகளுக்கு எந்த பிரச்சனையும் வரக்கூடாதுன்னுதான் அவங்களோட விஷயத்தை முதல்ல முடிச்சேன். ஆனா என்னோட காதலை அப்பா நிராகரிச்சதுமட்டுமில்லாம பிரான்ஸிஸ்ஸோட வீட்டுக்குப் போய் அவங்களை ரொம்பவும் கேவலமா ஏசிட்டு வந்துட்டாரு. இதுனால என் காதல் காத்துலபட்ட கற்பூரமா கரைஞ்சி மறைஞ்சிப் போயிடுச்சி... என்னால அநாவசியமா பிரான்ஸிஸ் குடும்பத்துல குழப்பம் வரக்கூடாதுன்னு நினைச்சேன். என்னோட கூடப் பிறந்தவங்களோட ஆசை யெல்லாம் நான் நிறைவேத்தினேன். ஆனா நான் விரும்பினது எனக்குக் கிடைக்கல்ல. எனக்காக அனுதாபப்பட என் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் சொல்லக்கூட எனக்கு ஆளில்லை. நான் யாருக்காக வாழணும். இருக்கிறதைவிட யாருக்கும் தொல்லையில்லாம தொலைஞ்சிப் போயிறதுதான் நல்லது இல்லையா...?"

அவள் மேற்கொண்டு பேசமுடியாமல் குலுங்கி குலுங்கி அழுதாள். அவள் அழுது முடியுமட்டும் அவன்பேசாமல் இருந்தான். இலேசாக இருட்டத் தொடங்கியது. அவன் அழுது ஓய்ந்தவளை தீர்க்கமாகப் பார்த்தான்-



**பாலா சங்குபிள்ளை**

"மிஸ் மதளா...அழுது முடிச்சிட்டீங்களா... நீங்க உங்களோட துன்பங்களை சொல்லி அழுதுட்டீங்க. ஆனா உங்களைவிட மோசமா வாழ்க்கையில பாதிக்கப்பட்டவன் நான். வாழ்க்கைன்னுறது மலர். காதல் அதனுடைய தேன்னு சொல்லுவாங்க. ஆனா என்னோட வாழ்க்கையில எல்லாமே வீண்தான். வறுமையினால அதிகமா படிக்க முடியல. குடிகார அப்பா. சந்தோஷம்ன்னுறதே என்னன்னு தெரியாத நரகவேதனையோட வாழ்க்கையை ஓட்டும் அம்மா. எதிர்கால கனவுகளோட கற்பனையில காலத்தை கழிக்கும் தங்கைமார். மணந்தால் மாமன் மகன்-இல்லையென்றால் மரணம்னு வாழ்ற என்னோட மைதிலி.. சொற்ப சம்பளத்துல சாதாரண கடைசிப்பந்தியா நான்... முயற்சி இல்லாத நம்பிக்கை கப்பல் இல்லாத கடல்யாத்திரை மாதிரி.. நான் முயற்சி செஞ்சேன்.. வாழ்க்கையில நம்பிக்கை வைச்சேன். படிப்படியா உயர்ந்தேன். ஒரு கடைக்கு சொந்தக்காரனானேன். தங்கைகளோட கனவுகளை நிஜமாக்கினேன்.

ஆனா உங்களை மாதிரி நானும் காதல்ல தோத்துப் போயிட்டேன். மைதிலி எனக்கு கிடைக்கல்ல. அவளுக்கு வேற இடத்துல கல்யாணம் பேசினாங்க அவ மறுத்தா. அவங்க விடல்ல. அவ்வளவுதான் நஞ்சு குடிச்சிட்டா. கதவு வழியா வந்த என்னோட காதல் யன்னல் வழியா போயிடுச்சி... அதுக்காக உயிரை விட்டுடுட முடியுமா.. காதல்ல தோத்தவங்க எல்லாரும் இப்படி உயிரை விட்டுடுட்டா உண்மையான காதலுக்கு என்னதான் அர்த்தம்... இதுக்கு மரணம் தான் பரிகாரம்னா... அப்படிப்பட்ட காதல் தேவையே இல்ல.. காலம் போன காதலால பட்ட காயம் ஆறிடும்... உங்களுக்காக அனுதாபப்பட ஆளில்லைன்னு நீங்க ஏன் நினைக்கணும். உங்களோட கதையை ரொம்ப அக்கறையோட நான் கேட்கலையா.. நாம ஏன் நல்ல நண்பர்களாக இருக்கக்கூடாது யோசிச்சிப் பாருங்க... அதுக்கு மேலே உங்க விருப்பம்..."

அவன் மெதுவாக அந்த இடத்தை விட்டு நடக்கத் தொடங்கினான். பின்னால் காலடிச் சத்தம்கேட்டது. திரும்பிப் பார்த்தான். முகத்தில் ஒரு புதுப்பொழிவுடன் உறுதியான உள்ளத்துடனும் மதளா அவன் பின்னால் வந்துக் கொண்டிருந்தாள்.

அவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான். அவன் மேல் உயிரையே வைத்திருந்த மைதிலி போனவாரம் உயிரை விட்டுவிட்டாள். அதற்குப் பின் அவனுக்கு வாழவே பிடிக்கவில்லை. தற்கொலை செய்யும் எண்ணத்துடன் தான் அந்த இடத்துக்கு வந்தான். ஆனால்-அதே முடிவுடன் வந்தவளுக்கு ஆறுதலும் நம்பிக்கையுமூட்டினான். அவளிடம் பேசிய வார்த்தைகள் யாவும் அவன் மனதில் திரும்பத் திரும்ப எதிரொலித்தது. அவன் முடிவையும் மாற்றி மனதில் வெளிச்சத்தை ஏற்படுத்தியது. தனது முட்டாள்தனமான முடிவிற்காக வெட்கினான். காதலுக்காக வாழலாம். ஆனால் காதல் காலை வாரிவிட்டால், அதற்காக காலனிடம் சரணாகதியடைய நினைப்பது முட்டாள்தனம். காலம்பொன்னானது. சாதிக்க வேண்டியவை எவ்வளவோ இருக்கையில் காதலுக்காக உயிரை இழக்க நினைப்பது உண்மையிலேயே எவ்வளவு பெரிய மடத்தனம் என்பதை இப்போது அவன் நன்றாக உணர்ந்துக் கொண்டான். தக்க சமயத்தில் தன் அறிவுக் கண்ணை திறந்து விட்ட மதளாவை மதிப்புடன் பார்த்தான் அவன். அவளோ தனக்கு சரியான சந்தர்ப்பத்தில் அறிவுரைக்கூறி அவளை தெளிய வைத்த அவனை நன்றியுடன் நோக்கினாள்.

# மச்சம்

தனது எதிர்கால வாழ்வை கவனத்திற்கொண்டு அந்த வலியைப் பொறுத்துக் கொண்டாள். இப்போது அவளின் கண்ணில் வலது முனையில் சற்றுப் பெரிதாக கறுப்பு பச்சை குத்தப்பட்ட ஒரு மச்சம். ஏற்கனவே இடது கண்ணின் முனையில் இயற்கையாக காணப்பட்ட அந்த சிறிய மச்சத்தைக்கண்டு பதறிப்போனார் கல்யாணத் தரகர்,

'திருமணத்தின்போது பலபிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புண்டு. அந்த மச்சத்தோட ஒரு பெண் காணப்பட்டால், ஆணின் பல கொடுமைகளுக்கு ஆளாகுவதுடன், வாழ்க்கையில் இறுதிக்கட்டத்தில்தான் சிறப்பாக அமையும் என்று பலன் சொல்கின்றது'

இதையெல்லாம் பெண்வீட்டார்கள் பெரிது படுத்துவதில்லை. ஆனால் மாப்பிள்ளையை விட அவரின் உடன்பிறந்த மூத்த சகோதரி மச்ச பலன் பார்க்கும் விடயத்தில் தீவிரமாக இருப்பதும், அவரின் குடும்பம் வருமானத்தில் உசத்தியாக இருப்பதனால் மாப்பிள்ளையின் வீட்டார்கள் ஏகப்பட்ட மதிப்புக்களை அந்தப் பெண்ணுக்குக் கொடுப்பதனாலும், கலங்கிப்போன பெண் வீட்டார் ரகசியமாகவே இந்த ஏற்பாட்டைச் செய்து கொண்டனர். இருவரையும் தவிர வேறுயாருக்குமே இந்த விடயம் தெரியாமல் இருப்பதே அவர்களுக்கு திருப்தி. எப்படியும் தனது மகளின் கல்யாணம் நடைபெற வேண்டும் என்பதற்காகவே இந்த செயற்கை ஏற்பாடு மாப்பிள்ளை வீட்டாருக்கு நெத்தியடியாக.

"எனக்குப் பயமா இருக்கு. வித்தியாசம் தெரியுதாம்மா...?"

"ஒண்ணும் தெரியவில்லை. இடது பக்கத்து சிறியதைவிட வலது பக்கமிருப்பது பெரிதாக இருப்பதனால் பிரச்சனைக்கு இடமில்லையாம். இப்போ நீ மச்சம் கொண்ட அதிஸ்டக்காரிதான்."

"எனக்கு பயம்மா இருக்கு..."

"நாம இப்போ இங்க புதுசா வந்த ஆட்கள். பெரிதாக யாருமே கவனித்திருக்க மாட்டார்கள். தவிர தேவைப்பட்டவர்கள் தான் பெரிது படுத்துவார்கள். நீ எது நடந்தாலும் உன்பாட்டில இருந்தால் போதும்."

"எப்படியாவது பிறகு கேள்விப்பட்டு...?"

"எல்லாப்பிரச்சனைகளையும் நான் பார்த்துக்கொள்கிறேன். நீதான் ரெண்டொரு மாதத்திலே மாப்பிள்ளை கூட வெளிநாடு போயிடுவியே."

"அங்கவைத்து அவருக்கு உண்மை தெரிய வந்தால்...?"

"ஆரம்பத்திலே நல்ல மச்சக்காரி என்று பெயர் எடுத்துக்கொண்டால்; பிறகுவரக்கூடிய பிரச்சனைகளை சம்பந்தப்பட்டவர்களே பெரிது படுத்தமாட்டார்கள். எப்படியும் மாப்பிள்ளை வீட்ல சமாளித்துக்கொண்டால் பிறகு சிக்கலில்லை."

"ஐயோ அம்மா! அவரும் மச்ச பலன் பார்ப்பவராமே. அதான் பயமாக இருக்கு..?"

"ரெண்டொரு பிள்ளைங்க கிடைச்சு வாழ்க்கை சந்தோசமா ஆனப்புறம், அத பெரிசாக யாருமே கவனிக்கமாட்டாங்க."

"ஏம்மா இப்படியெல்லாம் பார்க்கிறாங்க...? என்னோட வலது கண்முனையில் மச்சமிருந்தால் என்னோட கல்யாண வாழ்க்கை மகிழ்ச்சியா இருப்பது சரி, வார கணவர் சிறந்த குணமுள்ளவராகவும் கருணை நிறைந்தவராகவும் இருப்பார் என்பதை எப்படி..?"

"விசர் கதை கதைச்சுக்கொண்டு எல்லாத்தையும் குழப்பிப்போட்டுடாதே. வாழ்க்கை அனுபவம் ஏற்பட நீயாகவே பிறகு சமாளித்துக்கொள்வாய். மச்சம் பார்க்கிற விசயத்தில நாமலும் குறைஞ்சவங்க இல்லையென்பதை சொன்னதால வந்த வில்லங்கம் இது. ஏதோ கோணேஷ்ர் புண்ணயத்தில கல்யாணம் நல்லபடியாக முடிந்தால் சரி."

"போவதற்கு முன்னமே அழிஞ்சு போயிடுமென்று பயமா இருக்கும்மா..."

"எப்படியும் 3 வருடங்களைத் தாண்டும். அதற்குள்ள எவ்வளவோ நடந்திடும். நீதான் சமாளித்து சந்தோசமா வைத்துக்கொள்ள வேண்டும்."

அந்த தாயுடைய நியாயமான ஆதங்கத்தை அவளால் நன்றாகவே புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. நீண்ட காலங்களாக இழுபட்டுக்கொண்டிருந்த அவளுடைய கல்யாணம் நல்லபடியாகவே நடக்க கிடைத்திருப்பது அருமையான சந்தர்ப்பம். சாதாரண மச்ச விடயத்தில் இந்த சம்பந்தமும் கை நழுவிவிடக்கூடாது என்பதில் அந்தத்தாய் மிகவும் வைராக்கியமாகவே இருந்தாள்.

அவர்களின் எண்ணப்படியே எல்லாம் சிறப்புடன் முடிவாக்கப்பட்டு, திருமணத்திற்கென தாலிக்குப் பொன் உருக்கவும் நாள் குறிப்பிட்டாயிற்று. மாப்பிள்ளையின் மனதிலிருந்த அந்த ஏக்கத்தைச் சரிவரப் புரிந்து கொண்ட புரோக்கர் சந்தர்ப்பம் பார்த்து பெண்ணின் தாயிடம் கூற காரியம் கைகூடியது.

தனது சிறிய தங்கையைத் துணைக்கு அழைத்துக்கொண்டு தனது வீட்டின் தனியறையில் தலை குனிந்தபடியே மாப்பிள்ளையின் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். சற்று நேரத்தின் பின்னர் கனைத்துக்கொண்டவர், குரல் கொடுத்தார்.



**இளையவன்- திருகோணமலை**

"சொல்லுங்க..."

"உங்களுக்கு மச்சம் வடிவாயிருக்கு." பளிச்சென்ற அந்த வார்த்தையை கேட்டுப் பதறிப்போய் அவரை முகத்திற்கு நேரே ஏறிட்டாள்.எந்த மச்சத்தை சொல்கின்றார்?

"உங்களுடன் காலம்பூராகவும் வாழப் போற வாழ்க்கை சந்தோசமாக இருக்கும் என்று அந்த பெரிய மச்சம் பார்த்து சொல்லியிருக்காங்க. எனக்கு சந்தோஷம்."

அவள் வெட்கப்பட்டுக் கொண்டாள். உள்ளே உடம்பு நடுங்கி வியர்த்துக்கொண்டிருந்தது. இன்னும் அவர் அந்த மச்சத்தையே மையமாகக் கொண்டு ஏதோவெல்லாம் பேசி அவளைப்புகழ்ந்து கொண்டிருந்தார். உள்ளே அவள் புழுங்கிக் கொண்டிருப்பது அறியாது. முதல் பார்வையிலேயே அவருடைய முகத்தில், வாயின் வலது முனையில் அந்த சிறிய மச்சத்தை கண்டுகொண்டாள். தானும் பேசியாக வேண்டும் என்பதனால் தயங்கித் தயங்கி முகம் சிவக்க,

"உங்கட மச்சமும் நல்லாயிருக்கு."

அவருக்குள் ஏகப்பட்ட பெருமிதம். மெல்லிதாகவே புன்னகைத்துக்கொண்டார்.

"இதன் பலன் தெரியுமா...?"

தெரியுமென்று தலையாட்டிட சொல்லும்படி கேட்டுக்கொண்டார்..

"நம்ம வாழ்வு சிறப்பாக இருக்கும் நம்ம வாரிசுகளும் நல்லவர்களாக, உயர்ந்த எண்ணங்கள் கொண்டவர்களாக..." பேச்சை முடித்துக்கொள்ளாமல் வெட்கத்தினால் முகத்தை இரு கைகளினாலும் பொத்திக் கொண்டு குறுகிப் போனாள். திருப்தியின் எல்லைக்கும் அப்பால் சென்றவர் தன் திட்டம் சரியாக வேலை செய்வதை மனதிற் கொண்டு சந்தோசத்துடன் வித்தியாசம் கண்டுபிடிக்கவே முடியாத அந்த செயற்கையாகப் பச்சை குத்தப்பட்ட மச்சத்தைத் தடவிக்கொண்டார்.

# மணிக்கூட்டு வாழ்க்கை

ஐந்துதரம் மணி அடித்து ஓய்ந்தது. மணிக்கூட்டைப் பார்த்தேன். ஆறுமணி.

"உந்த மணிக்கூட்டைப்பிடுங்கி எறிய வேணும்!" என்றாள் மாதங்கி. அதை ஆமோதித்தான் அவளுடைய அண்ணன் ஜெயராம். நான் வாய் திறக்கவில்லை. ஏனென்றால் என்னுடைய வார்த்தையும் இப்போது அந்த மணிக்கூட்டைப்போல மதிப்பிழந்து இருந்தது. சுவரிலே மிகவும் கஷ்டப்பட்டு ஓடிக்கொண்டு இருந்தது அந்த மணிக்கூடு. கடந்த எட்டுவருடங்களாக உழைத்து ஓய்ந்ததற்குரிய மரியாதையை அதற்கு யாருமே கொடுக்கத் தயாராயில்லைதான் . வண்டி இழுத்து, வயலில் உழுது ஓய்ந்த காளைமாட்டை கசாப்புக் கடைக்கு இறைச்சிக்குக் கொடுப்பதைப்போல, இந்த மணிக்கூட்டை கொடுக்கக்கூடிய கடை இல்லை. தவிர புதிய வடிவங்களில் கவர்ச்சியாக எத்தனையோ மணிக்கூடுகள் எல்லாம் இப்போது சந்தைக்கு வந்து இருக்கின்ற போது, இதையார்தான் திரும்பிப்பார்க்கப் போகின்றார்கள்.



கடந்த எட்டு வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கடைத்தெருவில் அந்த மணிக்கூட்டைக் கண்டேன். தங்கவர்ணத்தில் எழுத்துக்கள், வெள்ளிக்கம்பிகளால் விளிம்புகள். இரண்டு கரைகளிலும் குருவிகள்.மேலே சிறிய குருவிகள். விநாடிக்கம்பியின் அசைவுக்கு ஏற்ப தலையை அசைத்துக் கொண்டு இருந்தன. கீழே தூக்கணாங்கம்பி ஒன்று அழகாக ஆடிக்கொண்டு இருந்தது. அறுபது நிமிட இடைவெளியில் கணீரென்று மணி அடித்துக்கொள்ளும். அந்தக் காலகட்டத்தில் அது ஒரு புதியவடிவம். எல்லோராலும் விரும்பப்பட்டவடிவம். அந்த மணிக்கூட்டை வாங்கிக்கொண்டு போய் அவர்களுக்கு பரிசாகக் கொடுத்தேன். அதன்பெரிய கம்பியைச் சுற்றி சரியான இடத்தில் விட்டு, கீழே உள்ள தூக்கணாமையும் ஆட்டிவிடும்போது, மணி அடிக்கும். அப்போது ஜெயராமும் மாதங்கியும் பெரிதாக ஆரவாரம் செய்வார்கள். அந்தத் தூக்கணாம் ஆடும் அழகை இருவருமே இரசிப்பார்கள். அப்போதைய மாலை நேரங்கள் எல்லாம் மிகவும் இனிமையாக இருக்கும். தினமும் என்னை எதிர் பார்த்து இருப்பார்கள் அந்த மணிக்கூட்டின் மணிச்சத்தத்தைப்போல.

நான்கு வருடங்களுக்கு பிறகு ஒருநாள் திடீரென்று மணிக்கூடு நின்றுவிட்டது. நான்தான் அதற்கு ஏதோ எல்லாம் செய்தேன். எதேச்சையாக மீண்டும் ஓடத் தொடங்கியது. ஆனால் அவர்களுக்கு முன்பு இருந்த குதூகலம் மட்டும் இப்போது இல்லை.

"ஏதோ ஓடினால் போதும்" என்றாள் மாதங்கி.

"இப்போ மனிதர்களுக்கு வயித்துவலி வருவதில்லையா, அதைப்போலத்தான் இதுவும்" என்றேன். ஒரு சீலையால் அதை நன்றாகத் துடைத்து விட்டேன். அழகாக இருந்தது. ஆனாலும் அந்த அழகை ரசிக்கக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை. காரணம் அந்த மணிக்கூடு தினமும் அவர்களின் கண்களில் பட்டுக்கொண்டு இருப்பதால், அதன் அழகு அவர்களுக்கு தெரியவில்லை. இது ஓர் உளரீதியான மாற்றமே தவிர, இயற்கையான மாற்றம் அல்ல; அதன் பிறகு இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஒருநாள் இப்படித்தான் நின்று விட்டது. அன்றும் ஏதோ வைத்தியம் செய்ய மீண்டும் ஓடத் தொடங்கியது. இப்போது முதல் தடவையாக....,

"வேறை ஒரு மணிக்கூடு வாங்குவோம் அப்பா" என்றாள் மாதங்கி.

"குடிக்க கொஞ்சம் தண்ணீர் தாங்கோ மாதங்கி" என்று கேட்டால் "போய் எடுத்துக் குடியுங்கோ" என்பாள் மாதங்கி. மனிதர்களை விட மணிக்கூடு ஒன்றும் பெரிதாய் மாறுவதில்லை.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்..." என்று கூறுவது கருத்துக்களுக்கே தவிர மணிக்கூடுகளுக்கும் மனிதர்களுக்குமல்ல.

"ஜெயராம் இப்போ இந்த எட்டு வருசத்திலை இரண்டு நாய்கள் வரையிலை வாழ்ந்து இறந்தும் விட்டுது. மணிக்கூடு மட்டும் எப்பிடியப்பா கஸ்ரப்படாமல் ஓடும்?" என்று கேட்டேன். "அதற்காக வேறு நாய் வாங்காமலா இருந்து விட்டோம்?" என்றான்.

ஓ இவன் கூட பெரியவனாக ஆகிவிட்டான் அல்லவா? அந்த மணிக்கூட்டின் பெரிய கம்பியாக அவர்களும், சிறிய கம்பியாக நானும் இருப்பதாக உணர்ந்தேன். அன்று முழுக்க மணிக்கூட்டைப்பற்றியே யோசித்துக் கொண்டு இருந்ததால் கனவில்கூட அது என்னோடு பேசியது. அடுத்த நாள் அந்த மணிக்கூட்டில் இருந்து ஒரு குருவி கழன்று கீழேவிழுந்து உடைந்து விட்டது.

இப்போதெல்லாம் மாலைவேளையில் நானும் அந்த மணிக்கூடும்தான். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு இருப்போம். ஏதோ ஒரு தனிமை என்னை வாட்டியது. ஜெயராம், மாதங்கியினுடைய உலகம் விரிவடைந்து இருந்தது. இப்போதெல்லாம் வீட்டில் இருக்க அவர்களுக்கெங்கே நேரம். காலமாற்றமும், பருவமாற்றமும் மனித மனங்களில்கூட மாற்றத்தை ஏற்படுத்துகின்றனவா? என்பது எனக்கு புரியவில்லை. ஏனென்றால் ஒருநாள்,

"விசர்மணிக்கூடு" என்றாள் மாதங்கி. எப்படி ஒருகாலத்தில் நல்லதாய் இருந்த மணிக்கூடு இன்னொரு காலத்தில் விசராய் போனது. இப்போது குருத்தோலை காவோலையாவதும், மனிதர்கள் வாழ்ந்து இறப்பதும் கூட இயற்கையின் நியதிதான். அதற்காக அவை வாழும் காலத்தில் அதற்குரிய மதிப்பை கொடுக்காமலா விடவேண்டும்? என்று நினைத்தேனே தவிர அவர்களிடம் கூறவில்லை. அவர்கள் என்ன சின்னப் பிள்ளைகளா? புத்தி சொல்வதற்கு. சிலவேளைகளில் யாருக்காவது புத்தி சொல்வது ஆலோசனை கூறுவதுகூட தவறாய்தான் போய்விடுகிறது. அவர்களை விவாதித்து ஜெயிப்பதைவிட, அவர்களின்வெறுப்பை சம்பாதிக்காமல் இருப்பதுதான் அவசியமாகப்பட்டது. எனக்கு மணிக்கூட்டைப் பார்க்க சிரிப்பாக இருந்தது. ஏதோ தன்னால்தான் உலகம் சுற்றுகிறது என்ற நினைப்பு அதற்கு!

ஒரு பொருளினுடைய மதிப்பும், மரியாதையும் அதன் உபயோகத்தை சார்ந்துதான் இருக்கிறது. அது மணிக்கூடானாலும் சரி மனிதனாக இருந்தாலும்சரி. அன்றையதினம் அந்த மணிக்கூடு இருந்த இடத்தில் அதை காணவில்லை. புதிதாக வேறு ஒரு மணிக்கூடு இருந்தது. மாதங்கி என்னைப் பார்த்து ஒரு புன்சிரிப்பை உதிர்ந்தாள். அதன் அர்த்தம் எனக்குப் புரிந்தது.

"இது புது டிசைன். மாதங்கியினுடைய செலக்சன். இன்று காலையிலைதான் வாங்கியது. எப்படி நல்லாய் இருக்கா?" என்று கேட்டான் ஜெயராம்.

"ஓ, பிரமாதமாய் இருக்கிறது." என்றேன். சுவரிலே புது நட்சத்திரமாய் மின்னிக் கொண்டு இருந்தது அந்தப் புதிய மணிக்கூடு. பாவம் இன்னும் எட்டு வருடங்களின்பின் அதன் நிலையை நினைத்துக்கொண்டு அந்த இடத்தைவிட்டு வெளியேறினேன்.

**இணுவில் உத்திரன்**

அசத்தல் தொடர் 02

# ஓடாதே! ஒளியாதே!

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

பட்டுப் புடவையில் மின்னும் மாப்பிள்ளையின் அம்மா. சில்க் ஜிப்பா, வேஷ்டி தரித்த அப்பா. மாப்பிள்ளைப் பையன் பூப் போட்ட சட்டையை கறுப்புப் பேன்ட்டில் இன் பண்ணியிருந்தான். தவிர இரண்டு உறவுக்கார நபர்கள்.

தரகர் எதிர்கொண்டார். "வாங்க... வாங்க..."

முரளி பவ்யமாய் கும்பிட்டான்.

மாப்பிள்ளைக்கு மட்டும் ஒரு ஃபோல்டிங் சேர் போடப்பட மற்றவர்கள் ஜமுக்காள விரிப்பில் தங்களை இருத்திக் கொண்டார்கள்.

"அட்ரஸ் கரெக்டா கண்டுபிடிச்சிட்டிங்களா?"

கேட்ட தரகரைப் பார்த்துப் புன்னகைத்தார் மாப்பிள்ளையின் அப்பா.

"நீங்தான் அட்ரசைக் குடுத்து தெளிவா வழி சொல்லிட்டீங்களே! நீங்க சொன்ன அடையாளங்களை வெச்சிகிட்டு சிரமமே இல்லாம வீட்டைக் கண்டுபிடிச்சிட்டோம்."

"இவர்தான் பொண்ணோட அண்ணன் முரளி. அம்மா, அப்பா இல்லை. பொண்ணுக்கு சகலமும் இப்ப இவன் தான். காமாட்சி பாக்கேஜிங் கம்பெனில வேலை பார்க்கறார்.

மாப்பிள்ளையின் அப்பா புன்னகைத்தார்.

"இந்த விவரங்களையெல்லாம் எங்களுக்கு ஏற்கெனவே சொல்லிட்டிங்களோ.. புதுசா ஏதாவது இருந்தா சொல்லுங்க தரகரே..."

"எங்களைப் பத்தி முரளி தம்பிகிட்டே எல்லா விவரங்களும் சொன்னீங்களா?" கேட்டாள் மாப்பிள்ளையின் அம்மா.

கேட்ட அந்த அம்மாவை-முரளி நன்றிப் பெருக்கோடு ஏறிட்டான்.

"தரகர் எல்லாமே சொன்னார்ம்மா. வரதட்சணை வரதட்சணை'ன்னு எல்லாரும் பேயா அலையற இந்த காலத்தில் 'வரதட்சணை வேண்டாம்'ன்னு சொல்லிட்ட உங்களை நான் கையெடுத்து கும்பிடறேன்..."

"பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க தம்பி. இந்தக் காலத்தில் பணத்தின் மேல வெறி பிடிச்சு அலையறவங்க ஜாஸ்திதான். ஆனா எல்லாரும் அப்படி இல்லை. குணத்தை மதிச்சு பழகறவங்களும் இருக்காங்க. எங்களுக்கு பணம், காசு பெரிசில்லை. அடக்க, ஒடுக்கமா குடும்பத்தை அனுசரிச்சு நடந்துக்கிற பொண்ணு வேணும். அப்படிப்பட்ட பொண்ணு கட்டின புடவையோட வந்தாலும் போதும். கண்கலங்காம வெச்சிப் போம்."

"சின்ன வயதிலேயே எங்க அம்மா இறந்துட்டாங்க. அப்ப இருந்து இந்த வீட்டில் செய்ய வேண்டிய அத்தனை காரியங்களையும் பிசகாம செஞ்சுட்டு வர்றது காயத்ரிதான். நீங்க எதிர்பார்க்கிற பொறுமை, பொறுப்பு எல்லாமே காயத்ரிகிட்டே நிறையவே இருக்கும்மா..."

"அது போதும். இதைவிடப் பெரிய சீதனம் வேறெதுவும் வேண்டியதில்லை..."

"இப்படியே எத்தனை நேரம் நமக்குள்ளேயே பேசிக்கறது? பொண்ணை வரச் சொல்லுங்க தம்பி! மாப்பிள்ளை பார்க்கட்டும். மனசுக்குப் பிடிச்சிருந்தா இங்கேயே ஒரு நல்ல முடிவு எடுத்து நாளையும் குறிச்சிரலாம்."

காயத்ரியின் முகத்தை வெட்கச் சிவப்பு தீவிரமாய் முற்றுகை இட்டிருந்தது. அம்மாவின் கல்யாணப் புடவை வீட்டில் மிச்சம் இருக்கப் போய்... அதைத் தான் அவள் கட்டி இருந்தாள். ஆங்காங்கே சில ஜரிகை இழைகள் நைந்துபோய் தெரிந்தாலும்-அது வெளியே தெரியாமல் அட்ஜஸ்ட் பண்ணிக் கட்டியிருந்தாள். கழுத்தில் தங்க வெளிச்சம் காட்டியது. பக்கத்து வீட்டின் இரவல் செயின்.

காபித் தட்டைக் கையில் ஏந்தியபடி, காயத்ரி உள்ளறையிலிருந்து வெளிப்பட்டாள்.

உடம்பின் அத்தனை நரம்புகளிலும் வெட்க மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்க, மெல்லிய நடுக்கத்துடன் நடந்து ஒவ்வொருவரிடமாய்ப் போய் காபி தட்டை நீட்டினாள்.

"காபி நீ போட்டதா காயத்ரி...?"

மாப்பிள்ளையின் அம்மா கேட்க- 'ஆமாம்' என்கிற மாதிரி தலையை அசைத்தாள் காயத்ரி. உலர்ந்து போன தொண்டைக்குள்ளிருந்து பேச்சே வரவில்லை.

கடைசியாய்க் காபி தட்டை மாப்பிள்ளையிடம் நீட்டினாள். நீட்டும்போது அவளையறியாமல் பார்வை மாப்பிள்ளையின் மேல் ஒரு விநாடி சென்றுவிட்டு மீண்டது.

ஹீரோ லெவலுக்குச் சொல்ல முடியாவிட்டாலும் லட்சணமாய் இருந்தான். மீசை அளவைக் கொஞ்சம் பெரிசுபடுத்தச் சொல்ல வேண்டும். டார்க் கலர் சர்ட் போட்டால் இன்னும் கொஞ்சம் எடுப்பாயிருக்கும். புருவத்துக்கருகில் என்ன அது தழும்பு? சின்ன வயது விழுப் புண்ணா?

அந்த ஒரு விநாடிக்குள் இத்தனையும் தோன்றியது காயத்ரிக்கு.

எல்லோர்க்கும் காபி கொடுத்துவிட்டு-காலித் தட்டோடு காயத்ரி திரும்பிப் போக எத்தனித்தாள்.

"இங்கே வந்து உக்காரும்மா..."

மாப்பிள்ளையின் அம்மா அவளைத் தன்னருகில் கூப்பிட்டு உட்கார வைத்துக் கொண்டாள்.

எல்லோர் பார்வையும் இப்போது மாப்பிள்ளைப் பையனிடம் போய் நின்றது. வந்திருந்த உறவுக்கார ஆள் சொன்னார்.

"மாப்பிள்ளை... பொண்ணு பிடிச்சிருக்கா? பட்டுன்னு சொல்லிடு. உன்னோட பதிலைப் பொறுத்துத்தான் மேற்கொண்டு பேசணும்.."

முரளியின் மனசு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. காயத்ரிக்குள்ளும் ஒரு பறவை ஓயாமல் சிறகடித்தது.

'அபூர்வமான சம்பந்தம் திரண்டு வந்திருக்கிறது. மாப்பிள்ளைப் பையனின் பதிலால் இந்த சம்பந்தம் உடைந்து போய் விடக்கூடாது.'

சில யோசனை நிமிஷங்களுக்குப் பின் "இந்தப் பொண்ணை எனக்குப் பிடிச்சிருக்கு!" என்றான் மாப்பிள்ளை.

முரளி நிம்மதி மூச்சு விட்டான். காயத்ரியின் இருதயத்தை சந்தோஷக் காற்று ரொப்பிக் கொண்டது.

தரகர் பேச்சை ஆரம்பித்தார்.

"கல்யாணத்தை எந்தத் தேதியில் வெச்சுக்கலாம்னு முடிவு பண்ணிகிட்டா... இன்னிக்கு சம்பிரதாயமா பாக்கு, வெத்தலை மாத்திக்கலாமே..."

"பஞ்சாங்கம் இருக்கா தம்பி..?"

"பக்கத்து வீட்ல இருக்கு. கொஞ்சம் இருங்க வாங்கிட்டு வரச் சொல்றேன்."

முரளி சொன்ன அந்த விநாடி-வாசலில் அந்த ஜீப் வந்து நின்றது. அதைத் தொடர்ந்து-தப்தப்பென்று பூட்ஸ் ஒலிகள்.

எட்டிப் பார்த்தவர்கள் அதிர்ந்தார்கள்.

போலீஸ் ஜீப்.

மொட மொடத்த காக்கி யூனிபார்முடன் நாலைந்து போலிஸ்காரர்கள் வேகமாய் வீட்டுக்குள் நுழைய-அவர்களுடன் வந்த ஒரு நபர்-மாப்பிள்ளை வீட்டு ஆட்களைப் பார்த்துக் கூச்சலிட்டார்.

"இதே ஆட்கள்தான் இன்ஸ்பெக்டர் அநியாயமா எங்க மகளோட வாழ்க்கையே இவங்களால நாசமாயிருச்சு. ராஸ்கல்.. இந்த குடும்பத்திலும் உங்க வேலைத்தனத்தைக் காட்ட வந்துட்டிங்களாடா...?"

"கான்ஸ்டபிள்ஸ்! அரெஸ்ட் தெம்." என்று கத்தினார் இன்ஸ்பெக்டர்.

முரளிப் பதட்டப்பட்டான்.

"இன்ஸ்பெக்டர். என்ன இதெல்லாம்?"

"இந்தப் பொண்ணு யாரு, உங்க தங்கச்சியா?"

"ஆமா..."

"உங்க தங்கச்சியோட வாழ்க்கை நாசமாகாமே தப்பிச்சிருக்கேன்னு சந்தோஷப்படுங்க. அப்பா, அம்மா, மகன் போல வந்திருக்கும் இவங்க பக்கா கிரிமினல்ஸ்!"

திடுக்கிட்டான் முரளி.

அந்த இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார். "வரதட்சணை வாங்காத பெருந்தன்மையான குடும்பம் போல நடிச்சு பல ஊர்களில் இவங்க கை வரிசையைக் காட்டிருக்காங்க. கல்யாணம் பண்றது இவங்க தொழில். அப்புறம் அந்த அப்பாவிப் பெண்களை ரெட்லைட் ஏரியாவில் வித்துருவாங்க. இந்த ஊர் லாட்ஜில் இவங்க வந்து தங்கியிருப்பதாய் தகவல் கிடைச்சது. இவங்க நடவடிக்கையைக் கண்காணிச்சு இங்கே கையும், களவுமா பிடிச்சுட்டோம்."

இருண்டு போன முகத்துடன் இருந்த மாப்பிள்ளைக் கோஷ்டியை ஜீப்புக்கு நெட்டித் தள்ளியது போலீஸ். (வரும்)



# நாகரீகப்புயலில் அரேபியப் பெண்கள்

அரேபிய முஸ்லிம் பெண்மணிகள் தங்களது பாரம்பரியத்தை உடைத்துக் கொண்டு இப்போது மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

வீட்டில் மனைவியாகவும், தாயாகவும் மட்டுமே இருந்து வந்த அவர்கள் வீட்டுச் சிறைக்கு 'சலாம்' போட்டுவிட்டு வீதிகளில் சுதந்திரமாக வலம் வரத் தொடங்கி இருக்கிறார்கள்.

சமைப்பது, வீட்டை சுத்தம் செய்வது, குழந்தைகளை பராமரிப்பது, கணவரை கவனித்துக் கொள்வது...என்று சதா வீட்டிலேயே அடைந்து கிடந்த அரேபியப்பெண்மணிகள் இன்று நிறுவன அதிகாரிகள், மனேஜர்கள்... என உயர் பதவிகளில்... சுதந்திரக்காற்றை சுவாசிக்க தொடங்கி இருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

முன்பைவிட அரேபிய பெண்கள் ஆர்வத்துடன் பாடசாலை பல்கலைகழகங்களில் சேர்ந்து அதிக அளவில் பயின்று வருகின்றார்கள். தற்போது 52 சதவீத அரேபியப் பெண்மணிகள் கல்வி அறிவ பெற்று இருக்கிறார்கள்.



முஸ்லிம் பெண்களின் கல்வி அறிவை பயன்படுத்திக் கொள்ள அங்குள்ள முதலீட்டு நிறுவனங்கள் போட்டி போடுகின்றன. பெண்களை வேலைக்கு அமர்த்தி பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதன் மூலம் ஏராளமான வீட்டு பெண்மணிகள் இன்று நிறுவன அதிகாரிகளாய் மாறி இருக்கிறார்கள்.

தற்போது அரேபியப் பெண்கள் சொந்தமாகவும் தொழில் செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள். இதனால் பொருளாதாரமும், பெண்களின் வருமானமும் மேலும் உயர்ந்து வருகிறது.

அரேபியப் பெண்கள் இண்டர்நெட், டெலிவிஷன் மூலம் ஏராளமான தகவல்களை தெரிந்து கொள்கிறார்கள். இண்டர்நெட்டை பயன்படுத்தும் பெண்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பல மடங்கு பெருகிக் கொண்டே இருக்கிறது. இதனால் மற்ற நாட்டு பெண்களை போல் தாங்களும் முன்னேற வேண்டும் என்ற ஆர்வத்தில் அனைத்து துறைகளை பற்றியும் கற்று வருகிறார்கள்.

சமுதாயத்திற்கு பெண்கள் செய்ய வேண்டிய பணிகள் என்ன என்பது பற்றி எல்லாம்கூட தங்களுக்குள்ளே விவாதித்துக் கொள்கிறார்கள்.

பெண்களே நடத்தும் வியாபார நிறுவனங்கள் எகிப்து, லெபனான். குவைத் ஆகிய நாடுகளில் பெருகி உள்ளன.

ஏமன் நாட்டில் விவசாயக் கல்லூரி, மீன் வளக் கல்லூரிகளில் கூட தற்போது ஏராளமான முஸ்லிம் மாணவிகள் படித்து வருகிறார்கள். இதன் மூலம் விவசாயத்திலும் கால் பதித்திருக்கிறார்கள்.

இப்படி பல துறைகளில் அதிரடியாய் நுழைந்து அரேபிய ஆண்களை அசர வைத்த பெண்களின் துணிச்சல் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

துபாயில் கடந்த மாதத்தில் மட்டும் 7 பெண்கள் டாக்சி ஓட்ட கற்றுக் கொண்டார்கள். கணவரையும், குழந்தைகளையும் காரில், ஏற்றிய படி புயல் வேகத்தில் செல்கிறார்கள் இந்த பெண்மணிகள்.

ஒரு காலத்தில் அரேபியப் பெண்கள் வெளியாட்கள் முகத்தை பார்ப்பதே பெரிய விஷயமாக இருந்தது. ஆனால் இப்போது அப்படியா?

அவர்கள் இப்போது ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் மேடைகளில் தோன்றி பொப்மியூசிக்கில் கலக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அல்ஜீரியா நாட்டின் புகழ் பெற்ற பொப் குழுவின் பாடகியான அவாடிப் தனது ஆவேச குரலால் பார்வையாளர்களை துள்ளவைத்து விடுகிறார்.

"நான் ஒரு முஸ்லிம் பெண் என்பதில் பெருமையாகத்தான் இருக்கிறது. முதலில் நான் மேடை ஏறி பாடிய போது, பழமைவாதிகளுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது. பெண்கள் பலரது முன்னிலையில் பாடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆனால் போகப் போக எல்லாமே சரியாகி விட்டது. தற்போது அல்ஜீரியாவில் எங்களது இசைக் குழு நன்கு பிரபலமாகி விட்டது. முதலில் எங்களை குறை கூறியவர்கள்கூட விரும்பி வந்து ரசிப்பது சந்தோஷமாகத்தான் இருக்கிறது" என்றார் கனீர் குரலில்.

அரேபிய நாடுகளில் எண்ணை மூலம் கிடைக்கக்கூடிய வருவாய் தற்போது பெருமளவ குறைந்து வருகிறது. ஊழியர்களுக்கு முன்பை விட குறைவாகவே சம்பளம் வழங்கப் படுகிறது.

இதனால் ஆண்கள் சம்பாதிக்கும் பணம் வீட்டுச்செலவுக்கு போதுமானதாக இல்லை. கணவனும், மனைவியும் வேலைக்கு சென்றால் வருமானமும் கூடுகிறது. பெண்களுக்கு தன்னம்பிக்கையும் வளருகிறது.

நிறுவனங்களில் வேலை செய்வதால் பலருடன் பழகக்கூடிய வாய்ப்பு கிடைக்கிறது. கூடவே துணிச்சலும் பிறக்கிறது.

விடுமுறை நாட்களில் வீட்டிலேயே அடைந்து கிடந்தால் போரடித்து விடும் என்பதால் குடும்பத்துடன் பார்க், பீச் என்று சுற்றி வருகிறார்கள்.

இப்படி கடற்கரை செல்லும் இளம் அரேபியப் பெண்களுக்கு கடலில் நீச்சல் அடித்து குளிக்க ஆசை.

விளைவு-

பர்தாவால் உடலை முழுவதுமாக மறைத்துக் கொண்டு வலம் வந்த அவர்கள் தற்போது நீச்சல் உடைகளில்...

அதுவும் சுற்றுலா பயணிகள் குவிந்திருக்கும் கடற்கரை பகுதிகளில்! இதைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் இருக்க முடியாது. இன்னும் சில அரேபியப் பெண்கள் 'கூகா' என்ற புகைப் பிடிக்கும் குழாயை வாயில் வைத்துக் கொண்டு ஸ்டைலாக புகை விட்டபடி சுதந்திரமாக அலைந்து திரிகிறார்கள்.

நீச்சல் உடையில் ஹாயாக படுத்திருக்கும் அரேபிய பெண்மணிகளை பீரட் கடற்கரையில் தான்-அதிகமாக காணமுடிகிறது. அதே பகுதிகளில்தான் புகை சகிதம் ஜாலியாக சுற்றுகிறார்கள்.

இந்த முஸ்லிம் பெண்கள் மிஸிகனில் இருந்து பீரட்டுக்கு குடியேறியவர்கள். பீரட் கடற்கரையில் திரிந்த நீச்சல் உடை



அரபியப் பெண்ணான கதா அஜமி என்பவர் சொல்கிறார்:-

"சமையல் செய்வது, வீட்டை சுத்தம் செய்வது, குழந்தைகளை வளர்ப்பது, கணவரை கவனித்துக் கொள்வது.. என்பது மட்டுமல்ல பெண்களின் வேலை என்று பெண்கள் இப்போது உணர்ந்திருக்கிறார்கள். மாறி வரும் இந்த காலங்களில் இதுவும் ஒரு மாற்றம். அவ்வளவுதான். மற்றபடி இதனை புரட்சி என்று சொல்லி விடமுடியாது.

என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன். நான் எங்கு போனாலும் தனியாகத் தான் போகிறேன். வருகிறேன். யாருக்கும் பயப்படறதில்லை. கை நிறைய சம்பாதிக்கிறேன். நான் வேலைக்குப் போவதால் வீட்டில் பொருளாதார வசதியும் கூடி இருக்கிறது" என்கிறார் எந்தவித பதட்டமும் இல்லாமல்.

கதா அஜமியின் தோழியான இன்னொரு பெண் "நாங்க பழங்கால பாரம்பரியத்திற்கும், தற்கால 'மாடர்ன்' கலாச்சாரத்துக்கும் இடையே இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில்தான் இருக்கிறோம். இப்போதும் முஸ்லிம் மதத்தில் கூறப்பட்டுள்ள கட்டுப்பாட்டை நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம்" என்றார்.

# எஸ்.டி.எஸ். தொடர் 68

# 'பித்தனாக மாறிய கே.எம்.ஷா'

**இரா.பத்மநாதன்**

காலம் கனவேகத்தில் சுழன்றடித்துக்கொண்டிருக்கிறது. அன்று மாணவப் பருவத்திலிருந்தவர்களெல்லாம் இன்று குடும்பஸ்தர்களாகி, பல குழந்தைகளையும் பெற்று குடும்பம் நடத்தி வருகின்றனர். இன்னும் சொல்லப் போனால், அன்றைய மாணவர்களில் சிலர் இன்று தம் பேரக் குழந்தைகளுடன் குதூகலமாக பொழுதைக் கழிக்கின்றனர்.

இவர்களில் பலர் இத்தொடரை வாசித்து விட்டு, தொலைபேசி மூலமும் கடிதங்கள் மூலமும் தொடர்புபடுகின்றனர். சிலரிடம் நான் திட்டு வாங்கவேண்டி இருக்கிறது.

"மாணவப் பருவத்திலேயே நாங்கள் வீட்டாருடைய ஏச்சையும் பேச்சையும் கேட்டு, அதனைக் கூட பொருட்படுத்தாது தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்தோமே. இத்தனை அங்கங்களை எழுதிவிட்டீர்கள். பலரை நல்ல வகையில் அறிமுகப்படுத்தியும் இருக்கிறீர்கள். ஆனால் எங்களை முழுமையாக மறந்து ஒதுக்கி விட்டீர்கள் போல் தெரிகிறது." என்று ஆக்ரோசமான கடிதமொன்றை அன்றைய மாணவரும் இன்று நல்லதொரு தனியார் நிறுவனத்தை செம்மையாக நடத்தி வருபவருமான ஒருவர் கேட்டிருக்கிறார்.

ஏதோவொரு காரணத்திற்காக 'என்னுடைய பெயரை தயவு செய்து வெளியிட வேண்டாம்' என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இத்தொடரை எழுதும் எனக்கு இப்பொழுது எழுபத்து மூன்று வயதாகிறது. நடை தளர்த்தபோதிலும், பார்வை குறைந்த போதிலும் நடமாடுவதும் ஓரளவு கடினமாக இருக்கின்ற போதிலும் அன்றைய நாள் நினைவுகள் பசுமரத் தாணிபோல் இன்றும் என் நினைவில் வந்தவண்ணம் இருக்கின்றன.

எனவே, என் நினைவில் நிற்பவர்களை வாசகர்களாகிய உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பின்தங்க மாட்டேன்.

தற்செயலாக என் நினைவுக்கு எட்டாமல் தூரத்தே ஒதுங்கி விட்டவர்களையும் வாசகர்களாகிய நீங்கள் எனக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டியது உங்கள் கடமை.

அரசாங்கச் சேவையிலிருந்து கொண்டு தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்த அனைவரையும் நினைவு கூர வேண்டியது நம் அனைவரின் கடமையுமாகும்.

மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியைக் கட்டியெழுப்பும் பொறுப்பினை தந்தை செல்வா அவர்கள் திரு.இராஜதுரை அவர்களிடம் ஒப்படைத்ததைக் கண்டு பலர் குமுறினார்கள். பல மொட்டைக் கடிதங்களை கொழும்பிலுள்ள தந்தை செல்வா அவர்களின் இல்லத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அவை எவற்றையும் தந்தை செல்வா பொருட்படுத்தவில்லை.


"இராஜதுரை வறியவர்தான். படிப்போ பணவசதியோ அற்றவர்தான். ஆனால் அவருடைய வாய்ச் சொல்லில் மந்திரம் போன்ற ஆற்றலிருப்பதை நான் கண்டு கொண்டேன். அவரைவிட தகுதியும் திறமையும் கொண்டவர் எவரேனும் இருப்பாராகில் அவர்களே கட்சிப் பணியை ஏற்று நடத்தட்டும்" என்று சவால் விட்டார் தந்தை செல்வா.

இந்தக் காலகட்டத்தில் பூபாலரெட்னம் பெருக்கிளாசியார் என்றழைக்கப்படும் சட்டவல்லுநரான திரு.பூபாலரெட்னம் அவர்கள் திரு.இராஜதுரை அவர்களுடன் தோளோடு தோள் நின்று கட்சியை வளர்ப்பதற்கு முன் வந்தார். இதனைப் பார்த்த பலர் திகைப்படைந்தனர். எந்தக் காலத்திலும், எந்த அரசியல் கட்சிகளுடனும் வைத்திராமல், 'தானுண்டு தன் தோட்டம் துரவுண்டு' என்ற மனப்பான்மையுடன் அன்றுவரை தனிமரமாக நின்ற திரு.பூபால ரெட்ணம் அவர்கள் மட்டக்களப்பு தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியை தயங்காமல் ஏற்றுக் கொண்டார்.

திரு.பூபாலரெட்ணம் அவர்களை இந்த அளவுக்கு கட்சிப்பணியில் இழுத்து விடுவதற்கு முழுமுதற் காரணமாயிருந்த ஒருவரைப்பற்றி இங்கு நிச்சயம் குறிப்பிடத்தான் வேண்டும்.

'பித்தன்' என்ற புனை பெயரில் புரட்சிகரமான சிந்தனைக் கருவூலங்களை உள்ளடக்கி பல சிறுகதைகளை எழுதி வந்த அவர் திரு.கே.எம்.ஷா அவர்களேயாவார்.

திரு.ஷா அவர்கள் தலைசிறந்த எழுத்தாளரான புதுமைப்பித்தன் அவர்களின் நெருங்கிய நண்பராக இருந்தார்.



பித்தன்

1940ம் ஆண்டுகளில் 'சிந்தாமணி' என்றொரு திரைப்படம் வெளிவந்தது. பலருக்கு நினைவிருக்கலாம். எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களும் கே.அஸ்வத்தாமா என்ற நடிகையும் முதன் முதலில் நெருக்கமாக நடித்த படமது. இந்தப் படம் அப்போதிருந்த பல இளைஞர்களைப் பித்துப் பிடிக்க வைத்துவிட்டது. மட்டக்களப்பில் 'சிந்தாமணி' திரையிடப்பட்ட போது, திரு.ஷா அவர்களும், அவருடைய மைத்துனரும் அடிக்கடி அப்படத்தைப் பார்த்திருக்கின்றனர். வேறு பலருக்குப் பிடித்த 'சிந்தாமணிப் பைத்தியம்' மைத்துனர்கள் இருவரையும் விடாமல் பற்றிக் கொண்டது...

இந்தியாவுக்கான பிரயாணம் இன்று போல் அன்று கடினமானதொன்றாக இருக்கவில்லை. மட்டக்களப்பில் இரயில் ஏறி, தலைமன்னாரிலிருந்து கப்பல் மூலம் தனுஷ்கோடி சென்றடைந்து எப்படியோ இருவரும் சென்னை மாநகர் சென்றடைந்து விட்டனர்.

திக்குத்திசை தெரியாத காட்டில் கண்களைக் கட்டிக் கொண்டு சுற்றிப்பார்க்கப் புறப்பட்டதுபோல் சென்னை நகர் வீதிகளில் இருவரும் அலைந்தனர். இவர்களால் தியாகராஜ பாகவதரையோ, அஸ்வத்தாமாவையோ பார்க்க முடியவில்லை. ஆனால் ஷா அவர்கள் தனது ஆதர்ஷண குருவாகக் கருதிய எழுத்தாளர் பித்தன் அவர்களுடைய இல்லத்தைக் கண்டுபிடித்து விட்டார்.

தனது குருவைக் கண்ட மாத்திரத்திலேயே ஷா அவர்கள் 'சிந்தாமணிப் பித்து' கலைந்தவராகி விட்டார்.

பித்தன் அவர்கள் எழுதிய சிறுகதைகள், நாவல்கள் ஆகிய யாவற்றையும் புதுமைப் பித்தனிடமிருந்து வாங்கிப் படித்தார். இருவருக்குமிடையில் புதுமைப்பித்தனின் கதைகள் பற்றிய காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. இதனால் இருவருக்குமிடையில் நட்பு வளரலாயிற்று. ஷா அவர்களுடைய மைத்துனர் இடையில் ஷாவை விட்டுவிட்டு ஊர் திரும்பி விட்டார்.

ஷா அவர்கள் செய்வதறியாது திகைத்தார். உணவுக்கே சென்னை திண்டாடினார்.

இந்த வேளையில் கிண்டி நகருக்கு அருகே ஒரு பிரமாண்டமான விளம்பரப் பலகையைப் பார்த்தார். 'இந்திய இராணுவம் உன்னை அழைக்கிறது. நாட்டைக் காக்க மெட்ராஸ் ரெஜிமெண்டில் இணைந்து கொள்' என்று அந்த விளம்பரப் பலகையில் எழுதப்பட்டிருந்தது. அந்த விளம்பரப் பலகையில் வரையப்பட்டிருந்த இராணுவ வீரரின் படம் தன்னைப் போன்ற சாயலிலிருப்பதாக உணர்ந்த திரு.ஷா அவர்கள், இராணுவ முகாமை நோக்கி நடந்தார்.

சிரமம் எதுவுமில்லாமல் படையில் சேர்த்து கொண்டார். இரண்டாவது உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலமது. பல வாரங்கள் பயிற்சி பெற்ற பின்னர், எகிப்திலுள்ள அலெக்ஸாண்ரியா போர் முனைக்கு செல்வோர் பட்டியலில் திரு.ஷா அவர்களின் பெயரும் இடம் பிடித்திருந்தது. ஒரு வாரத்துள் அலெக்ஸ்ஸாண்ரியா துறைமுகத்தில் ஒரு சுத்த இராணுவ வீரனாக திரு.ஷா அவர்கள் தரையிறங்கினார். அலெக்ஸாண்ரியாவிலும் சில பாலைவனப் பிரதேசங்களிலும் திரு.ஷா அவர்கள் இணைந்திருந்த அணி பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாகவிருந்த போதிலும், எப்போதும் இந்தி மொழியிலேயே உரையாடுவார்கள். படிப்பதுகூட இந்தி மொழிப் பத்திரிகைகள்தான்.

ஷா அவர்களுக்கருகில் புதுமைப்பித்தன் எழுதிய பல கதைப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த வழியே நடந்து சென்ற மற்றுமொரு சிப்பாய், திரு.ஷா அவர்களிடம் தமிழ்ப் புத்தகங்கள் இருப்பதைக் கண்டு கொண்டார். ஓடோடி வந்து ஷா அவர்களைத் தொட்டு "அடேய் நீ தமிழனாடா!" என்று தழுதழுத்த குரலில் கேட்டுவிட்டு ஷா அவர்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டார். சற்று நேரம் அதிர்ச்சியும் திகைப்புமுற்ற திரு.ஷா அவர்கள் எழுந்து வந்திருந்தவரின் முகத்தைப் பார்த்தார்.

ஷா அவர்கள் வந்தவரை அடையாளம் கண்டு கொண்டார். மட்டக்களப்பில் இருவரும் மாணவப் பருவத்தில் ஒன்றாக ஆடி ஓடி விளையாடித் திரிந்தவர்கள். "ராமு... நீ ராமலிங்கம் தானே?" என்று திரு.ஷா கேட்டார். "ஓம்... ஓம் நான் ராமலிங்கம்தான்... நீ ஷா தானே கே.முகம்மது ஷா அதுதானே உன் பெயர்?" என்று ராமலிங்கம் சொன்னதும் இருவருடைய மகிழ்ச்சிக்கும் எல்லையே இருக்கவில்லை. அவர்கள் இருவரையும் தங்கள் பழைய ஏட்டை புரட்டவிட்டுவிட்டு, ஏனைய சம்பவங்களைத் தொடர்வோம்.

போர் முனையில் எதிரிகளை நோக்கி துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருந்த போது திரு.ஷா அவர்களின் வலது ஆள் காட்டி விரல் துப்பாக்கி விசையில் தவறுதலாக மாட்டிக் கொண்டுவிட்டது.

பல வாரங்கள் அலைந்து திரிந்து எதிரிகளை மடக்க, எடுத்த நடவடிக்கைகள் எதுவும் பலிக்காமல் போய்விட்டன.

ஒருநாள் மாலையில் இவர்களுடைய கூடாரத்தினருகே, கூடார நிழலில் சாய்ந்திருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அங்கிருந்த சிப்பாய்கள் இந்தியாவின்

அதுவே அவருடைய போர் முனை அனுபவத்தின் இறுதி நாளாகும். எவ்வளவோ சிகிச்சை அளிக்கப்பட்டும் விறைத்த இரும்புப் போல சற்றுக்கூட வளையாமல் நின்ற அவருடைய விரல் ஷா அவர்களை போர் முனையிலிருந்து துரத்தியடித்து விட்டது.

சென்னைக்கு அனுப்பப்பட்ட ஷா அவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகை திரட்டிய பணத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மாதாந்த ஓய்வூதியமும் பெற்றவராக நாடு திரும்பினார்.

மட்டக்களப்பை வந்தடைந்த ஷா அவர்கள் படங்களைச் சட்டம் போடும் ஒரு சிறிய கடையை ஆரம்பித்தார்.

பெரும்பாலும் இந்தக் கடையில் வேலை நேரம் மிகவும் குறைவு. ஓய்வு அதிகம் இருந்தது. மாணவப் பருவத்திலிருந்த நாங்கள் அடிக்கடி திரு.ஷா அவர்களுடைய கடைக்குச் சென்று வம்பளந்து கொண்டிருப்போம். பல நூல்களை கற்ற அறிவும், சிறுகதைகளை எழுதும் ஆற்றலும், இளம் பிராயத்திலேயே இராணுவத்தில் பட்ட அனுபவங்களும் சேர்ந்து திரு.ஷா அவர்களை ஒரு மேதையாக மாற்றி விட்டிருந்தது.

திரு.பூபாலரெட்ணம் அவர்களும் தனக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் திரு.ஷா அவர்களுடைய கடைக்கு வந்து உரையாடிக் கொண்டிருப்பார். இந்தக் காலகட்டத்தில்தான் தமிழரசுக் கட்சியின் இலட்சியங்களைப் பற்றி திரு.பூபால ரெட்ணம் அவர்களுக்கு திரு.ஷா அவர்கள் போதிய விளக்கங்களைக் கொடுத்தார்.

தன்னுடைய சொந்த அலுவல்களை தவிர, வேறு எந்த அலுவல்களிலும் அக்கறைக் காட்டாத திரு.பூபாலரெட்ணம் அவர்கள், தமிழரசுக் கட்சியில் இணைந்ததுடன் கட்சியின் மட்டக்களப்புக் கிளையின் தலைவராகவும் பதவியேற்றார்.

இவ்வாறு வெளியுலகத்துக்கு எடுத்துக் காட்டாக குறிப்பிடக் கூடிய பிரமுகர் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்தார்.

கட்சியில் இணைந்து பல தியாகங்களைச் செய்த இளஞ் சமுதாயத்தினரைப் பற்றி குறிப்பிடப் போகிறார் என்று கருதிய வாசகர்கள், "பழைய பல்லவிகளையே மீண்டும் பாட ஆரம்பித்து விட்டார்" என்று குறை கூறுவது என் காதுகளில் கேட்கத்தான் செய்கிறது.

பூபாலரெட்ணம் பெருக்கிலாசியார் அவர்கள் தமிழரசுக் கட்சியில் இணைந்ததையும் அவருடைய 'சிங்கர் ரேசிங் மொடல்' காரில் திரு.இராஜதுரை அவர்களையும் ஏற்றிக் கொண்டு மட்டக்களப்பு வீதிகளில் அவர் பவனி வருவதையும் பார்த்து பலரும் பலவிதமானக் கதைகளைப் பேசுவார்கள்.

அவருடைய வண்டியின் முன்புறத்தில் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டேயிருக்கும்.

(வளரும்)

---

# வாரம் ஒரு வார்த்தை!

**தென்கச்சி - கோ.சுவாமிநாதன்**

**33. கம்ப்யூட்டர் கண்டுபிடிக்கும்!**

எனக்கு வேண்டப்பட்ட ஒரு எழுத்தாளர்!

அவர் ஒருநாள் என்கிட்டே வந்து காதோட காதா... "சார்... இனிமே நான் புஸ்தகம் எழுதறதை விட்டுடலாம்ன்னு நினைக்கிறேன்"-னார்.

அவர் அப்படி முடிவ பண்ணினது ரொம்ப நல்லதுதான்.

இருந்தாலும் அதை அவர்கிட்டே காட்டிக்காமே... "ஏங்க... வீட்டுலே வேணாம்ன்னு சொல்றாங்களா?"-ன்னு யதார்த்தமா கேட்டேன்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே! இப்பல்லாம் எழுத்தாளர்கள் பழைய புஸ்தகங்கள்லேயிருந்து திருடி எழுதினா அதை கம்ப்யூட்டர் கண்டுபிடிச்சுடுதாம்! நமக்கு என்னத்துக்கு சார் வம்பு... அதான் இந்தத் தொழிலையே விட்டுடலாம்ன்னு நினைக்கிறேன்...!"- அப்படின்னார்.

இவர் இப்படி பயப்படுறதுலே அர்த்தம் உண்டு.

ஒருத்தருடைய படைப்பை இன்னொருத்தர் திருடி எழுதி வெளியிட்டுடறார்-ன்னு வச்சிக்குங்க..! அதை கம்ப்யூட்டர் மூலமா கண்டுபிடிச்சுடலாம்.

ஒவ்வொருத்தரும் எழுதற முறை வித்தியாசப்படும். சொற்கள் பயன்படுத்தப் படற விதம், குறிப்பிட்ட சில சொற்களை பலதடவை பயன்படுத்தறது, எழுத்தாளருடைய நடை-இதையெல்லாம் கம்ப்யூட்டர் துல்லியமா ஆராய்ந்து.... எழுதினவர் யார்ங்கறதைக் கண்டுபிடிச்சுடும்.

'சைலன்ட் டான்'- (Silent Dawn) அப்படின்னு ஒரு நாவல். சோவியத் இலக்கியத்துலே தலைசிறந்த நாவல்கள்லே இதுவும் ஒண்ணு!

ஆனா இதை எழுதினவர் யார்ங்கறதைப்பத்தி ஒரு சமயம் பெரிய சர்ச்சை எழுந்தது!



1920-லே 'பாய்தர் குறையுகோ' அப்படிங்கறவரின் படைப்பைத் திருடி 'மிகேயில் ஷைலோ கோப்' எழுதிவிட்டார் அப்படிங்கறது குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச் சாட்டு உண்மையா? பொய்யா? எப்படி கண்டுபிடிக்கிறது?

இதைக் கம்ப்யூட்டர் மூலமாக கண்டுபிடிக்கறதுக்கு முயற்சி பண்ணினார் ஒரு நோர்வே நாட்டுப் பேராசிரியர். (சீர் கெஸம்ஸா) அவர் என்ன பண்ணினார் தெரியுமா?

அந்த ரெண்டு எழுத்தாளர்களுடைய வேறே வேறே படைப்புக்கள்லே இருந்து ஆயிரம், ஆயிரம் வரிகளை எடுத்துக்கிட்டார். சர்ச்சைக்கு உள்ளான இந்த நாவல்லேயிருந்து ஆயிரம் வரிகளை எடுத்துக்கிட்டார். இது மூணையும் கம்ப்யூட்டர்கிட்டே கொடுத்தார்.

நடை, சொற்களை கையாண்டிருக்கிற பாங்கு, சொற்களின் பொருள்-இதுமாதிரி எட்டு அளவுகோல்களை அடிப்படையா வச்சிக்கிட்டு-பகுத்து ஆராய்ந்து பார்த்தார். அதுக்கப்புறம் 'ஷைலா கோப்' தான் இதை எழுதினார். அதை அவர் திருடி எழுதலே!-அப்படிங்கறதை நிரூபிச்சிக்காட்டினார்.

இதே மாதிரி இன்னொரு சம்பவம். 1985-லே ஒரு பழைய பாடல் கிடைச்சுது. அதை எழுதினது யார்ன்னு தெரியலே! பலபேர் பாடல்களோட ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தாங்க. அறிமுகப்படுத்தற வார்த்தைகள்-கையாளப்படற முறை-இதுமாதிரியான புள்ளி விவரங்களின் அடிப்படையிலே ஆராய்ச்சிப் பண்ணி பார்த்துட்டு, இந்த பாடலை எழுதினவர் ஷேக்ஸ்பியரா இருக்கலாம்-என்கிறதைக் கண்டுபிடிச்சாங்க!

எர்னஸ்ட் ஹைமிங்வேயின் 'கடலும் கிழவனும்' ஒரு புகழ் பெற்ற நாவல். இது 1952-லே வெளிவந்தது. ஆனா 1940க்குப் பிறகு அவரு குறிப்பிடத்தக்க அளவுக்கு எதையும் எழுதலே!

1952-லே வெளிவந்த இந்த நாவலுக்கு 'புலிட்சர் பரிசு' கிடைச்சுது. 1954-லே ஹெமிங்வே நோபல் பரிசு பெற்றார்.

ஆனால்... ஓர் இலக்கிய அறிஞர் (டாரேல் மான்ஷெல்) ஹெமிங்வே இதை 1936-ல்தான் எழுதியிருக்கணும்ன்னு யூகிச்சார்.

உடனே அவரும் அவருடைய மாணவர் ஒருவரும் சேர்ந்துகிட்டு இதை கண்டுபிடிக்கறதுக்கு முயற்சி பண்ணினாங்க.

'கடலும் கிழவனும்' -ங்கற நூல்லே இருந்து 4500 வார்த்தைகள்- 1933 முதல் 1951 வரைக்கும் ஹெமிங்வே எழுதின வேற வேற 4 நாவல்கள்லேயிருந்து 4000 வார்த்தைகள் எடுத்துக்கிட்டாங்க. கம்ப்யூட்டர் மூலம் ஆராய்ச்சி பண்ணி பார்த்தப்போ-இந்த 'கடலும்-கிழவனும்' நாவல், பின்னாடி எழுதப்பட்ட நாவல்களை விட 1936-லே எழுதப்பட்ட 'உலகின் தலை நகர்'- ங்கற நாவலை ஒத்திருக்கிறது தெரியவந்தது.

அதனாலே இது 1936-லே எழுதினதுங்கறது உறுதியாச்சு!

கம்பராமாயணத்துலே கூட சில பாடல்கள் கம்பரால் எழுதப்பட்டது இல்லேன்னு ரசிகமணி டி.கே.சி. சொல்லுவார் இல்லையா?

அதையெல்லாம் கூட துல்லியமா கண்டுபிடிக்கறதுக்கு வருங்காலத்துலே கம்ப்யூட்டர் உதவும் போல இருக்கு!

இப்படியெல்லாம் இருக்கறப்போ ஆரம்பத்துலே என்கிட்டே வந்த அந்த நண்பர் அப்படி பயந்தது நியாயம்தானே!

ஒருத்தரு ஒரு சிறுகதையை எழுதி எடுத்துக்கிட்டு ஒரு பத்திரிகை ஆபீசுக்குப் போனார். ஆசிரியரைப் பார்த்தார். "சார்... ஒரு அற்புதமான சிறுகதை எழுதி கொண்டாந்திருக்கேன். பார்க்கறீங்களா?" -ன்னார்.

"என்ன தலைப்பு?"-ன்னார் அவர்.

"வாழ்வு மலர்ந்தது!"-ன்னு தலைப்பு குடுத்திருக்கேன்னார் இவர். அவர் இதை வாங்கி படிச்சுட்டு... 'வாழ்வு மலர்ந்தது- என்கிறதுக்குப் பதிலா 'மலர்ந்த வாழ்வ'-ன்னு இருக்கலாமே!-" என்றார். "ரெண்டும் ஒண்ணுதானே சார்!"-ன்னார் இவர்.

"அதுக்கில்லே... கதைதான் வரிக்கு வரி மாறாமே அப்படியே இருக்கு. தலைப்பையாவது கொஞ்சம் மாத்தலாமே!"-ன்னு பார்த்தேன்னார் ஆசிரியர்.

"என்ன சொல்றீங்க?"-ன்னார் இவர் ஒண்ணும் புரியாமே!

"பதினைஞ்சு வருஷத்துக்கு முன்னாடி இதுநான் எழுதின கதை சார் இது!" அப்படின்னார் அந்த ஆசிரியர்.

(வார்த்தைகள் தொடரும்)

# ஸ்போர்ட்ஸ்

## பங்களாதேஷின் கௌரவமான தோல்வி



ஆசிய டெஸ்ட் சாம்பியன் தொடரில் எதிர்பார்த்தது போலவே பங்களாதேஷ் அணி இலங்கையிடம் தோற்றது. இருப்பினும் அது இலங்கையிடம் கௌரவமான தோல்வியை சந்தித்துள்ளது.

பலம் மிக்க அணிகளில் ஒன்றான பாகிஸ்தான் அல்லது இலங்கை தான் டெஸ்ட் சாம்பியனாகும் என்பது பலரும் அறிந்த ஒன்று. பாகிஸ்தானிடம் தோல்வியடைந்த பங்களாதேஷ் அடுத்த போட்டியை இலங்கையுடன் விளையாடியது.

முதல் இன்னிங்ஸில் 90 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் சுருள, இலங்கை 555 ஓட்டங்களை 5 விக்கெட்டுக்களை இழந்து இலகுவாக எடுத்தது. (அத்தபத்து-201, ஜயவர்த்தன-150)

இரண்டாவது இன்னிங்ஸிலும் சொற்ப ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் ஆட்டமிழந்து விடும் என்ற எதிர்பார்ப்பைப் பொய்யாக்கி 328 ஓட்டங்களை எடுத்தது அது.

பங்களாதேஷ் சார்பாக 17 வயதான மொஹமட் அஷ்ரஃபுல் 114 ஓட்டங்களை விளாசினார். இது இவரது முதலாவது டெஸ்ட் போட்டியாகும். இதுவரை காலமும் எந்தவொரு வீரரும் இவ்வளவு குறைந்த வயதில் தனது முதல் போட்டியில் சதமடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவில் இலங்கை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 137 ஓட்டங்களால் வென்றது. இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து 10 விக்கெட்டுக்களை வீழ்த்திய முரளீதரனும் அஷ்ரஃபுல்லும் ஆட்டநாயகர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## மறுபடி சச்சின், கும்ப்ளே

காயம் காரணமாக, அணியில் இருந்து விலகியிருந்து சிகிச்சை பெற்று வந்த இந்தியக் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர், மற்றும் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே ஆகியோர் மறுபடி அணியில் இணைந்துள்ளனர்.

இதேவேளை காயம் காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்று சிகிச்சை பெற்ற வி.வி.எஸ். லக்ஷ்மன் மற்றும் ஆஷிஷ் நெஹ்ரா ஆகியோரும் மறுபடி அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் முத்தரப்புப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக 15 பேர் கொண்ட இந்திய அணி அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

இலங்கையில் இந்திய அணிக்கு ஏற்பட்ட தோல்விகளுக்குப்பின் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலியின் தலைமைப் பதவி பறிபோகும் எனப் பரவலாகப் பேச்சு அடிபட்டது.

இருப்பினும் அவரையே மறுபடியும் இந்திய அணிக்குக் கப்டனாக்கியுள்ளனர். தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் முத்தரப்புப் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும் இந்திய அணியின் விவரம் வருமாறு:

சௌரவ் கங்குலி (கப்டன்), ராகுல் ட்ராவிட், சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ். லக்ஷ்மன், விரேந்தர் செஹ்வாக், சிவ் சுந்தர் தாஸ், யுவ்ராஜ் சிங், ரீதீந்தர் சிங் சோதி, தீப் தாஸ் குப்தா (விக்கெட் கீப்பர்) அனில் கும்ப்ளே, ஜவகல் ஸ்ரீநாத், வெங்கடேஷ் பிரசாத், ஹர்பஜன் சிங், ஸஹீர் கான், ஆஷிஷ் நெஹ்ரா.

## சமன் செய்யப்பட்ட பிரட்மன் சாதனை

இங்கிலாந்தின் முன்னாள் கிரிக்கெட் வீரர் கிரஹாம் ஹிக், கிரிக்கெட்டின் பிதாமகரான அவுஸ்திரேலியாவின் டொனால்ட் பிரட்மனின் சாதனைகளில் ஒன்றைச் சமன் செய்துள்ளார்.

முதல் தர (டெஸ்ட் மற்றும் உள்ளூர்) போட்டிகளில் அமரர் பிரட்மன் 117 சதங்களைக் குவித்திருந்தார். இதை ஹிக் அண்மைய உள்ளூர் போட்டி ஒன்றில் சதமடித்ததன் மூலம் சமன் செய்துள்ளார்.

ஹிக் தனது 117வது சதத்தைத் தனது 678வது இன்னிங்ஸில் அடித்தார். ஆனால் பிரட்மனோ தனது 338 வது இன்னிங்ஸில் அடித்தார்.

இதன்மூலம் முதல் தரப் போட்டிகளில் அதிக சதங்களை அடித்தவர்கள் வரிசையில் 13வது இடத்தில் இருக்கிறார் ஹிக்.

இங்கிலாந்து வீரர்களான ஜக் ஹொப்ஸ், பட்ஸி ஹென்ட்ரன், வொலி ஹமண்ட் ஆகியோர் முறையே 197, 170, 167 முதல்தர சதங்களை அடித்து முதல் மூன்று இடங்களில் இருக்கின்றனர்.

ஸிம்பாப்வேயில் பிறந்த கிரஹாம் ஹிக் இங்கிலாந்து அணியில் இடம் பிடித்து விளையாடினார். சில காலத்திற்கு முன் அணியில் இருந்து ஓய்வுபெற்ற இவர் இங்கிலாந்தின் கவுண்டி அணிகளில் ஒன்றான வோர்செஸ்டர்ஷையர் அணிக்காக விளையாடி வருகிறார்.

---

"இந்த ஆடைகளே இப்படித்தான்.." என்றான் வசந்தன் பூவழகியை நேருக்கு நேர் பார்த்தவாறே.

"ஏய், என் ஆடைக்கு என்ன குறையாம்?" என்றாள். அப்படியும் இப்படியும் திரும்பிக் காட்டியபடி.

"ஆடைக்கு ஒரு குறையுமில்லை... அது அழகாய்த்தானிருக்கிறது..." என்று இழுத்தவனை வெட்டினாள் பூவழகி. "அப்போ, இந்த ஆடைக்கு நான்தான் பொருத்தமில்லையாக்கும்..." அழுதுவிடுபவள் போல, குரலில் தழதழப்பு ஏறிக்கொண்டது. "போய் வேறு அழகுள்ளவள் யாரையும் பார்க்க வேண்டியதுதானே...?" என்று சொல்லவும் செய்தாள்.

சிரித்தான் வசந்தன். இன்னும் கொஞ்சம் சீண்டிப் பார்க்க நினைத்தான். "அழகானவர்கள் மாட்டியிருந்தால், உன்னிடம் நின்று ஏன் நேரத்தை வீணடிக்கப் போகிறேன்...?"



# இலக்கிய நயம்

அவன் அவள் உடலைத் திறந்தான். அவள் வெற்றுடலில் தான் தயாரித்த தழையாடையை அணிவித்தான்.

"இப்போது கண்ணைத் திற" என்றான்.

கண்ணைத் திறக்காமல் அவனைக் கட்டிக்கொண்டாள்.

"உன் கொம்புகளைத் தடுக்கும் ஆற்றல் இந்தத் தழைகளுக்கும் இல்லை" என்றான்.

அவள் மேலும் அவன் நெஞ்சில் அழுந்தினாள்.

மரம் உராய்ந்ததில் பூவழகி திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். வெட்கத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள். அவன் நினைப்பில் அந்தத் தழையொடிந்த அசோகமரம் அருகில் அன்றைய பொழுதுக்குப் போய் மீண்டிருப்பதை உணர்ந்தாள்.

இதோ இந்த அசோக மரத்தின் தழைகளை ஒடித்துத் தானே என் இடைக்கு ஆடை செய்து தந்தான்.

## நெஞ்சில் முட்டிய கொம்புகள்!

அவ்வளவுதான், விருட்டென்று திரும்பி ஓட ஆரம்பித்தாள். பூவழகி.

"ஏய்... நில்லு.." என்று பின்னால் துரத்தியபடி ஓடினான் வசந்தன். நாலே எட்டில் அவளை மடக்கிப் பிடித்தான்.

கைப்பிடியை விடாமலே, மறுகையால் அவள் முகத்தை நிமிர்த்தி, "இந்த முகத்தை அழகில்லை என்று சொன்னால்... உலகில் பூக்கள், நிலா, வானவில் எதுவுமே அழகில்லை என்றல்லவா ஆகிவிடும்..."

"அப்போ என் உடம்புதான் அழகில்லையாக்கும்" திமிறினாள். அவன் பிடி இறுகியது. அவள் கையை உதறிவிட எத்தனித்தாள், அவனோ பிடியை இறுக்கி அவளைத் தன்னை நோக்கி இழுத்தான்.

இருவர் நெஞ்சும் மோதி விலகியது.

அவன் தனது ஒரு கைப்பிடியை விடாமலே மறுகையால் தன் நெஞ்சைத் தடவிக் கொண்டான்.

"அப்ப்பா, தலையில்தான் கொம்பு இல்லை" என்று சொல்லவும் செய்தான்.

"நான் மிருகம்தான். அழகில்லாதவள்தான். என்னை விடுங்கள்... இல்லாவிட்டால் சத்தம் போடப் போகிறேன்..." என்றாள். சிணுங்கியபடி. "மருந்தைப் போட்டுவிட்டுப் போ" என்றான் பிடியை விடாமல்.

"என்ன மருந்து?" திமிறுவதை நிறுத்தி ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"என்னமோ உன்னிடம் ஒளித்து வைத்திருக்கும் கொம்புகளால் குத்தி இதோ என் நெஞ்சில், இங்கே காயம் உண்டாக்கிவிட்டாய்... மருந்து போட்டுவிட்டுப் போ..."

புரிந்து கொண்டதும் மீண்டும் கோபமானாள்.

"ஆடைக்கேற்ற அழகுள்ளவள் யாரிடமாவது போய்க் கேளுங்கள். என்னை விடுங்கள்" என்று மீண்டும் திமிற ஆரம்பித்தாள்.

"அசட்டுப் பெண்ணே, ஏன் புரியாமல் படபடப் படுகிறாய்? உன் அழகுகளை ஆதிக்கம் செய்யும் இந்த ஆடையை அல்லவா வேண்டாம் என்று சொன்னேன்..."

"ச்சீ..." என்றாள் முகமெல்லாம் சிவந்தவளாக.

"நான் ஓர் ஆடைசெய்து தருகிறேன். அதை அணிந்து கொள்."

"என்ன ஆடை?"

அவன் பதில் பேசாமல் அவளை மரத்தின் மறைவிலே இருத்தினான். பின்னர் அருகிலிருந்த அசோக மரத்தின் தழைகளை ஒடித்து ஈர்க்குகளால் அவற்றை இணைத்துப் பின்னலானான்.

பூவழகி வியப்போடு அவனையே பார்த்தவாறிருந்தாள்.

"ம்... ஆடை தயார்" என்றான்.

"எப்படி போட்டுக் கொள்வது?"

"அதெல்லாம் நான் போட்டு விடுவேன். நீ கவலைப்பட வேண்டாம்" என்றான். சொல்லியதோடு நிற்காமல் அவளை நெருங்கினான்.

"ஐயோ, எனக்கு வெட்கமாயிருக்கு..." உடல் சுருங்கினாள் அவள்.

"கண்களை மூடிக்கொள் கண்ணே!" என்றவாறு அவள் இமைகளில் மெல்ல முத்தமிட்டான். அவள் இமையை மூடினாள்.

தழையொடிந்து நிற்கும் இந்த மரத்தைக் கவனிக்காமல், பக்கத்திலிருக்கும் இந்த அரளிச் செடியில் உள்ள மலர்களைப் பறித்து மாலையாக்கி முருகனுக்குச் சூட்டி விழாவெடுத்து என்னுடைய நோய் நீங்க வேண்டுமென்று வேண்டுதல் செய்கிறார்களே என் பெற்றோர்...! என் நோயினுடைய உண்மைக் காரணம் தெரியாமல் ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே! இவர்களுடைய அறியாமைக்கு என்ன செய்வது?" என்று யோசித்த பூவழகி, சலிப்புடன் மீண்டும் அந்த அசோக மரத்தில் தன் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

'என் நிலைமையை தோழி மலர்விழி அறிவாள். அவள் எப்படியும் என் பெற்றோருக்கு உண்மையை எடுத்துரைத்து, அவர்களைத் தெளிவிப்பாள்' என்று நினைத்துக் கொண்டவளாக பூவழகி மெல்லக் கண்களை மூடினாள். வசந்தன் சிரித்தபடி வந்து அவள் கொம்புகளை மோதினான். மூடியிருந்த பூவழகியின் உதடுகளில் இன்பச் சுழிப்பு நெளிந்தது.

மரம் கொல் கானவன் புனம்
துளர்ந்து வித்திய
பிறங்கு குரல் இறடி காக்கும்,
புறம் தாழ் அம்சில் ஓதி
அசை இயல் கொடிச்சி,
திருந்து இழை அல்குற்குப்
பெருந்தழை உதவிச்
செயலை முழுமுதல் ஒழிய,
அயலது அரலை மாலை சூட்டி
ஏமுற்று அன்று இவ் அழுங்கல் ஊரே.

(குறுந்தொகை: 214)

தருவது
முழடியன்

---

## சிந்தியா பதில்கள்

★ இலங்கை- இந்திய கூட்டுத் தயாரிப்பாக நாங்கள் எடுக்கப்போகும் வித்தியாசமான படத்தில் உங்களை ஹீரோவாக நடிக்க வைக்கலாம் என்றிருக்கிறோம். மூன்று பேர் ஒரு ஹீரோவைக் காதலிக்கும் நாற்கோணக் கதை. கதைப்படி ஐஸ்வர்யா ராய், லாரா தத்தா, பிரியங்கா சோப்ரா- மூன்று உலக அழகிகளாலும் காதலிக்கப்படும் ஹீரோவாக நீங்கள் வருகிறீர்கள், சரியா?

என்.விஜயரூபன், கொழும்பு-05

நான் வருகிறேன் சரி. அவர்கள் வருகிறார்களா?

★ சிந்தியா, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் போக்கைப் பார்த்தால் இனிவரும் காலங்களில் நடிக்காமல் விட்டுவிடுவார் என்று தோன்றுகிறதே..?

என்.எம். நிஸாம், காத்தான்குடி-02.

ஒவ்வொரு பட முடிவிலும் அப்படித்தான் நடந்துகொள்கிறார். ஆனால் ஒவ்வொரு சமயமும் ஏதோ ஒரு நிகழ்வு அவரை ஓய்வெடுக்க விடாமல் உசுப்பிவிடுகிறது. இப்போது 'நரசிம்மா'வில் சிங்க நடிகரின் சவால் அவரை உசுப்பிவிட்டிருப்பதாகக் கேள்வி.

★ தமிழ்க்கட்சிகள் பலவும் ரெண்டெழுத்து தாருக்காகத் தானே தாங்கள் பேசுவதாகக் காட்டிக் கொள்கிறார்கள். இவர்கள் சொல் வதையெல்லாம் அவர்கள் அங்கீகரிப்பார்களா?

ஏ.சிவச்செல்வன், வவுனியா.

என்ன செல்வன், இவ்வளவு ஏமாளியாக இருக்கிறீர்கள்? 'கொல்லப்பட வேண்டிய துரோகிகள்' என்று அறிவிக்கப்பட்டவர்களை எப்படி அவர்களால் அங்கீகரிக்க முடியும். தலைவர்களுக்கு கொன்றவர்களை பழிவாங்கியே தீருவது என்று வீரசபதமிட்டவர்களும், 'பொடிப் பிள்ளையார் எங்கேயாவது போய் இருகட்டும்' என்று உள்ளுக்குள் வீணரோடு காத்திருப்பவர்களும், குண்டு வைக்க வந்தவர்களைப் படையினரிடம் காட்டிக் கொடுத்தவர்களும் தான் இப்போது தங்களுக்காகக் கொட்டி முழக்குகிறார்கள் என்று அவர்களுக்கும் தெரியும். உயிரையும், கதிரையையும் பாதுகாத்துக் கொள்ள இந்தக் கோமாளிகள் எவ்வளவு உயரத்திற்கு எழும்பி பல்டியடிப்பார்கள் என்பதை எல்லோரும் வேடிக்கைப் பார்ப்பதற்காக விட்டிருக்கிறார்கள். பேசாமல் பார்த்துக் கொண்டிருங்கள். அடிடா... ராமா.... அடிடா!

★ சிந்தியா! நீங்கள் வாசித்ததும், யோசித்ததும், யாசித்ததும், சாதித்ததும் பற்றி...?

எஸ்.கீத்தா, ஹட்டன்.

வாசிப்பது வாரம்தோறும் சில நூறு கேள்விகள். யோசிப்பது பல நூறு நிமிடங்கள். யாசிப்பது அறிஞர் பலர் முன்பே சொல்லி வைத்த கருத்துக்கள். சாதிப்பது.. ஹி..ஹி.. பத்துப்பன்னிரண்டு பதில்கள்.

★ புத்தி சொல்லியும் திருந்தாதவர்களை எப்படித் திருத்தலாம்?

ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

பட்டுத்தான் திருந்த வேண்டும். நாமோ இவ்வளவு பட்டும் இன்னும் திருந்துவதாக இல்லையே!

★ இறுதிப் போட்டியில் அக்காவும் தங்கையும் மோதிய 'டெனிஸ்' எப்படி?

த.கருணாகரன், கண்டி.

அந்த மென்பந்து விளையாட்டிலும் கறுப்புக்குத்தான் எதிர்காலம். கறுப்புத்தான் உலகைக் கலக்கும் கலரு.

★ 'பூவெல்லாம் உன் வாசம்' எப்படி?

நவூன், கலகெதர.

பெண்ணின் மனதைத் தொட்டுத் துள்ளாத மனமும் துள்ளும்படி செய்தவரின் படம் என்று ஆவலோடு போய் இருந்தால்... ஏமாற்றம்! எழிலைக் காணோம்!



★ பலமுறை இலங்கைக்கு வந்து சென்றிருக்கும் பாடகி அனுராதா ஸ்ரீராமின் முகவரி தருவீர்களா?

ஜீவராணி, டயநில்ல.

எம்-4, அடையாறு அபார்ட்மெண்ட்ஸ், கோட்டூர் புரம், சென்னை 600 085.

★ சிந்தியாவுக்குப் பிடித்த பூ எது?

எம்.வஸீம், கண்டி.

வாய் திறந்தால் உதிரும் பூ.

★ நம்ப முடியாதவர்களோடு கூட்டுச் சேர்ந்திருக்கும் அரசு நான்கு மாதங்களுக்கு மேல் தாக்குப்பிடிக்காது என்கிறார்களே?

கே.திவ்யராணி, கொழும்பு-15.

'அவரது முழி சரியில்லை, அதனால் திருடனாக இருக்கலாம்' என்பது போலத் தான் இது. எனக்கென்னவோ, வரும் ஒரு வருசத்துக்கு ஜே.வி.பியால் அரசுக்கு ஆபத்தில்லை என்றே படுகிறது.

★ அனைத்தும் கண்டுபிடித்த மனிதன், ஆடை மட்டும் கண்டுபிடித்திருக்க விட்டால்...?

எஸ்.பி.வதனி, பண்டாரவெளி.

'செக் பொயின்ற்'களில் தடவிப் பார்க்கும் வேலை இருந்திருக்காது.

★ சிந்தியா, உங்கள் பார்வையில் நாட்டு நடப்பைக் கொஞ்சம் விவரியுங்களேன்?

வி.தையல்நாயகி, யாழ்ப்பாணம்.

காட்டாறு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அதில் இரண்டு சிறு மரக் கட்டைகள் அடித்துச் செல்லப்பட்டு மிதந்தன.

ஒரு கட்டை ஆற்றின் குறுக்காக நின்று பிரவாகத்தைத் தடுக்கப் பெருமுயற்சி செய்தது. "இந்த ஆறு, ஊர் கிராமங்களை யெல்லாம் அடித்துக் கொண்டு போய் கடலில் தள்ளிவிடப் போகிறது. இதை மேலே போக விடமாட்டேன்" என்று குறுக்கே படுத்துக் கொண்டு போராடியது. ஆற்றின் பாய்ச்சலினால் தாறுமாறாக அலைக்கழிக்கப்பட்டது. அந்தக் கட்டையால் ஆற்றின் போக்கில் மாறுதல் எதுவும் செய்ய முடியாவிட்டாலும், "உயிரே போனாலும் ஊருக்கு ஆபத்து விளைவிக்கும் இந்த ஆற்றை அடக்கியே தீருவேன்" என்று அலறிக் கொண்டே திணறியது. ஆனால், பாவம் அது ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தது.

மற்றொரு கட்டையோ, ஆற்றின் பாய்ச்சலுக்கு அனுசரணையாகப் படுத்துக் கொண்டது. ஆறு போகும் திசையில் மிதந்தது. அதன்மனதில் ஆற்றுக்கு ஒரு கெடுதலும் செய்யாமல் உதவி செய்வதாக நினைத்துக் கொண்டது.

"இந்த ஆற்றை இப்படியே பெரிய குளம் ஒன்றுக்கு அழைத்துச் செல்வேன். என் உதவி இருந்தால் இது சந்தோஷமாகக் குளம் போய்ச் சேரும்" என்று கூறிக் கொண்டு, உல்லாசமாய் ஆற்றின் ஓட்டத்தில் கிடைக்கும் சுகத்தை அனுபவித்துக் கொண்டு மிதந்தது.

ஆறு கிராமங்களை, சொத்துக்களைச் சூறையாடிய வண்ணம் பேரிரைச்சலுடன் சென்று கொண்டிருந்தது.

ஓர் எல்லைக்கு மேல் தாங்க முடியாமற் போன அந்த மக்கள், அயலூரவரையும், தூர இடங்களில் உள்ளவர்களையும் சேர்த்துக்கொண்டு ஆற்றுக்குக் குறுக்கே பெரிய அணையைக் கட்டினர். காட்டுப் பாய்ச்சலை அடக்கிப் பெரிய குளம் ஒன்றில் சேர்த்து விட்டனர்.

ஆற்றின் பாய்ச்சலிலேயே உல்லாசத்தை அனுபவித்து வந்த கட்டை, இப்போது குளத்தில் மிதந்தபடி கூறிக் கொண்டது. "அப்பாடா! எல்லோரையும் இந்த இடத்திற்கு அழைத்துவர, அந்தக் கெடுகெட்ட ஆற்றின் காட்டுப் பாய்ச்சலில் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்து விட்டேன். எல்லோரும் எனக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்."

# மன்னாதி மன்னன் 75

## மன்னரும் மந்திரியும் புறப்பட்டனர்!

இராஜகுமாரன்

இந்திரலோகத்துக்கு இரத்தினமாலையைத் தேடிச் சென்ற மன்னன் விக்கிரமாதித்தன் நிலவறையின் இருளில் மறைந்திருந்த அவளைக் கண்டுபிடித்துவிட்டமையினால், அவருடைய தீரத்தை மெச்சிய இந்திரன் தேவசபையில் நடனமாதர்களாக உள்ள மற்றும் ஏழு கன்னியர்களையும் விக்கிரமாதித்தனுடன் அனுப்பி வைக்கிறார்.

இரத்தினமாலையுடன் மற்றும் ஏழு கன்னியர்களும் பூலோகம் சென்றுவிட்டமையினால், இந்திரலோகம் இருளடைந்து போனது போல் ஆகிவிட்டது. இந்திரன் சபையில் தேவ கன்னியர்களின் நடனங்களை ஒழுங்கு செய்யும் ஏழு முனிவர்கள் இந்திரனைக் கண்டு இந்திர சபையில் நடனமாடி சபையோரை மகிழ்விக்கும் எவரும் இல்லாமையால் சபை களையிழந்து போய்விட்டது. எனவே அக்கன்னியர்களை மீண்டும் இந்திரலோகத்துக்கு கொண்டு வந்து சேர்க்கும்படி முனிவர்கள் இந்திரனைக் கேட்டுக் கொண்டனர்.

இந்திரனும் அப்போதுதான் தான் செய்த பிழையை உணர்ந்து கொண்டார்.

முனிவர்களைப் பார்த்து இந்திரன், "நடனக்கலையில் தலைசிறந்து விளங்கும் மாமுனிவர்களே! இரத்தினமாலை மட்டும் தான் விக்கிரமாதித்தன் மீது மையல் கொண்டிருந்தாள் என்பதையறிந்தே; அவளை முதலில் விக்கிரமாதித்தனுடன் அனுப்பி வைத்தேன். அதன் பின்னர்தான் இரத்தினமாலையைப் போன்று மற்றுமுள்ள ஏழு கன்னியர்களும் கூட இது காலவரை விக்கிரமாதித்தனையே நினைந்து உருகினார்கள் என்பதையறிந்து கொண்டேன். எனவே தான் அந்த ஏழு கன்னியர்களும் விக்கிரமாதித்தனுடன் சிலகாலம் தங்கியிருந்துவிட்டு, பின்னர் இந்திரலோகம் வந்து சேரட்டுமே என்று அனுப்பினேன்"

நான் ஏற்கனவே அந்த ஏழு கன்னியர்களையும் விக்கிரமாதித்தனிடம் ஒப்படைத்துவிட்டமையினால், நானாகவே அந்த ஏழு கன்னியர்களையும் திருப்பித் தருமாறு கேட்கக்கூடாது. ஆகவே நீங்கள் ஏழு பேரும் விக்கிரமாதித்த மன்னனிடம் சென்று எப்படியாவது அக்கன்னியர்களை அழைத்துக் கொண்டு இங்கு வந்து சேருங்கள்" என்று கூறினார்.

விக்கிரமாதித்த மாமன்னன் அடுத்த நாட்காலையில் சபையிலிருக்கும்போது, வாயிற்காவலன் மன்னனிடம் வந்து, வணங்கி நின்றான். ஏழு பேர் மன்னரைக் காண்பதற்காக வாயிலில் வந்து நிற்பதாகக்கூறினான்.

விக்கிரமாதித்தன், அவர்களை உள்ளே அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார். அவர்களை அவையில் அமரவைத்து, அவர்கள் அங்கு வந்ததற்கான காரணம் என்னவென்று வினவினார்.

அந்தணர்களைப் போல உருமாறி வந்த இந்திரலோகத்து முனிவர்கள், "மாமன்னரே இந்திரசபையில் நடனமாடும் தேவகன்னியர்களுடன் சேர்த்து அக்கலையில் ஈடுபடுபவர்கள் நாங்கள். இரத்தினமாலை பலவருடங்களுக்கு முன்னர் அங்கிருந்து தங்களுடன் வந்துவிட்ட போதும், எஞ்சியிருந்த ஏழு கன்னியர்களும் இந்திர சபையில் தினமும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி அவையில் உளளவர்களை மகிழ்வித்து வந்தனர். ஆனால் அவர்கள் அனைவரையும் தங்கள் அழைத்து வந்து விட்டீர்கள். இந்திரசபை எப்போதுமே கலை நிகழ்ச்சிகளால் ஜொலித்துக் கொண்டிருக்கும். ஆனால் இப்போது இருளடைந்து கிடக்கிறது. ஆகவே இரத்தினமாலையைத் தவிர, மற்ற ஏழு கன்னியர்களையும் எங்களுடன் தேவலோகத்துக்கு அனுப்பி வையுங்கள் என்று மிக தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்" என்றனர்.

அந்தணர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்ட விக்கிரமாதித்த மாமன்னன் துணுக்குற்றார். "இத்தகைய துன்பமயமான சூழ்நிலை அங்கு ஏற்படும் என்று எனக்குத் தெரியாது. நற்கலைகள் என்றாலே எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. இந்திரன் சபையில் கலை நிகழ்ச்சிகள் இல்லாமல் போனமைக்கு ஒரு போதும் நான் காரணமாக இருக்க மாட்டேன்." என்று கூறியதுடன் இரத்தினமாலையையும் ஏழு கன்னியர்களையும் சபைக்கு அழைத்து வருமாறு காலனை ஏவினார். அவர்கள் வந்து சேர்ந்ததும் இரத்தினமாலையிடம் இந்திரன் சபையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை எடுத்துக் கூறி, அந்த ஏழு கன்னியர்களையும் அந்தணர்களுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதனைக் கேட்ட ஏழு கன்னியர்களும் மருண்டனர். இரத்தினமாலையை அணுகி, அவளிடம் ஏதோ கூறினர்.

இரத்தினமாலை புன்முறுவல் பூத்தவளாக விக்கிரமாதித்தனை அணுகி, ஏதோ இரகசியமாகச் சொன்னாள். இதனைத் தொடர்ந்து விக்கிரமாதித்தன் தேவலோகத்து அந்தணர்களிடம் "தேவலோக கலைஞர்களே! அந்த ஏழு கன்னியர்களும் ஏழு நாட்கள் இங்கேயே தங்கியிருந்துவிட்டு எட்டாவது நாள் இந்திர சபைக்கு வந்து விடுவதாகக் கூறுகிறார்கள். ஆகவே நீங்கள் ஏழு பேரும் கூட என்னுடைய விருந்தினர்களாக இங்கேயே தங்கியிருந்து விட்டு, எட்டாவது நாளன்று அக்கன்னியர்களையும் அழைத்துக் கொண்டு இந்திரலோகம் செல்லலாம்" என்றார்.

ஏழு நாட்கள் முடிந்ததும் அந்தணர்களும் ஏழு கன்னியர்களும் இந்திரலோகம் சென்றடைந்தனர். பூவலகில் நடந்த சம்பவங்களை இந்திர பூபதியிடம் கூறினார்கள். இந்திரனும் விக்கிரமாதித்தனுடைய பெருந்தன்மையை மெச்சினார்.

விக்கிரமாதித்த மாமன்னனுடைய சிம்மாசனத்தில் ஏழாவது படியில் நின்ற ஏக போகவல்லிப்பதுமை போஜ மாமன்னனிடம், பல உப கதைகள் நிரம்பிய அந்த நெடுங் கதையைக் கூறி முடிக்கும்போது, நள்ளிரவாகி விட்டது. போஜ மன்னனின் கண்கள் தூக்கவெறியினால் கனத்தது. "போஜ மாமன்னரே இத்தகைய வீரதீர பராக்கிரம செயல்களில் சிறந்து விளங்கிய மன்னாதி மன்னன் விக்கிரமாதித்தனுடைய ஆற்றல்களில் சிறிதள வேணும் தங்களிடம் இருக்குமாயின், தாங்கள் தாராளமாக அடுத்தபடிக்குச் செல்லலாம்". என்று கூறியதும், பதுமையிடம் விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து தன் அரண்மனைக்குச் சென்றார் போஜராஜ மன்னன்.

### சௌந்தரவல்லிப் பதுமை சொன்ன கதை

விக்கிரமாதித்தனுடைய நாடாறு மாதம் ஆட்சி முடியும் காலம் முடிவடைந்த பின்னர், காடாறு மாதங்கள் செல்வதற்கு ஆயத்தமானார். அப்போது பட்டி தானும் விக்கிரமாதித்தனுடன் வரவிரும்புவதாகவும்! தன்னையும் அழைத்துக் கொண்டு செல்லுமாறும் விநயமாகக் கேட்டுக் கொண்டார்.

இதற்கு விக்கிரமாதித்தன் சம்மதமளித்தார். விக்கிரமாதித்தன் வேதாளத்தின் துணையுடன் மந்திரி பட்டியையும் அழைத்துக் கொண்டு காடு, மலை ஆகியவற்றையெல்லாம் கடந்து ராஜபுரி என்ற நகரத்தை வந்தடைந்தனர். பட்டினத்தை ராஜசிம்மன் என்ற மன்னன் ஆட்சி புரிந்து வந்தான்.

ராஜபுரியில் அபரஞ்சி என்ற விலைமகள் வாழ்ந்து வந்தாள். அவள் மிகவும் அழகானவள். பல நாடுகளில் இருந்தும், நகரங்களில் இருந்தும் அபரஞ்சியைப் பார்ப்பதற்காக அவளுடைய வீட்டுக்கு எப்போதும் பலர் வந்த வண்ணமேயிருந்தனர்.



இதனால் அபரஞ்சி அதிக செல்வமும் சேர்த்திருந்தாள்.

அபரஞ்சி சின்னவளாக இருக்கும் போதே, ஒரு பிராமண இளைஞன் அவளுடன் சிநேகிதமாக இருந்து வந்தான்.

காலஞ் செல்லச் செல்ல அவர்கள் இருவரும் இணை பிரியாத நட்புடன் வாழ்ந்து வந்தனர்.

அந்த பிராமணனுடைய பெயர் அப்பாசி. அப்பாசிக்கு திடீரென்று நோய் கண்டு எவ்வளவோ மருத்துவம் பார்த்தும்கூட குணமாகாமல், சில நாட்களில் இறந்து போனான். அபரஞ்சியால் அப்பாசியின் மறைவைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. அப்பாசியின் பிணத்தைத் தூக்கிக் கொண்டு, ஊர் எல்லையிலுள்ள காளி கோயிலைச் சென்றடைந்தாள் அம்பாளை வணங்கி, எப்படியாவது தன் அன்பரின் உயிரை மீட்டுத் தருமாறு, அழுது புரண்டாள்.

காளிகாம்பாள் அவள் முன் தோன்றி "பெண்ணே, அபரஞ்சி மாண்ட உன் அன்பனை என்னால் உயிர்ப்பித்துத் தருவது முடியாத காரியம். ஆனால் இந்த நகரத்துக்கு விக்கிரமாதித்த மன்னனும் அவனுடைய மந்திரி பட்டியும் சாதாரண வணிகர்கள் போல் வேடம் புனைந்து இங்கு வருவார்கள். அவர்களுடன் நெருங்கிப் பழகி நன்மதிப்பைப் பெற்றால், உன்னுடைய விருப்பத்தை அவர்கள் நிறைவேற்றி வைப்பார்கள்?"

இதனைக் கேட்ட அபரஞ்சி அம்பாளை வணங்கிவிட்டு, பிணத்தை தன் வீட்டுக்கு கொண்டு வந்தாள். பலவிதமான தைலங்களையெல்லாம் பூசி, அப்பிணம் கெட்டுப் போகாமல் பதனப்படுத்தி வைத்துக் கொண்டாள்.

விக்கிரமாதித்தனும் பட்டியும் எப்போது வருவார்கள் என்று எதிர்பார்த்து கொண்டிருந்தாள்.

விக்கிரமாதித்தனும் பட்டியும் ராஜபுரி நகர் எல்லையை வந்தடைந்ததும் வேதாளத்திடம் தங்கள் உடைகளைக் கொடுத்துவிட்டு, செட்டிவேடம் புனைந்து நகரத்துக்குள் பிரவேசித்தனர்.

(மன்னன் வருவான்...)

---

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:................ பெயர்:...................... ஒப்பம்:................



**நோட்டீஸ்பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

-காதில பூ கந்தசாமி

அபிமான வாசகர் போட்டியில் எட்டாவது: ஒரு முட்டாளாய்த் திகழ்வதற்குரிய முதற் தகுதி என்ன? முடிவுத் திகதி செப்டெம்பர் 30.

யானைக்கும் அடிசறுக்குமெண்டு சொல்லுறது சரிதானுங்கோ. ஆனால் அடிக்கடி சறுக்கினால் அது யானையா எண்டதே சந்தேகமாயிடுமுங்கோ. எங்கட யானை எந்த அடியெடுத்து வைச்சாலும் சறுக்கி விழுந்து போகுதெண்டக்க, யானையில பிசகா யானைப்பாகனில பிசகா எண்டு கேள்வியாக் கிடக்குதுங்கோ. இந்தமுறை 'ஆட்சியப் பிடிச்சிடுவன்' எண்ட மாதிரி ஒரு பெரும் எடுப்பு எடுத்தவை, அதை நம்பி எங்கட தமிழ்க் கட்சிகளில ஒரு சிஞ்சாராக் கோஷ்டி முதுகில ஏறினவை. இப்ப சேர்ந்து விழுந்துபோயிருக்கினம். யானை விழுந்தால், அடியைத்தாங்க யானைக்குத் தெம்பிருக்கலாம். யானையில ஏறினவை விழுந்தால்...?

இப்பிடியான ஒரு கட்டத்தில இனியும் நான் பேசாமல் இருக்கக் கூடாதெண்டுட்டு வேட்டிய மடிச்சுக் கட்டிக்கொண்டு வெளிக்கிட்டன் பாருங்கோ பேட்டியெடுக்க, வெளிக்கிட்ட வீச்சுக்கு வழில முதல் கண்டது அனில் ஐயாவத்தான். அவரைப் பாத்துக் கேட்டன் "ஐயா, ஓட்டைக் கப்பலில ஏறமாட்டமெண்டியளே, இப்ப கப்பலே கைநழுவிப் போச்சுதே, என்ன செய்யப் போறியள்" எண்டன். "மொக்கத பிஸ்ஸ கத்தாக்கரன்னே...?" எண்டவர், என்னப் பாத்துச் சொன்னார், "ஓய் காதில பூ,, ஒழுங்காய் கேளும். கப்பலக் கவிழ்த்தாத்தான் என்ர கட்டுமரத்திலயாவது கொஞ்சப்பேர் ஏறுவாங்கள் எண்டு பாத்தன். ஆனால் இப்பிடி ஓட்டக் கப்பலுக்கு ஒட்டுப்போட வேற ஆக்கள் வருவினமெண்டு எனக்கெங்க தெரியும்? சரி சரி, ஒட்டு எத்தின நாள் நிக்குதெண்டு பாப்பமன் இருந்து."

"இருந்து பாக்கலாம்தான், ஆனால் உங்களோட சேந்து வந்தவையலெல்லாம், எழுந்து போயிடுவினமே..?"

(அனில் உணர்ச்சி பொங்கப் பாடுகிறார்) "போனால் போகட்டும் போடா, இந்த பதவியில் நிலையாய் வாழ்ந்தவராரடா. போனால் போகட்டும் போடா. போனால் போகட்டும் போ....டா!"

"இப்ப இந்த அரசாங்கத்துக்கும் ஜேவிபிக்கும் நடந்திருக்கிற உடன்பாட்டைப் பற்றி என்ன நினைக்கிறீங்கள்?"

"என்னத்தை நினைக்கிறது நான். என்ர வாயில மண்ணள்ளிப் போட்டுட்டாங்கள் எண்டத விட? ஓய் மிஸ்டர் காதில பூ. உதப் பேப்பரில போடாதையும். உமக்குத்தான் சொல்லுறன். இப்பிடிப் போடும் பேப்பரிலை. இது ஒரு உடன்படிக்கையா? இது நிலைக்குமா? இது நாட்டு மக்களுக்கு நன்மை கொடுக்குமா? இந்த உடன்படிக்கையால் மழை வருமா? மின்சார வெட்டு நிக்குமா? போர் ஓயுமா? சமாதானம் வருமா? ஜனநாயகம் மலருமா? பத்திரிகைச் சுதந்திரம் நிலைநாட்டப் படுமா? விலையேற்றம் குறையுமா? கிரிக்கட் மெட்சுகள் ஜெயிக்குமா? ரெயில் விபத்துக்கள் நிற்குமா? பிளேன் விழுவது ஓயுமா? பூமி அதிர்ச்சி தோன்றாதிருக்குமா? ஓய், காதிலபூ, நீரும் கொஞ்சம் கேள்விகள் சொல்லித் தாருமன், பாத்துக்கொண்டிருக்கிறீர்..."

"கலவரங்கள் நடக்காமலிருக்குமா, கடையெரிப்புகள் ஒழியுமா, கடை இடிப்புகள் நிற்குமா, பிக்கட்டிங்குகள் ஓயுமா, ஸ்ரைக்குகள் கைவிடப்படுமா, டாக்டர்கள் ஒழுங்கா வேலைக்குப் போவாங்களா, நேர்சுகள் சட்டப்படி வேலையை கைவிடுவாங்களா, யாழ்ப்பாணத்துக்கு எம்.ஓ.டி. கிளியரன்ஸ் கான்ஸலாகுமா, தரைவழிப் பாதை திறக்குமா, ஜி.எஸ்.டி வரி நீங்குமா....."

"வெரி குட், இப்பிடியே சொல்லிக்கொண்டு போனால் முடிவிருக்காது. எனவே ஆட்சி மாற்றப்படவேணும். இந்த ஜேவிபி பாராளுமன்றத்துக்கு வரக்கூடாதெண்டுதான் எங்கட தலைவர் ஜேஆர் அப்ப பாராளுமன்றத் தேர்தலையே ரத்துச்செய்தார். ஆனால் இந்த அம்மா அவையலிட்டையே ஆட்சிய அடமானம் வைக்கற ஒப்பந்தம் செய்திருக்கிறா. இது கிட்லரிஸம். ஜனநாயகத்துக்கு எதிரான சதித்திட்டம்."

"சரிதான் அனில் ஐயா, நீங்களும் ஆட்சியப் பிடிக்கிறதுக்கு ஜேவிபியோட பேச்சு நடத்திப் பாத்தனீங்கள் தானே?"

"அது ஆட்சியப் பிடிக்கிறதுக்கு. சரியாச் சொல்லுறதெண்டால் ஆட்சியக் கலைக்கிறதுக்கு குருவிக் கூட்டைப் பிரிச்செறிய குரங்கோடயும் ஒப்பந்தம் செய்யலாம். ஆனால் கூட்டில குடியிருக்க குரங்கை விடலாமோ?"

"அதுசரியுங்கோ, உங்கட நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்னவாப் போச்சு?"

"அது நம்பிக்கை இழந்து போச்சு! அட என்ன நினைப்பில என்னவோ சொல்லுறன். நம்பிக்கை இருக்குது. இன்னமொரு நாள் வரும். நாங்கள் திரும்பவும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நம்பிக் கை வைக்கத்தான் போறம். நம்பிக்கைத் துரோகிகள நம்பித்தான் நாங்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையே கொண்டந்தனாங்கள். ஆனால் அரசாங்கத்துக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வினமெண்டு நம்பியிருக்க, கடைசியில எங்களுக்கே நம்பிக்கைத் துரோகம் செய்திட்டினம். எப்பிடியெண்டாலும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில நாங்கள் நம்பிக்கை இழக்கேல்ல."

"உங்கட ஆட்சி வரப்போகுதெண்டு நம்பி உங்கட முதுகில ஏறின தமிழ்க் கட்சிகளுக்குக் கதியென்ன?"

"எங்கட முதுகில ஏறி எங்கட காதுக்கயே அங்குசம் விடப்பாக்கிறவைதான் அவையெண்டு எங்களுக்கு நல்லாத் தெரியும். அதால அவையிண்ட கதிக்கு அவையே பொறுப்பல்லாமல் நாங்களில்லை."

"நல்லது அனில் ஐயா, அடுத்த தடவையாவது உருப்படியான திட்டத்தோட வரும்படி வாழ்த்தி, 'தோல்வி நிலையென நினைத்தால்'... என்ற பாட்டைப் பாடி விடைபெற்றுக்கொள்ளுகிறேன், வணக்கம், ஆயுபோவன்!"


**யாவும் கலப்படமற்ற கற்பனை**

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)



3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு





SRI KALYANY JEWELLS
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு





தென் சீனாவிலுள்ள ஷங்காய் நகரின் அண்மித்ததாக புடொங் என்ற புதிய நகர வளாகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் நகர நிர்மாணத் திட்டங்களுள் இதுவே மிகப் பாரிய திட்டம் என்று வர்ணிக்கப்படுகிறது.

நான்பூ மற்றும் யாங்பூ என இரு பெரிய பாலங்களும், வளைந்து வளைந்து செல்லும் பாதைகளும், சர்வதேச விமான நிலையமொன்றும் ஏராளமான குடியிருப்புகளும் இத்திட்டத்தில் அடங்குகின்றன. 2010ம் ஆண்டளவில் இந்த நகர நிர்மாணத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுமென்றும் விவசாயத்திற்கேற்ற புறநகர்ப்பகுதிகளும் உருவாக்கப்படுமென்றும் தெரிய வருகிறது.




இயற்கை அழகைத் தன்னகத்தே ஒளித்து வைத்திருக்கும் இடமாகத் திகழ்கிறது தாய்லாந்துத் தலைநகர் பாங்கொக். பிரமாண்டமான புத்தர் சிலை, கிராண்ட் அரண்மனை, நகரை ஊடறுத்துச் செல்லும் கால்வாய் ஆகியவை நகரை அழகொளிமயமாக்குகின்றது.

இவற்றில் வெளிநாட்டிலிருந்து செல்லும் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுப்பது அங்குள்ள மிதக்கும் சந்தை. இங்கு ஓடும் கால்வாயில் படகுகளில் பழங்கள், மரக்கறிகள் என்று அத்தனை பொருட்களையும் பரப்பி வியாபாரம் செய்கிறார்கள். அதிகமாகப் பெண் வியாபாரிகள் தான் இந்த மிதக்கும் சந்தையில் இருக்கிறார்கள்.

நம்மூர்ச்சந்தைகளைப் போல் பேரம் பேசியே இங்கும் பொருட்களை வாங்குகிறார்கள். ஆனால் ஒன்று, இந்தச் சந்தைக்கு பொருட்கள் வாங்க வருபவர்களும் படகுகளில்தான் வரவேண்டும்.




பாரசீகக் குடாக்கடலில் நல்ல முத்துக்கள் விளையும் சிப்பிகள் கண்டெடுக்கப்படுகின்றன. ஒன்றுடன் ஒன்று ஒட்டப்பட்டது போன்ற அமைப்பைக் கொண்ட சிப்பிக்குள்ளே ஏதாவது தூசு அல்லது நன்னீர்த் துளி புகுந்துகொண்டால் சிப்பிக்குள் இருக்கும் சதைத்துகள்கள் சுரக்கும் ஒரு வகைத் திரவம் உள்ளே புகுந்துகொண்ட பதார்த்தத்தை மெல்ல மெல்ல மூடிக்கொள்ளும். இதுவே நாளாவட்டத்தில் சிறந்த முத்தாக உருவெடுக்கிறது. சிப்பிக்குள்ளிருந்து முத்தைப் பிரித்தெடுத்து விட்டு சிப்பியை தேவையற்ற பொருளாக எறிந்து விடுகிறார்கள்.

## 4வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி புஸ்பராசா பிரவீணா (லோபிஹா)**

**11.09.2001**

திருகோணமலையைச் சேர்ந்த புஸ்பராசா இந்திராணி தம்பதியின் செல்வப்புதல்வி பிரவீணா (லோபிஹா) இன்று தனது 4வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இவரை அன்பு அம்மா, அப்பா, தங்கை கிருத்திகா, அண்ணாமார் தனஞ்ஜன், நிமல், சரண், அப்பம்மாமார், அப்பப்பாமார், மாமாமார், மாமிமார், சித்தாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் அங்கிள்மார், ஆன்டிமார் ஆகியோரும்

கொழும்பைச் சேர்ந்த அம்மம்மா, குட்டிமாமா, அண்ணாமார், மாமாமார், மாமிமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்தி, சித்தா, அக்கா, மச்சான்மார், மச்சாள், அங்கிள்மார், ஆன்டிமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பிரவீணாவை பல்கலைகளும் கற்று பல்லாண்டுகாலம் துர்க்கை அம்மன் அருள் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றனர்.




உலகில் பல பாகங்களிலும் காணப்படும் காளான் வகைகளில் தலையில் அணியும் தொப்பியைப் போல் காணப்படும் இளமஞ்சள் நிறக் காளான் கொடிய விஷத்தன்மை கொண்டது. இதிலுள்ள பூஞ்சணம் 90 சதவீத நச்சுத்தன்மையுடையது.

இதே அளவிலும், வடிவிலும் காணப்படும் காளான்களில் ஒரு வகை நச்சுக் கொண்டது. இன்னொரு வகை உணவாக உட்கொள்ளக் கூடியது.

இவற்றில் எது நச்சுப் பூஞ்சணத்தைக் கொண்டது, எது நஞ்சற்றது என்பதை கண்டுபிடிப்பது கடினம். நச்சுத் தன்மை கொண்ட காளானை உட்கொண்டால் உடனடியாக வாந்தி பேதி ஏற்பட்டு ஆறு முதல் 15 மணி நேரத்துள் மரணம் சம்பவிக்கவும் கூடும்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து 31.08.2001



**அரவிந் ஜெயதேவன்**

காலெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களும் கனடாவில் வசிப்பவர்களுமான ஜெயதேவன் (தேவன்)-ஜானகி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அரவிந்த் தனது முதலாவது பிறந்த நாளை 01.09.01 அன்று சனிக்கிழமை டொரன்டோ விம்கோ மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவருக்கு கலைமகளின் அருளும் திருமகளின் கடாட்சமும் மலைமகளின் வீரமும் ஒருங்கே சேர்ந்து பாரினில் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்க என நெஞ்சம் நிறைய வாழ்த்துகின்றார்கள். அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பூட்டிமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், அண்ணா, அக்கா, மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள்.

தகவல் திரு. திருமதி ஜெயதேவன் (கனடா)



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் செப். 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.